
எலிகள் கேட்டுச் சொன்ன
குறள்க் கதைகள் – 04
P.Yalini

# எலிகள் கேட்டுச்சொன்ன குறள்க் கதைகள் - 04

**என்னுரை**

திருக்குறளுக்குப் பல்வேறு இலக்கிய வடிவங்களை நான் கொடுத்துள்ளேன். உரையைத் தவிர வேறு எதையும் கண்டிராத திருக்குறளுக்கு நான் பல இலக்கிய வடிவங்களை கொடுத்துள்ளேன். இப்போது திருக்குறளின் உரையளவிற்கு கதையெழுதியுள்ளேன். திருக்குறளின் உரையைக் கூடச் சாதாரண மக்களால் அறிந்து கொள்ள முடியாது. எனது இப்புதிய இலக்கிய வடிவத்தை எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். விளங்கிக் கொள்ள முடியாத இலக்கியங்கள் காலகதியில் மரணித்து விடுகின்றன. இது சங்க காலம் தொட்டு நடைமுறையில் உள்ளது.

இந்நூலில் ஆயிரத்து எண்பது குறள்களுக்கான கதைகள் உள்ளன. வாசித்து விட்டு விமர்சியுங்கள். இந்த நூலுக்கு அழகான அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்தும், கணனி மயப்படுத்தியும் தந்த ப.யாழினி அவர்களுக்கு நன்றி.

**தமிழறிஞர்**
**கே.வி.குணசேகரம்.**

**கூடா நட்பு– 83**

**821. சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை**
**நேரா நிரந்தவர் நட்பு**

‘‘கஜேந்திரன் கோவிலுக்கு வந்த போது நவராசா மனைவியோடு நின்றான். அவனைப் பார்த்ததும் கஜேந்திரனுக்குத் தனது மகளின் ஞாபகம் வந்தது,‘‘நர்மதாவின் தந்தை என்னைவிடக் குடிகாரன், தீயவன், கள்ளன். ஆனால் அவனது மகள் நல்ல இடத்தில் கரை சேர்ந்ததற்குக் காரணமாக இருந்தவன் நகுலன். நகுலன் மிகமிக நல்லவன். நண்பனுக்காக உயிரையும் கொடுக்கக் கூடியவன். நான் தீயவர்களுடன் சேர்ந்தமையால் அவர்களின் நட்பு எனது வாழ்க்கையைப் பாதித்ததோடு எனது மகளின் வாழ்வும் அழிந்து விட்டது. உருத்திரகுமாரன் நல்லவன் எனக்குதவி செய்கிறான் என்று நினைத்து நட்புப் பூண்டேன். எல்லாம் அழிந்து விட்டது. இனிவாழ்ந்து என்ன பயன். உருத்திரகுமாரனோடு சேர்ந்து பல பெண்களின் திருமணத்தைக் குழப்பியதால் வந்த வினை இது’’ என்று பற்குணத்திற்குச் சொல்லிக் கஜேந்திரன் கவலைப்பட்டவன்’’ என்றது குமரன் எலி.

‘‘கஜேந்திரனுக்கு எத்தனை பேர் புத்திமதி சொன்னவை. கேட்டவனே? உருத்திரகுமாரனின் கள்ளை நம்பி ஏமாந்தவன்’’ என்றது லட்சுமி எலி.

**822.இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்**
**மனம்போல வேறு படும்**

‘‘பற்குணம், நீயும் பல தடைவ உருத்திரகுமாரனோடு சேராதை. அது உனக்கு மட்டுமல்ல உனது குடும்பத்தையும் அழிக்கும். உருத்திரகுமாரன் விபச்சாரியைப் போன்றவன். அவனது மனதும் இரண்டாகவே எப்போதும் இருக்கும். விலைமகள் காசிற்கேற்படி இன்பம் தருவாள். ஆனால் உருத்திரகுமாரன் சந்தர்ப்பத்திற்கேற்ற மாதிரி நடந்து மற்றவர்களைக் கெடுப்பான். விபச்சாரியின் மனதிலும் ஈரம் இல்லை. எப்போதும் இருவரும் யார் அழிந்தாலும் தம் வேலையைக் கச்சிதமாக முடிப்பர் என்று சொன்னாய் நான் கேட்கவில்லை’’ என்று கஜேந்திரன் சொன்னவன்’’ என்றது குமரன் எலி.

‘‘பற்குணம் மிகச் சரியாகச் சொல்லியும் கேட்காது விட்டு விட்டு இப்போ அதை நினைத்துத் துன்பப்பட்டு என்ன பயன்?’’ என்று கேட்டது லட்சுமி எலி.

**823. பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லவர்**
**ஆகுதல் மாணார்க்கு அரிது.**

‘‘கஜேந்திரா, உருத்திரகுமாரன் நல்ல பல நூல்களைக் கற்றுத்தேர்ந்தவன். ஆனால் அப்படி நடப்பதில்லை. கல்வியால் அறிவு வரும். அந்த அறிவைப் பயன்படுத்தி நல்லவர்கள் நல்லதைச் செய்வார்கள். ஆனால் தீயவர்கள் நட்பின் பெருமையை உணராது தன்நலம் கருதியே பழகுவார்கள். உருத்திரகுமாரன் தான் செய்ய முடியாத தீயசெயல்களை உன்னைக் கொண்டும் ஏனைய சிலரைக் கொண்டும் செய்விக்கிறான். அதையறியாத நீ அவன் உயர்ந்தவனென்று நினைக்கிறாய். நாளைக்கு உனக்கொரு ஆபத்து வந்தால் உதவமாட்டான். அத்துடன் உன்னைக் கெடுக்கவும் தயங்கமாட்டான் என்று சொன்னாய். அது தான் உண்மையென்று நான் விளங்காது நீ சொன்னவற்றை அவனுக்குச் சொல்ல, அவன் உனக்குத் தீமைகள் பல செய்தவன்’’ என்று பற்குணத்திற்குக் கஜேந்திரன் சொன்னவன்’’ என்றது குமரன் எலி.

‘‘அவன் சாராயத்தைக் கொடுத்துத் தனது காரியத்தைச் சாதிப்பவனென்று இப்ப தான் பலருக்குப் புரிகறது’’ என்றது லட்சுமி எலி.

**824. முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா**
**வஞ்சரை அஞ்சப் படும்.**

“கஜேந்திரா, முகம்மலரச் சிரித்துப் பேசி, அதே நேரம் மனதில் வஞ்சனையைக் கொண்டவர்களோடு பழகாதே. உனது மகள் பட்டதாரி. நல்ல அழகி. இப்போ யாவும் பாழாகி விட்டது. இனி யோசித்து என்ன பயன். கறந்த பால் முலை ஏறுமா என்ன? இவ்வூரில் வாழ்ந்த பலர் பல தீயசெயல்களைச் செய்து ஊரவர்களால் ஒதுக்கப்பட்டவர்கள். பின் தவறை உணர்ந்து திருந்தியமையால் ஊரவர்களால் ஏற்கப்பட்டு இன்று நல்லபடி வாழ்கிறார்கள். இனியாவது தவறுகளை உணர்ந்து திருந்தி வாழ்” என்று பற்குணம் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“திருந்த உருத்திரகுமாரன் விடான். தனது திருகுதாளங்கள் அம்பலமாகிவிடும் என்பதற்காக அவன் எதுவும் செய்வான்” என்றது லட்சுமி எலி.

**825. மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்**
**சொல்லினால் தேறற்பாற் றன்று**

“உண்மை தான் பற்குணம். அவன் கெட்டவன், தனது காரியம் பார்ப்பவன் என்று தெரியும். ஆனால் அவன் தரும் மதுபானத்தைக் குடித்ததும் எல்லாவற்றையும் மறந்து விடுவேன். அதன் பின் அவன் ஏவும் செயல்களைச் செய்து முடிப்பேன். நானும் நாகராசாவும், நாவேந்தனும் இனிமேல் உருத்திரகுமாரன் கூறும் செயல்களைச் செய்யக்கூடாதென்று நினைப்போம். சிறிது நேரத்தில் சாராய ஆசை வந்து விடும். வந்தவுடன் எல்லாவற்றையும் மறந்து விடுவோம். இப்போ தான் அதன் தாற்பரியம் தெரிகிறது. இனிமேல் சேரமாட்டேன்” என்றவன்” என்றது குமரன் எலி.

“சிலருக்குச் சாராயத்தை நினைத்தாலே வெறிக்கும். பிறகு எப்படித்திருந்துவது” என்றது லட்சுமி எலி.

**826. நட்டார் போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்**
**ஒல்லை உணரப் படும்.**

“என்னைக் கொண்டு ஒரு செயலைச் செய்விக்க உருத்திரகுமாரன் எதையும் செய்வான். சாராயம் வாங்கித் தருவான். காசு தருவான். சாப்பாட்டுக் கடையில் சாப்பாடு வாங்கித் தருவான். அச்செயல் முடிந்ததும் அவன் அந்நியனாகி விடுவான். அதன் பின் ஒரு செயலைச் செய்யும் நேரம் வந்தால் தான் எமக்குதவுவான். சில சமயங்களில் நாம் எதிர்த்துப் பேசினால் எம்மைக் காட்டியும் கொடுத்து விடுவான். நடராசாவின் எருதை யாரோ திருடி விட்டார்கள். என்னில் உள்ள பகை காரணமாக அவன் நடராசாவைச் சந்தித்து,“காவல்துறையில் புகாரிடு. சந்தேகமானவர்களைக் கேட்டால் கஜேந்திரனைச் சாட்டு” என்று சொன்னவன். தனது காரியம் முடிந்தால் அவன் ஆராயாது எதையும் செய்வான்” என்று கஜேந்திரன் பற்குணத்திற்குக் கூறியவன்” என்றது குமரன் எலி.

“இதெல்லாம் தெரிந்தும் அவனோடு ஏன் பழகுகிறார்கள். ஏதோ நன்மை இருப்பதால் தானே” என்றது லட்சுமி எலி.

**827. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்**
**தீங்கு குறித்தமை யான்.**

‘‘பற்குணம், நீயல்ல கதிரேசனும், நமசிவாயகமும் என்னை உருத்திரகுமாரனோடு சேர வேண்டாம் என்று பல தடைவ சொன்னவை. நான் கேட்கவில்லை. கதிரேசன் ஒரு நாள் என்னைக் கண்டபடி பேசினவர்,‘‘கஜேந்திரா, உருத்திரகுமாரன் தனது நலன்கருதி உங்களைப் பயன்படுத்துகிறான். நவராசா நல்லவன். அவன் சனசமூக நிலையத்தின் தலைவன். சனசமூக நிலையத்தில் இயங்கும் பாலர் பாடசாலைக் கட்டிட நிதிக்காக நாடகம் நடத்திய போது உருத்திரகுமாரனுடன் பிரச்சினைப்பட்டவன். அதனால் அவன் உன்னை ஏவி விட நீ அவனுக்கு அடித்தாய். இது எந்த வகையில் நியாயம்? கஜேந்திரா வில்லின் வளைவு வணக்கத்தைக் குறிப்பதல்ல கொடுமையை தருவது. அது போல உருத்திரகுமாரனின் பணிவான பேச்சும் தீமையையே தரும். இதை ஒரு நேரத்தில் நீ புரிந்து கொள்வாய்’’ என்றவர். அதன் அர்த்தம் இப்போது தான் புரிகிறது’’ என்று சொன்னவன்’’ என்றது குமரன் எலி.

‘‘திரும்பத்திரும்ப எல்லோரும் சொன்னாலும் தீயவர்களின் வார்த்தை தான் சபையேறுகிறது’’ என்றது லட்சுமி எலி.

**828. தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து**

‘‘பற்குணம், உருத்திரகுமாரனை நம்பவே முடியாது. ஒரு செயலைச் செய்வதற்கு முன்பே சாராயத்தை வாங்கித் தருவான். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே வாங்கித் தரத் தொடங்குவான். பின் அன்புடன் கதைப்பான். சிரிப்பான். அவன் நாம் எதையும் செய்யாத போதும் சாராயத்தை வாங்கித் தருவதால் நாம் அவனைப் பற்றித் தவறாக நினைக்கமாட்டோம். தென்னந்தோப்பில் ஒரு வீடுள்ளது. அங்கு தான் சந்தித்துக் கதைப்போம். சிரித்துக் கதைப்போம். அவன் சிரித்துப் பேசினாலும் காரணமிருக்கும். வணங்கினால் கைக்குள் ஆயுதம் வைத்திருப்பான். அவனை நம்ப முடியாது’’ என்று கஜேந்திரன் சொன்னவன்’’ என்றது குமரன் எலி.

‘‘நெடுக அவனைப் பற்றிச் சொல்கிறார்களே தவிரச் சேராமலா இருக்கிறார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**829. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து**
**நட்பினுள் சாப்புல்லற் பாற்று.**

‘‘பற்குணம், வெளியே சிறந்த நண்பர் போல நடித்துக் கொண்டு வெளியில் இகழ்வாரை நாமும் அப்படிச் செய்தல் வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நான் அப்படிச் செய்தால் எனது மகளான காவியாவின் வாழ்வு பாழாகி விடும். உருத்திரகுமாரனின் மகன் எனது மகளைக் காதலிக்கிறாள். அதனால் பொறுமையாக உள்ளேன்’’ என்று கஜேந்திரன் அழுதவன்’’ என்றது குமரன் எலி.

‘‘காதலிப்பவன் நவராசா மாதிரி அவனாகக் கூட்டிச் செல்ல வேண்டும். ஆனால் உருத்திரகுமாரனின் மகன் காசாசை பிடித்தவன் அழைத்துச் செல்லமாட்டான். அவன் காமம் காரணமாக விரும்பியவன். அகப்பட்டு விட்டான்’’ என்றது லட்சுமி எலி.

**830. பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு**
**அகநட்பு ஒரிஇ விடல்**

‘‘பகைவர்கள் நண்பர்களாகும் காலம் வரும் போது முகத்தளவில் நட்புக் கொண்டு மனத்தால் விரும்பாது சந்தர்ப்பம் வரும் போது அதையும் விட்டு விட வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அப்படி உன்னால் செய்ய முடியாது. ஏனென்றால் உருத்திரகுமாரனின் மகன் அரவிந்தன் தகப்பனைப் போன்றவன். காசாசை மனதில் இருக்கு. அவன் பெற்றோரை வெறுத்து உனது மகளை அழைத்துச் சென்றால் நீ அவ்வாறு செய்யலாம்’’ என்று பற்குணம் கஜேந்திரனுக்குச் சொன்னவன்’’ என்றது குமரன் எலி.

“அது தான் உண்மை. படம், பூங்கா என்று அவளை அழைத்துச் செல்ல முயன்றவன். அது சரி வரவில்லை. அவள் சென்றிருந்தால் அழிந்திருப்பாள்” என்றது லட்சுமி எலி.

## பேதைமை– 84

**831. பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு**
**ஊதியம் போக விடல்**

“பண்டிதர் வீரகத்தியின் மூத்த சகோதரன் பண்டிதர் மயில்வாகனன். அவரது ஐந்து ஆண்பிள்ளைகள் வெளிநாட்டில் வசிப்பதால் பெரும் தனவந்தர் அவர். முரட்டுச் சுவாசம் உடையவர். திமிர்மிக்கவர். யாரையும் மதிக்காதவர். அவர் மிகுந்த கோபத்துடன் கோவிலுக்கு வந்த போது பண்டிதர் வீரகத்தி கதிரேசனுடனும், திருநாவுக்கரசனுடனும் கதைத்துக்கொண்டிருந்தார். அதை கவனிக்காதது போல மிகுந்த கோபத்துடன் மயில்வாகனம் சொன்னார்,“நீ என்னைக் கேட்காமல் எப்படித் திருமகளுக்குத் திருமணத்தை நிட்சயம் செய்தாய். அவன் ஒரு பிள்ளையின் தந்தை. இதை ஊரவர் மதிப்பார்களா..? எவ்வளவு மானக் கேடு தெரியுமா?” என்று கேட்டார். வீரகத்தி மிகவும் அமைதியாகப் பதில் சொன்னார்,“இத்திருமணத்திற்குத் திருமகள் சம்மதம் தெரிவித்தாள். எனக்கும் விருப்பம்” என்று கூறும் போது மயில் வாகனம் சொன்னார்,“ஊரே சிரிக்குது. மானம், வெட்கம், ரோசம் உனக்கிருக்கா” அதற்கும் வீரகத்தி மிகவும் அமைதியாகப் பதில் சொன்னார்,“இதில் வெட்கப்பட எதுவும் இல்லை. திருமண வயது கடந்தும் திருமணமாகாது இருக்கும் திருமகளை யாரும் இதுவரை கவனிக்கவில்லை. நான் இறந்தால் அவளது நிலை என்ன? மனைவி இறந்தால் கணவனையும், கணவனை இழந்தால் மனைவியையும் காப்பாற்றத் திருமணம் தேவை. ஊரவர் கெட்டவற்றைப் பிடித்து வைத்துக் கொண்டு நல்லவற்றை விட்டு விடும் பேதையர். அவர்களைப் பற்றி நான் கவலைப்படமாட்டன்” என்றவர்” என்றது குமரன் எலி.

“நாற்பது வயதில் நல்ல வாழ்வு கிடைத்துள்ளது. ஒரு பிள்ளை இருந்தாலென்ன. இந்த வயதில் திருமகளுக்குப் பிள்ளை பிறக்காவிட்டால் என்ன செய்வது. களவாகச் செல்பவர்கள் சாதி சமயம் அடுத்தவன் மனைவியென்றா பார்க்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

**832. பேதைமையுள்எல்லாம் பேதைமை காதன்மை**
**கையல்ல தன்கண் செயல்**

“அண்ணா, ஒழுக்கமில்லாத செயல்களில் ஈடுபடுவது தான் பெருங்குற்றம். அவர் அப்படி ஈடுபடவில்லையே. சரவணபவன் பாவம். மனைவி இறந்தமையால் பிள்ளையுடன் மிகவும் கஷ்டப்படுகிறான். திருமகள் துணையில்லாததால் வந்த பதவி உயர்வை விட்டு விட்டு முன்னைய தொழிலையே செய்கிறாள். கணவன் என்பவன் பெண்ணின் காவலன். அவளுக்குத் துணையாக இருப்பவன். சென்றவாரம் திருமகள் வேலைத்தளத்தில் மயங்கி விழுந்து பெருங்காயம் ஏற்பட்டது. அவளை வைத்தியசாலையில் சென்று பராமரிக்க யாரும் இல்லை. அத்துடன் நான் பரம ஏழை. இந்தச் சமூகம் பொருளின்மையால் பல பெண்களை வாழாவெட்டியாக்கியுள்ளது. அதனால் தான் நான் விரும்பினேன்” என்று வீரகத்தி சொன்னார்” என்றது குமரன் எலி.

“எல்லாரும் இலக்கணம், விதிமுறைகளோடு கதைப்பினை உதவி செய்யமாட்டினை. பின் தன்னைக் கேட்கவில்லை என்பினை. இது மனித இயல்பு” என்றது லட்சுமி எலி.

**833. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்**

**பேணாமை பேதை தொழில்**

“அண்ணா, தகாத செயல்களைச் செய்யத்தான் வெக்கப்படல் வேண்டும். தக்க செயல் எதுவென்று ஆராயாமல் இருப்பது, உறவுகளின் மீது அன்பு கொள்ளாமல் இருப்பது, காக்க வேண்டியவற்றைக் காக்காமல் விடுவது தான் அறிவற்றவர்களின் வெக்கக்கேடான செயல். ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்து கொடுப்பது தீயசெயலா? நாளைக்கு நான் இறந்தால், திருமகளுடன் வேலை செய்யும் ஒருவர் வந்து சிரித்துப் பேசினால் என்ன நடக்கும்? என்னையும் குறை சொல்வார்கள். சரவணபவன் பொறியியலாளர். நல்லவன். அது போதும் எனக்கு என்று வீரகத்தி சொன்னவர்” என்றது குமரன் எலி.

“ஒருவன் கதைத்தாலும் குற்றம் சிரித்தாலும் குற்றங்காணுறவை. இது பற்றியும் யோசிக்க வேண்டும்” என்றது லட்சுமி எலி.

**834. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
**பேதையின் பேதையார் இல்.**

“அண்ணா, உயர்ந்த நூல்களைக் கற்று அவற்றின் பொருளை நன்கு அறிந்து, பிறருக்கு அவற்றைக் கூறி வாழ்பவர்கள், அந்த உயர்ந்த கருத்துக்களைக் கைக்கொள்ளல் வேண்டும். கைக்கொள்ளாவிட்டால் அவர்கள் கற்றதன் பயன் என்ன? நான் படித்த நூல்களில் திருமணம் செய்த ஒரு ஆணைக் கன்னிப் பெண்ணிற்குத் திருமணம் செய்து வைக்கக் கூடாதென்று கூறப்படவில்லை. பெண்ணுக்கு வாழ்வு கொடு என்று தான் கூறப்பட்டுள்ளது. இதைக் கற்றவர் யார் பின்பற்றுகிறார்கள்” என்று வீரகத்தி சொன்னவர்” என்றது குமரன் எலி.

“விழுந்த பக்கம் குறி சுடுவோர் தமக்கேற்றபடி நூல்களிலிருந்து ஆதாரம் கூறுவார்கள். இயல்பு நிலையை உணரமாட்டார்கள்” என்றது லட்சுமி எலி.

**835. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான்புக்கு அழுந்தும் அளறு.**

“அண்ணா, ஏழு பிறவிகளிலும் அடைகின்ற துன்பங்களைப் பேதையான ஒருவன் தனது அறிவற்ற செயல்கள் மூலம் ஒரு பிறவியிலேயே அனுபவிப்பானாம். எனது இயலாமையால் பணம் தேடமுடியவில்லை. அதனால் நான் ஏழு பிறவிகளிலும் அனுபவிக்க வேண்டிய துன்பங்களை இப்பிறப்பில் அனுபவித்து விட்டேன். இப்போது தான் நிம்மதி. திருமகளின் வயது தான் அவனுக்கும். அதனால் வயதும் பொருந்தியுள்ளது. இப்போ நான் ஏழு பிறவிகளிலும் அனுபவிக்கும் இன்பத்தை அனுபவிக்கிறேன்” என்றவர்” என்றது குமரன் எலி.

“இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும். மயில்வாகனத்தின் மனைவி இறந்து ஐந்து வருடங்கள். பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டிலை. பணம் கொட்டிக்கிடக்கிறது. ஆனால் சாப்பாட்டுக்குத் திண்டாடுகிறார்” என்றது லட்சுமி எலி.

**836. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்**
**பேதை வினைமேற் கொளின்**

“அண்ணா, பேதை ஒருவன் ஒரு செயலை மேற்கொண்டால் அது முடிவடையாது. அத்துடன் அதனால் பெரும் துன்பங்கள் உண்டாகலாம். நான் பேதையல்ல. அத்துடன் அறிவுள்ள கதிரேசன், திருநாவுக்கரசு, நமசிவாயகம் ஆகிய ஒழுக்கமுள்ள பெரியவர்களின் ஆலோசனையுடனும், ஆசியுடனும் தான் செய்தேன். நீங்கள் பழைமைவாதி. பழைய சமயக் கொள்கைகளைப் பின்பற்றுபவர். சென்ற மாதம் கயல்விழியின்

கணவன் செல்விழுந்து இறந்தவன். அவளை மைத்துணனான அருளன் திருமணம் செய்த போது நீங்கள் அவர்களுடன் பிரச்சினைப்பட அவர்கள் உங்களை அடிக்காத குறையாகத் துரத்தியவர்கள். இளம் பெண்களுக்கு வாழ்க்கைத் துணை வேண்டும்'' என்றவர்'' என்றது குமரன் எலி.

''சமயம் சொல்லாத பலவற்றைச் சொல்கிறது என்கிறார்கள். எந்த நூலில் எந்தப் பக்கத்தில் அவை உள்ளன என்று சொல்வதில்லை. பிழைப்பு நடத்துகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**837. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை**
**பெருஞ்செல்வம் உற்றக் கடை**

''அண்ணா, என்னிடம் பணமில்லை. வரும் பெஞ்சனை எண்ணி எண்ணிச் செலவு செய்வேன். திருமகளின் வருமானத்தை நான் வாங்குவதில்லை. நான் சம்பாதித்துக் கொடுக்க வேண்டுமே தவிர அவளிடம் வாங்கக்கூடாது. ஆனால் அறிவில்லாதவனிடம் சேர்ந்த செல்வத்தால் உறவினர் பயனடைய மாட்டார்கள். அந்நியர் தான் பயனடைவர். இது ஏன் சொல்கிறேன் என்று உனக்குத் தெரியும்'' என்று வீரகத்தி சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''மயில்வாகனம் உறவினர்களை அண்டுவதில்லை. உருத்திரகுமாரனுக்குப் பல இலட்ச ரூபா வட்டிக்குக் கொடுத்தவர். முதலும் இல்லை, வட்டியும் இல்லை. கேட்கப்போனால் உனக்கு லைசன்ஸ் இருக்கா'' என்று கேட்டவனாம். இப்படிப் பல லட்சம் போயிட்டுது'' என்றது லட்சுமி எலி.

**838. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்**
**கையொன்று உடைமை பெறின்.**

''அண்ணா, அறிவற்றவனின் கையில் பணம் கிடைப்பது, ஏற்கனவே பித்தம் பிடித்தவன் கள்ளைக் குடித்து விட்டு உலகம் புரியாது தடுமாறுவது போன்றதாகும். உருத்திரகுமாரன் பலரிடம் பணம் பெற்று வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்பும் முகவர் ஒருவருக்குக் கொடுத்தவராம். அவன் ஏமாற்றி விட்டான். பணம் கொடுத்த நூறு பேர் கத்தி பொல்லுகளுடன் தேடித்திரிகிறார்களாம். கற்றாலும் அறிவில்லாத பேதைகள் பலர் வாழ்கிறார்கள்'' என்று வீரகத்தி சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''உருத்திரகுமாரன் என்றால் தடுமாறுபவன். பெருந்தொகையாகப் பணம் வருமென்றால் பித்தே பிடித்திருக்கும்'' என்றது லட்சுமி எலி.

**839. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்**
**பீழை தருவதுஒன்று இல்.**

''மயில்வாகனத்திற்கு வீரகத்தி தன்னைப் பற்றித் தான் அடுத்தவரைச் சாட்டாக வைத்துக் கூறுகிறார் என்று புரிந்தது. எனினும் அவரால் பேசமுடியவில்லை. அண்ணா, நீ உருத்திரகுமாரனோடு உறவு வைத்த போது நான் உன்னை வந்து ஏசிய போது சொன்னாய்,''பெரியவர்களுடன் நட்புப் பூண்டால் அவர்களை விட்டுப் பிரிவது மிகமிகத் துன்பமானது. உருத்திரகுமாரன் ஒரு பேதை. அவனோடு நட்புப்பூண்டால் பிரிவது சுலபம். துன்பமும் ஏற்படாது என்றீர்கள். இப்போ நீங்கள் உருத்திரகுமாரனைப் போலாகி விட்டீர்கள். அது தான் நான் உங்களுக்கு இது பற்றிச் சொல்லவில்லை'' என்று வீரகத்தி சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''தமையனை பேதையென்று கூறாமல் கூறியவர். பின் கூறிவிட்டார். இதையாரும் எதிர்பார்க்கவில்லை'' என்றது லட்சுமி எலி.

**840. கழாஅக்கால் பள்ளியள் வைத்தற்றால் சான்றோர்**
**குழா அத்துப் பேதை புகல்**

‘‘சில மாதங்களுக்கு முன்பு பண்டிதர் சபையில் மயில்வாகனம் அறிவற்றவனைப் போல வேற்றூர்ப் பண்டிதர் ஒருவரைத் தகாத வார்த்தைகளால் திட்டுவது போலப் பேசிக்கொண்டிருந்தார். பதிலுக்குப் பேசிய இன்னொரு பண்டிதர் அறிவுள்ள பண்டிதர் சபையில் ஒருவர் அசுத்தத்தை மிதித்த காலுடன் நுழைந்து விட்டார். பின்பு அவர் அக்காலுடன் பள்ளியறைக்குள்ளும் சென்று விட்டார் என்று பேசியதைக் கேட்டீர்கள் தானே. அப்படி அசுத்தத்தை மிதித்தவர் நீங்கள் தான். ஏன் அறிஞர்களுடன் வீணாக முரண்படுகிறீர்கள்’’ என்று நவராசா கேட்டவன்’’ என்றது குமரன் எலி.

‘சிலருக்கு அடித்தாலும் திருந்தமாட்டார்கள்’’ என்றது லட்சுமி எலி.

## புல்லறிவாண்மை– 85

**841. அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை**
**இன்மையா வையாது உலகு.**

‘‘நவராசா கோவிலடிக்கு வந்து நமசிவாயகத்திடம் சொல்ல நமசிவாயகம் பதறியடித்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றார். காண்டீபன் முற்றத்தில் இருந்தான். அவனைச் சுற்றிப் பலர் நின்றனர். நவராசா சொன்னான்,‘‘நன்றாகப் படித்து நல்ல உத்தியோகம் பார்க்கும் இவன் சேரக்கூடாதவர்களுடன் சேர்ந்ததால் கார்த்திகா இவனை விட்டுப் பிரிந்து சென்று விட்டாள். வேலையும் போய்விட்டது. இந்நிலையில் குடித்து விட்டு யாருடனோ சண்டைக்குப்போக அவன் பலமாக அடித்து விட்டான்’’ என்றான். அப்போது நமசிவாயகம் சொன்னார்,‘‘மனிதனுக்கு கல்வி முக்கியம். பணம் முக்கியம். நல்ல மனை, சுற்றத்தினர் முக்கியம். அவையெல்லாம் இருந்தபோதும் பகுத்தறிவு இல்லை. இல்லாமைக் கொடுமை பல. அவற்றுள் அறிவு இல்லாமையே மிகப்பெரிய கொடுமை. படித்த இவனுக்கு அறிவு எங்கே போனது’’ என்று அழுதார் நமசிவாயகம்’’ என்றது குமரன் எலி.

‘‘மனிதருக்கு எல்லாம் இருந்தாலும் ஆசை மிகுதியால் அறிவில்லாமல் போகிறது. அது மிகப்பெரிய கொடுமை’’ என்றது லட்சுமி எலி.

**842. அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்**
**இல்லை பெறுவான் தவம்.**

‘‘எத்தனை கனவுகளோடை இவனைக் கற்பித்தேன். நன்றாகக் கற்றவன். எப்படி இப்படி மாறினான் என்று என்னால் தீர்மானிக்க முடியவில்லை. இப்போ இவனால் எனது மானம் மரியாதை அத்தனையும் போய்விட்டது. நேற்று சிவகுருவிடம் நூறு ரூபா கேட்டிருக்கிறான். அவன் பாவம். கூலி வேலை செய்து பிழைப்பபவன். இவன் ஒரு போதும் தன்னைப் பணம் கேட்கவில்லை என்பதாலும் எனது அண்ணனின் மகன் என்பதாலும் கொடுத்திருக்கிறான். அறிவில்லாத பலர் எனக்காக இவனுக்குப் பணம் கொடுக்கின்றனர். அது இவனது அதிஷ்டமே தவிர வேறெதுவும் இல்லை. அப்படியானவர்களை நான் எச்சரித்து வருகிறேன்’’ என்றவர்’’ என்றது குமரன் எலி.

‘‘அறிவில்லாதவர்கள் தான் பாவம் பழிபார்ப்பவர்கள். அது இவனுக்கு வாய்ப்பாகி விட்டது’’ என்றது லட்சுமி எலி.

**843. அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை**
**செறுவார்க்கும் செய்தல் அரிது.**

“இவனை என்ன செய்வதென்றே தெரியவில்லை. கார்த்திகா இவனை விவாகரத்துச் செய்ய வக்கில் மூலம் மனுச்செய்துள்ளாள். படித்தும் அறிவில்லாத இவன் தனக்குத் தான் செய்யும் கொடுமைகள் பகைவர்களால் கூடச் செய்ய முடியாதவை. இப்போ யாரிடமோ அடி வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான். நேற்று வெறியில் நிதானமில்லாமல் தள்ளாடிய படி வந்த போது தெரு நாய் ஒன்று குரைக்க இவன் கல்லொன்றை எடுத்து அதைத்தாக்க அது நாலைந்து இடத்தில் கடித்து விட்டது. அந்நாய்க்கு விசர்த்தடுப்பு ஊசி போடாமையால் பட்டண வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றேன்’’ என்று கவலையுடன் நமசிவாயகம் கூறியவர்’’ என்றது குமரன் எலி.

“தனக்குத் தானே துன்பங்களைச் செய்வோர், தம்மால் பிறர்படும் துன்பத்தை எப்படி அறிவர்?’’ என்றது லட்சுமி எலி.

**844. வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை**
**உடையம்யாம் என்னும் செருக்கு.**

“இவனை நினைக்க எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. இவன் குடிக்கச் செல்லுமிடங்களில் தான் தான் பெரிய கல்வியாளன் என்றும், தன்னை விடப் படித்தவர்கள் யாரும் இல்லையென்றும் சொல்வான். அப்படிச் சொல்லும் போது பலர் கேலி செய்வர். “நீ படித்தாயா..? உன்ரை மேல் படிப்புத்தான் உன்னை தீயசெயல்களைச் செய்ய சொல்லுதா..? உன்ரை மனைவி உன்னைக் கலைத்தது உனக்கு அறிவு கூடியதனாலா..?’’ என்று கேட்கிறார்கள். இவற்றையெல்லாம் உணர முடியாத புல்லறிவாளனாக இவன் இருக்கிறான்’’ என்று நமசிவாயகம் கவலைப்பட்டவர்’’ என்றது குமரன் எலி.

“பாவம் அந்த மனிதன். சாகிற நேரத்திலை துன்பப்படுது. எல்லாம் வாழ்வினை’’ என்றது லட்சுமி எலி.

**845. கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற**
**வல்லதூஉம் ஐயம் தரும்.**

“குடிக்கிற இடத்திலை கருத்தரங்குகள், விவாதங்கள் மட்டுமல்ல சண்டைகளும் நடைபெறும். இவன் கற்றவன். தான் கற்ற கல்வியை எங்கே காட்ட வேண்டும் என்ற அறிவில்லாதவன். குடிக்க வரும் எல்லோரும் கல்லாதவர்கள் அல்ல. நன்றாகக் கற்றவர்களும் மனவிரத்தியால் குடிக்கின்றனர். இவன் தனது கல்வியைப் பற்றி உயர்வாகப் பேச அங்கிருந்த ஒருவர் அது பிழையென்று வாதிக்க அது கலகமாகிக் காவல்துறைக்குச் சென்று விட்டது. காவல்துறை அதிகாரி இருவரையும் எச்சரித்தவராம். கல்லாதவற்றைக் கற்றதாகக் கூறுவதும் தனது புலமையைத் தானே மெச்சுவதும் கேடுகெட்ட புல்லறிவாண்மை. இவனது நடத்தையும், பேச்சும் இவன் கற்ற கல்வியைச் சந்தேகப்பட வைக்கிறது’’ என்று நமசிவாயகம் கவலைப்பட்டவர்’’ என்றது குமரன் எலி.

“இப்போ கற்றவர்கள் கோவில்களில் தேவாரம் பாடும் போது பல பிழைகளை விடுகிறார்கள். ஒழுங்காகப் பாடுவோர் சிலர் தான்’’ என்றது லட்சுமி எலி.

**846. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்**
**குற்றம் மறையா வழி**

“ஒவ்வொரு வரும் குற்றமுள்ளவர்கள் தான். குற்றம் செய்யாதவர் உலகில் யாருமில்லை. ஆனால் தான் செய்த குற்றத்தை அறிந்து வருந்த வேண்டும். அதை மறைக்க வேண்டும். அப்படி மறைக்காதவர்கள் உடம்பில் மறைக்க வேண்டிய பகுதியை மட்டும் ஆடையால் மறைப்பவர்களைப் போன்றவர்கள். இவன் தான்

செய்யும் அடாவடித்தனங்களை மிகைப்படுத்திப் பலருக்குக் கூறி மகிழ்கிறான். இதனால் நான் பெருந்துன்பப்படுகிறேன் நவராசா'' என்று நமசிவாயகம் கூறியவர்'' என்றது குமரன் எலி.

''தாம் செய்பவற்றை மேடைகளிலும் பெரிதாகப் பலர் பேசுவர். தனது தந்தை, தந்தையின் தந்தை செய்த சிறுசெயல்களையும் பெரிதாகிப் பேசுவர். இது சிலரின் இயல்பு'' என்றது லட்சுமி எலி.

**847. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்**
**பெருமிறை தானே தனக்கு**

''மறைக்க வேண்டியவற்றை மறைக்கத் தெரியாத அறிவிலி அவன். இவனது கொடுமையைத் தாங்க முடியாத கார்த்திகா இவனைக் கண்டபடி பேசியிருக்கிறாள். இவன் அவளை அடிக்க அவளது சகோதரர்கள் இருவரும் இவனுக்கு அடித்திருக்கிறார்கள். இதை அவன் எல்லோருக்கும் சொல்லி அழுதுள்ளான். அத்துடன் அவளது நடத்தையும் சரியில்லையென்று கூறியிருக்கிறான். அக்கதை கார்த்திகாவின் கற்பைச் சந்தேகிக்க வைக்கிறது. அவளால் தான் இவன் கெட்டவன் என்று ஊர்ச்சனம் கதைக்குது. கற்றவன் ஆராயாது இப்படிப் பேசலாமா?'' என்று நமசிவாயகம் அழுதவர்'' என்றது குமரன் எலி.

''தன்ரை மனைவியைத் தானே குறை சொன்னால் சனம் என்ன சொல்லும்'' என்றது லட்சுமி எலி.

**848. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்**
**போஒம் அளவும்ஓர் நோய்**

''இவன் கற்றவன். கற்ற நீ இவ்வாறு நடக்கக்கூடாதென்று ஊர்ப்பெரியவர்கள் எல்லோரும் கூறினவர்கள். நான் எவ்வளவு புத்திமதி சொல்லியிருப்பேன். பிறர் கூறியும் கேட்கிறானில்லை, கற்ற அறிவைக் கொண்டும் உணர்கிறான் இல்லை. இவன் திருந்தமாட்டான். இது ஒரு வகை மனநோய். இறக்கும் வரை மாறாது'' என்று நமசிவாயகம் கவலைப்பட்டவர்'' என்றது குமரன் எலி.

''மனநோய்க்கு மருந்தெடுத்தால் சில சமயம் மாறும். இவனது அறிவின்மை என்ற நோய் ஒரு போதும் மாறாது'' என்றது லட்சுமி எலி.

**849. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்**
**கண்டானாம் தான்கண்ட வாறு**

''அதைக் கேட்டுக் கவலைப்பட்ட நவராசா சொன்னான், ''ஐயா, அவன் தான் பெரிய படிப்புப் படித்தவன் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு யாராவது புத்திமதி சொன்னால் அவன் சொல்பவர்களுக்கு உபதேசம் செய்கிறான். அதனால் யாரும் இப்போ அவனுக்குப் புத்திமதிகள் கூறுவதில்லை. அவனுக்குப் புத்திமதிகள் கூறுகின்றவன் அறிவில்லாதவன் என்று அவன் நினைக்கிறான். நல்லவற்றை உணர முடியாத அவன் தன்னளவில் பெரிய அறிவாளி'' என்றவன். நமசிவாயகம் எதுவும் பேசவில்லை'' என்றது குமரன் எலி.

''இப்போ எல்லோரும் அறிவாளிகள் என்று நினைத்துக் கெட்டழிகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**850. உலகத்தார் உண்டுஎன்பத இல்என்பான் வையத்து**
**அலகையா வைக்கப் படும்.**

''ஐயா, எல்லாம் முன்வினைப்பயன். நீங்கள் நான் அறிந்தவரை எந்தத் தவறும் செய்யவில்லை. மாறாகப் பல உதவிகள் தான் செய்துள்ளீர்கள். பாடசாலையில் நீங்கள் அமைத்த நீர்த்தாங்கி மூலம் தினமும் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் தாகம் தீர்க்கின்றனர். அப்படியிருக்க நீங்கள் துன்பப்படுவதை

என்னால் சகிக்க முடியவில்லை. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்று சொல்பவனை ஒரு போதும் திருத்த முடியாது. உலகோர் உண்டு என்று சொல்வதைக் காண்டீபன் இல்லையென்று சொல்லும் ஒரு கொடிய பேய். அவனைத் திருத்தவே முடியாது. அதனால் கவலைப்படுவதை விட்டு விடுங்கள்'' என்று நவராசா சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''உண்மை தான். அவர் கவலைப்பட்டுப்பட்டு உருக்குலைந்து போனார். பாவம் முன்வினை'' என்றது லட்சுமி எலி.

## இகல் - 86

**851. இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்**
**பண்புஇன்மை பாரிக்கும் நோய்**

''கார்த்திகா, காண்டீபவனைக் கோவிலில் கண்ட போது அதிர்ந்து போனாள். அவளது தோழி சுவேந்தினி சொன்னாள்,''முன்பு எப்படி இருந்தவன் இப்படி ஏன் மாறினான்? மனைவியான உனக்குத் தெரியாதா?'' என்று கேட்க கார்த்திகா சொன்னாள், ''எல்லோருடனும் சேர்ந்து வாழத் தெரியாதவர் அவர். அப்பாவுக்கு நண்பர்கள் அதிகம். அவர்கள் அடிக்கடி வருவார்கள். அப்பாவுடன் நீண்ட நேரம் பேசுவார்கள். என்னுடனும் பேசுவார்கள். இவர் அறையை விட்டு வெளியே வரமாட்டார். யாரும் பேசினாலும் கலகலப்பாகப் பேசமாட்டார். காதலிக்கும் போதும் இப்படித்தான். தனிமை தான் பிடிக்கும். எனது தோழிகள் ஜடத்தைக் காதலிக்கிறாய். பின் நாளில் துன்பப்படுவாய்'' என்றவர்கள். அதன் தார்பரியத்தை இப்போது தான் உணர்கிறேன். மாறுபாடு கொண்ட மனத்தை உடையவர். என்னை யாருடனும் பேசவிடமாட்டார். ஆறுமாதங்களுக்கு முன்பு எனது சகோதரனுக்குத் திருமணம் நடைபெற்றது. பெண்ணின் வீடு கொழும்பில். இவர் அங்கு செல்ல என்னை விடவில்லை. தானும் வரவில்லை. அதனால் தான் பிரச்சினை தொடங்கியது'' என்று கார்த்திகா சுவேந்தினிக்குச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''மாறுபாடு கொண்டு மறைந்திருப்பவர்கள் மனநோயாளிகள்'' என்றது லட்சுமி எலி.

**852. பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி**
**இன்னாசெய் யாமை தலை.**

''ஒருவன் கூடிவாழாத தன்மை உள்ளவனானால் அவனோடு மாறுபாடு கொள்ளாது வாழவேண்டும்'' என்று சுகந்தி சொல்லக் கார்த்திகா சொன்னாள், ''இனத்தவர், அயலவர், சுற்றத்தவர் என்றால் நீ சொல்வது சரி. இவர் எனது கணவர். இராப்பகலாகக் கூடியிருப்பவர். இருபத்து நான்கு மணி நேரமும் மற்றவர்களைப் பற்றிச் சொன்னால் அதைக் கேட்க முடியுமா..? இவர் சகோதரர்களின் வீட்டுக்கே செல்லமாட்டார். பல முறை சொன்னாலும் அது விளங்காது. அப்படியானவருடன் எப்படி வாழ்வது'' என்று அழுதவள்'' என்றது குமரன் எலி.

''மாறுபாடு என்பது மனநோய். மனநோய் வைத்தியரிடம் தான் ஆலோசனை கேட்க வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**853. இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்**
**தாவில் விளக்கம் தரும்.**

''இவர் எவ்வளவு கெட்டிக்காரன். இவரது அறிவைக் கண்டு தான் நான் மயங்கினேன். மேடையில் ஏறினால் எப்படிப் பேசுவார். முன்பு நடந்தவற்றை நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கு. இவர் மாறுமாடு என்ற கொடிய நோயை நீக்கி விட்டு எல்லோருடனும் கலகலப்பாகப் பேசி வாழ்ந்தாரேயானால் இவரை

வெல்ல யாராலும் முடியாது. அதைப் புரிந்து கொள்கிறாரில்லை'' என்று கார்த்திகா அழுதவள்'' என்றது குமரன் எலி.

''மாறுபாடு என்ற மனநோய் சந்தேகத்தை உண்டாக்கும். வீண் பிரச்சினைகளை உண்டாக்கும். இப்ப அதனால் தானே பிரிவு ஏற்பட்டது'' என்றது லட்சுமி எலி.

**854. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்.**

''எவ்வளவு பணம் இருக்கு, எவ்வளவு சொத்திருக்கு. வாழத்தெரியாமல் இருக்கிறார். இவர் உழைக்கத்தேவையில்லை. அப்பாவின் வியாபார நிலையத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இவர் அங்கு சென்றால் பல பிரச்சினைகள் உருவாகும். அதனால் தான் அப்பா எமக்கென ஒரு வசதியான நல்ல வீடு வாங்கித் தந்தவர். அதற்கும் கோபப்படுகிறார். சேர்ந்திருக்கவும் விரும்பவில்லை. தனியாக இருக்கவும் விருப்பம் இல்லை. நான் என்ன செய்வது?'' என்று கார்த்திகா அழுதாள்'' என்றது குமரன் எலி.

''பாவம் கார்த்திகா. நேரம் ஒரு கதை கதைப்பவனோடு எப்படி வாழ்வது?'' என்றது லட்சுமி எலி.

**855. இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே**
**மிகல்ஊக்கும் தன்மை யவர்**

''வேலைத் தலத்திலும் இவர் ஒருவருடனும் சேர்ந்து இருப்பதில்லை. இவரைக் கண்டதும் இவருடன் வேலை செய்வோர் எழுந்து சென்று விடுவர். அதுவும் இவருக்குப் பிடிக்காது. இவரோடு கதைப்பதனால் தீர ஆலோசித்துத் தான் கதைத்தல் வேண்டும். வாய் தவறி ஒரு மாறுபாடான சொல்வந்து விட்டால் அதற்கும் பல அர்த்தங்கள் கண்டுபிடித்து அவர்களுடன் சண்டைக்குப் போவார். திறமையானவன் தொழிலில் நிபுணன். ஆனால் மனிதரை மதிக்கத் தெரியாது. மதித்து நடந்தால் இவனை வெல்ல யாராலும் முடியாது'' என்று இவரது மேலதிகாரி சொன்னவர்'' என்று கார்த்திகா சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''வேலை எதுவும் தெரியாதவர்கள் சிரித்துக் கதைத்துச் சமாளித்துப் பேசி காரிய மாற்றுவர்'' என்றது லட்சுமி எலி.

**856. இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை**
**தவலும் கெடலும் நணித்து.**

''நடக்க வேண்டியவை நடந்த பின்பு தான் ஒவ்வொருவரும் காண்டீபனைப் பற்றிச் சொல்கிறார்கள். அதனால் என்ன பயன். காண்டீபனின் மேலதிகாரி எனது தந்தைக்கு மிகவும் வேண்டியவர். அவர் திருமணம் நடைபெற்ற பிறகு தான் சொன்னார். கேட்டதற்கு நீங்கள் தீரவிசாரியாமலா செய்தீர்கள். அதை விட அவர்கள் காதலித்தவர்கள். இப்போதைய காதலர் காதலின் போதே கூடியிருந்தும் விடுவர். அத்துடன் காண்டீபன் தான் பெரியவன். தனக்குக் கீழ் வேலை செய்பவர்களோடு மகிழ்வாகப் பேசினால் அவர்கள் வேலை செய்யமாட்டார்கள் என்று நினைப்பவன். அதனால் தான் அவன் மனிதரைப் புரிந்து கொள்ளாது இருக்கிறான். இந்நிலை வாழ்க்கைக்கு உதவாது. அழிவைத் தான் உண்டாக்கும் என்று கற்றவனுக்குப் புரியவில்லை'' என்றும் மேலதிகாரி சொன்னவர்'' என்று கார்த்திகா சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''காதலர்கள் எப்படித் தான் புனிதமாக இருந்தாலும் சனம் நம்பாது. ஒவ்வொருவரும் தம்மைப்போலத் தான் பிறரும் இருப்பார்கள் என்று நினைக்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

857. மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவினவர்.

“யாருடனும் பழகாது மாறுபாருடைய காண்டீபனுக்கு அறிவு இருக்கிறது. ஆனால் புத்தியில்லை. காண்டீபன் வேலையின் மீது வெறுப்பேற்படுவதற்கு ஒரு வழியில் மேலதிகாரி தான் காரணம். காண்டீபனுக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வை மேலதிகாரி கொடுக்காது இன்னொருவனுக்குக் கொடுத்து விட்டார். அவன் இவரை விட திறமையற்றவர். அறிவு குறைந்தவன். ஆனால் புத்திக் கூர்மை உடையவன். காண்டீபன் மேலதிகாரி எதைச் சொன்னாலும் அதை ஏற்கமாட்டார். அது பிழை இது பிழையென்பார். வெற்றிக்குக் காரணம் மேலதிகாரியோடு ஒத்துப்போதல். அதைக் காண்டீபன் உணர்வதே இல்லை. நான் கேட்டதற்கு முரண்பாடுடைய ஒருவரைப் பதவிக்கு நியமித்தால் அவர் மாறுபாடாகத் தான் நடந்து கொள்வார். இதனால் வேலை செய்ய முடியாத நிலையேற்படும் என்றவர்” என்று கார்திகா சுவேந்தினிக்குக் கூறியவள்” என்றது குமரன் எலி.

“உங்கை மாறுபாடான மனைவியை வைத்துக் கொண்டு குடும்பம் நடத்தேழாமல் பலர் தவிக்கின்றனர்” என்றது லட்சுமி எலி.

858. இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.

“இவருக்குக் கொடுக்க வேண்டிய பதவியைப் பெற்றவன் மேலதிகாரியின் மனைவியைப் புகழ்பவன். அவள் தான் அவனுக்கு அப்பதவியைக் கொடுக்கச் சொன்னவள் என்று அங்கு வேலை செய்யும் ஒருவர் சொன்னார், “மேலதிகாரிக்கோ, அவரது மனைவிக்கோ அடங்கி நடக்காது ஒற்றுமையாக இருந்தால் பதவி கிடைத்திருக்கும். வேலையை விட வேண்டியும் வந்திராது. இவர் இப்பவும் வீதிகளில் மேலதிகாரியையும் மனைவியையும் கூடாமல் சொல்லித் திரிகிறார்” என்று கார்த்திகா சொன்னவள்” என்றது குமரன் எலி.

“கல்விப் பகுதியில் ஓர் அதிகாரியின் மனைவியைச் சந்தித்தால் பதவி கிடைக்கும் என்று ருக்குமணி ரீச்சர் கோவிலடியில் அடிக்கடி சொல்லுறவர்” என்றது லட்சுமி எலி.

859. இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு

“சுகந்தினி, ஒருவன் தனக்கு நன்மை வரும் போது மாறுபாடு பற்றி எண்ணிப் பாராது மேலதிகாரியுடனும் சகஊழியர்களுடனும் ஒற்றுமையாக இருப்பான். இல்லாவிட்டால் ஒற்றுமையாக இருப்பது போல நடிப்பான். ஆனால் காண்டீபன் அப்படியல்ல. தனக்குக் கேடு வரும் போது மாறுபாட்டின் தன்மையை உணர்ந்து அதனை எதிர்த்து வெற்றி பெற நினைப்பவர்கள் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுவர். இவர் எல்லா வேளையிலும் ஒத்துப்போகாது தர்க்கிப்பதால் யாரும் இவரை விரும்புவதில்லை” என்று கார்த்திகா சொன்னவள்” என்றது குமரன் எலி.

“எப்போதும் விதண்டா வாதம் பேசிப் பழகியவர்களைத் திருத்த முடியாது” என்றது லட்சுமி எலி.

860. இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்
நன்னயம் என்னும் செருக்கு

“காண்டீபனுக்குப் பதவி உயர்வு வழங்காதது எவ்வளவு நன்மை தெரியுமா..? அவனுடன் ஒரு நிமிடம் வேலை செய்ய முடியாது” என்று இவரோடு வேலை செய்தவர்கள் எனக்குக் கூறினார். இவ்வளவு துன்பங்கள் வந்த போதும் இவர் கவலைப்படவில்லை. தன்னுடைய நிலையை உணரவில்லை. இன்று பதவி உயர்வு

பெற்றவன் மகிழ்வுடன் எல்லோருடனும் பழகி வருவதால் அவனை ஊழியர்கள் புகழ்கின்றனர். மேலதிகாரி நல்லவர். நீதியுடையவர். பக்கம் சாராதவர். உலகின் நிலையைப் புரிந்தவர் என்கிறார்கள்'' என்று கார்த்திகா அழுதாள்'' என்றது குமரன் எலி.

''பல ஆண்களின் திமிர்ப்போக்கால் பல குடும்பப் பெண்கள் பெருந்துன்பப்படுகின்றனர்'' என்றது லட்சுமி எலி.

## பகை மாட்சி - 87

**861. வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா**
**மெலியார்மேல் மேக பகை.**

''கதிரேசனைச் சந்தித்த நமசிவாயகம் சொன்னார், ''என்னுடைய வளர்ப்பு முறை பிழைத்து விட்டது. நான் கண்டீபனுக்கு வேண்டிய புத்திமதிகள் கூறித்தான் வளர்த்தேன். இப்போதும் கூறி வருகிறேன் கேட்கிறான் இல்லை. இன்று கார்த்திகா விவாகரத்துக்கோரிச் சட்டத்தரணி மூலம் பத்திரம் அனுப்பியுள்ளாள். அதைச் சமாதானமாகப் பேசித் தடுப்போம் வா என்று கேட்டேன் வருகிறான் இல்லை. தம்மை விட வலியவரோடு விரோதம் கொண்டு எதிர்த்தால் தீமைகள் தான் வரும். கார்த்திகாவின் தந்தை பெரும் பணக்காரன். நினைத்ததைச் செய்யக்கூடியவர். அத்துடன் இவனது மேலதிகாரியும் வலிமையானவர். அவர்களுடன் பகைக்காது சமாதானமாக வாழவேண்டும். எம்மை விடப்பலம் குறைந்தவர்கள் மீது பகை கொள்வதை விடாமல் மேற்கொள்ளல் வேண்டும் என்று காண்டீபனுக்குச் சொன்னேன் கேட்கிறானில்லை'' என்று கவலைப்பட்டவர்'' என்றது குமரன் எலி.

''கெடு குடி சொற்கேளாது என்று தெரியாமலா சொன்னார்கள்'' என்றது லட்சுமி எலி.

**862. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்**
**என்பரியும் ஏதிலான் துப்பு.**

''காண்டீபனின் போக்கைப் புரிந்து கொள்ள முடியவில்லை. கற்றவன் தனது அறிவிற்கேற்றபடி வாழவேண்டும். இவன் தறுதலையாக வாழ்கிறான். தன்னைச் சேர்த்தவர்களையும் மதிப்பதில்லை. பெரியவர்களின் சொல்லைக் கேட்பதில்லை. தனக்கெனத் துணையாக எவனையும் சேர்த்து வைத்திருக்கவில்லை. அத்துடன் தானும் வலிமையுடையவனாக இல்லை. அப்படியானவன் நான் இல்லாத காலத்தில் எப்படி வாழப்போகிறான். இவனுக்குச் சிறுபிள்ளைகள் கூட மதிப்புக் கொடுப்பதில்லை. அது தான் எனக்குப் பெரும் கவலையாக உள்ளது'' என்று கதிரேசனுக்கு நமசிவாயகம் கூறினவர்'' என்றது குமரன் எலி.

''பெற்றவர்களினதும், பெரியவர்களினதும் பேச்சை யார் கேட்கிறார்கள். அறளை அதனை பெயர்ந்து விட்டது என்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**863. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்**
**தஞ்சம் எளியன் பகைக்கு**

''நீ அவனுக்குப் புத்திமதி கூறி வளர்த்தாயே தவிரப் பலமுள்ளவனாக பயமில்லாதவனாக, உலகைப் புரிந்து கொள்ளக்கூடியவனாக வளர்க்கவில்லை. ஒருவன் அச்சம் உள்ளவனாகவும், நெஞ்சுறுதி இல்லாதவனாகவும், பிறரோடு சேராதவனாகவும், பிறருக்குக் கொடுத்துண்ணாதவனாகவும் இருந்தால் பகைவர் அவனை இலகுவாக வென்றுவிடுவார்கள். அவன் படிக்கும் போது ஏனைய மாணவர்களுடன் அவனைச்சேர நீ விடவில்லை. சகமாணவர்களோடு அவன் பிரச்சினைப்பட்டால் நீதியாகச் செயற்படாது அவனைக்

கட்டுப்படுத்தினாய். அவனைப் பிறமாணவர்களுடன் நீ சேரவிடாததால் அவனுக்குக் கொடுத்துதவும் பண்பு ஏற்படவில்லை. இது தான் அவனது பிரச்சினைக்குக் காரணம்'' என்று கதிரேசன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''முன்பு சாதி குறைந்த பிள்ளைகளைப் பல பாடசாலைகளில் சேர்ப்பதில்லை. அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்ற பின் எல்லாப் பிள்ளைகளும் சேர்க்கப்பட்டன. நமசிவாயகம் சாதிமான். அவனைக் கட்டுப்படுத்தினார். அதனால் அவனுக்கு நல்லது கெட்டது தெரியவில்லை'' என்றது லட்சுமி எலி.

**864. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்**
**யாங்கணும் யார்க்கும் எளிது.**

''நமசிவாயகம், ஒருவன் எதற்கெடுத்தாலும் கோபம் கொள்பவனாகவும், மனவுறுதி இல்லாதவனாகவும் இருந்தால் அவனை யாரும் எளிதாக வென்று விடுவார்கள். காண்டீபனுக்கு உறுதியான மனம் இல்லை. இருந்திருந்தால் கார்த்திகாவின் சகோதரர்களுடன் பிரச்சினைப்பட்ட போது தனி வீடு எடுத்து அவளை அழைத்துச் சென்றிருக்கலாம். அதைவிட எதற்கெடுத்தாலும் ஆராயாது கோபப்படுபவனுடன் யாரும் மகிழ்வாக வாழமாட்டார்கள். இது தான் அவனிலுள்ள குறை'' என்று கதிரேசன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''மனிதத் தன்மை இல்லாமல் மனைவியோடு பிரச்சினைப்படும் எவரும் நிம்மதியாக வாழமாட்டார்கள்'' என்றது லட்சுமி எலி.

**865. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்**
**பண்பிலன் பற்றார்க்கு இனிது.**

''கதிரேசன் காண்டீபனுக்குச் சொன்னார்,''மகனே, ஒருவன் நல்ல வழியில் செல்லாதவனாகவும், யாருக்கும் உதவிகள் செய்யாதவனாகவும், பழிக்கு அஞ்சாதவனாகவும், நற்பண்புகள் இல்லாதவனாகவும் வாழ்ந்தால் அவனை யாரும் விரும்பமாட்டார்கள். அவனுக்கு ஓர் ஆபத்து வந்தால் உதவவும் மாட்டார்கள். இப்படியானவர்களுக்கு எதிரிகள் அதிகமாக இருப்பார்கள். அவர்கள் இலகுவாக உன்னைத் தோற்கடித்து விடுவார்கள். பணபலமும், நல்ல தொழிலும், குணவதியான மனைவியும் நல்ல சுற்றமும் இருக்கும் நீ ஏன் கெட்டழிகிறாய்'' என்று கதிரேசன் காண்டீபனுக்குக் கூறியவர்'' என்றது குமரன் எலி.

''படித்தவருக்கு இதெல்லாம் தெரியாதா..? திரும்பத் திரும்பக் கூறினாலும் மூளையில் ஏறாது பாருங்கோ'' என்றது லட்சுமி எலி.

**866. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்**
**பேணா மை பேணப் படும்.**

''மகனே, ஒருவன் பொருளற்றவனாகவும், கோபக்காரனாகவும், அதிக ஆசை உள்ளவனாகவும் இருந்தால் தான் அவனது பகையை எதிரிகள் விரும்புவர். நீ அப்படி இல்லையே. நன்றாகக் கற்றனி. நல்ல தொழிலில் இருந்தனி. கோபப்படாது அடங்கி வாழ்ந்தனீ. ஆசைகள் அற்றவனாக வாழ்ந்தனி. இப்ப ஏன் குடும்பத்தவரினதும், மேலதிகாரிகளினதும் பகையைத் தேடினாய்? உனது மனைவி விவாகரத்துப் பெற விரும்புகிறாள். இது ஏன்? இது எமது பரம்பரையில் நடவாத ஒரு செயல்'' என்று கதிரேசன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''எல்லோரும் கேட்கிறார்களே தவிர அவன் சொல்லவில்லை. சொன்னாவாது பரிகாரம் தேடலாம்'' என்றது லட்சுமி எலி.

867. கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.

"மகனே, தனக்கு அருகில் இருந்து கொண்டே தனக்குத் தானே தீங்கு செய்பவனின் பகையைப் பொருள் கொடுத்தாவது பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பார்கள். நீ சேரும் அனைவரோடும் சேர்ந்திருக்கும் போது உனக்கு விரோதமான செயல்களையே செய்கிறாய். பலா் கூடியுள்ள இடத்தில் உனது மனைவியின் குடும்பத்தினரைக் கேலி செய்கிறாய். உன்னுடன் வேலை செய்யும் ஊழியா்களிடம் உனது மேலதிகாரிகளைப் பற்றித் தவறாகப் பேசுகிறாய். இது தவறானது என்று உனக்குப் புரியவில்லையா…? என்று கதிரேசன் கேட்டவா்" என்றது குமரன் எலி.

"தலைக்கு மேலே வெள்ளம் போயிட்டுது இனிச்சாண் என்ன? முழம் என்ன?" என்றது லட்சுமி எலி.

868. குணன் இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து.

"மகனே, ஒருவன் நல்ல குணங்கள் இல்லாதவனாகவும், தீயசெயல்களைச் செய்பவனாகவும் இருந்தால் அவனுக்கு நல்ல நண்பா்கள் இருக்கமாட்டாா்கள். துணையில்லாத அவனை எதிரிகள் இலகுவில் வென்று விடுவாா்கள். இன்று நீ அந்த நிலையில் தான் இருக்கிறாய். பலா் நமசிவாயகத்தின் முகத்திற்காக விலகிச் செல்கின்றனா். சிலா் உனது கொடுமைகளைத் தாங்காது உன்னைத் தாக்கி விட்டுப் பின் மனம் வருந்தி நமசிவாயகத்திடம் வந்து மன்னிப்புக்கோருகின்றனா். இது நல்லதல்ல" என்று கதிரேசன் கூறியவா்" என்றது குமரன் எலி.

"எது நல்லது எது கெட்டது என்று தெரியும் நிலையிலா அவன் வாழ்கிறான்" என்றது லட்சுமி எலி.

869. செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்

"மகனே, ஒருவன் அறிவற்றவனாகவும், பயந்த சுபாவம் உடையவனாகவும் இருந்தால் அவனை எதிா்ப்பவா்கள் இலகுவில் வென்று விடுவாா்கள். நீ அறிவுள்ளவன். ஆராய்ந்து நல்லவற்றைச் செய்ய வேண்டியவன். ஆனால் தேவையில்லாமல் பயந்து உனது வாழ்நாளை அழித்துள்ளாய். இது உனது குடும்பத்தவா்களுக்கு அவமானமல்லவா. இப்படி நீ செய்யலாமா..? அறிவற்ற கோளைகள் போலச் செயற்படாது உனது அறிவைப் பயன்படுத்தி நல்லபடி வாழப்பாா்" என்று கதிரேசன் சொன்னவா்" என்றது குமரன் எலி.

"எத்தனை பேர் இவ்வாறு சொல்லி விட்டாா்கள். அறிவுள்ளவனுக்குச் சொல்லத் தேவையில்லை. சில சமயம் அறிவில்லாதவனும் நல்லபடி வாழ்வான். இவன் திருந்தமாட்டான்" என்றது லட்சுமி எலி.

870. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லாது ஒளி.

"கல்வி கற்காதவனை வெற்றி கொல்வது எளிய செயல். அவனை விடக் கீழ்த்தரமாக நீ நடந்து கொள்கிறாய். நீ பட்டதாரி. நான் பாடசாலைக்கு வருடத்தில் சிலநாட்கள் தான் சென்றேன். அறிவு என்பது கல்வியில் இல்லை. மனத்தின் தன்மையைப் பொறுத்தது. பரம்பரையைப் பொறுத்தது. மிருகங்கள் பறவைகளுக்குக் கூடக் கல்வியைக் கற்பித்து மனிதரால் செய்ய முடியாத பல வேலையைச் செய்விக்கின்றனா். அப்படியிருக்க கற்ற உனது அறிவு ஏன் செயற்படவில்லை" என்று கதிரேசன் கேட்டவா்" என்றது குமரன் எலி.

“பல மனிதர்கள் தமது கல்வியறிவைக் கொண்டு பிறரையும், தம்மையும் ஏமாற்றுகின்றனர்” என்றது லட்சுமி எலி.

## பகைத்திறம் தெரிதல் - 88

**871. பகைஎன்னும் பண்பிலதனை ஒருவன்**
**நகையேயும் வேண்டற்பாற் றன்று.**

“நவராசா மிகுந்த கோபத்துடன் வந்து காண்டீபனுக்குச் சொன்னான்,“நீ ஏன் கோவிலுக்கு வந்த கார்த்திகாவுடன் சண்டைக்குப் போனனி. அவள் வீட்டுக்குச் சென்று அழ அவளது சகோதரர்களான திருமாறனும், விவேகாந்தனும் கத்தியோடு புறப்பட்டு வந்தவர்கள் வழியில் கதிரேசன் கண்டு புத்திமதி கூறித் திருப்பி அனுப்பினவர். உனக்கு விருப்பமில்லையென்று அவளை விட்ட பிறகு அவளோடு ஏன் பிரச்சினைக்குப் போகிறாய். பகை என்று சொல்லப்படுகின்ற பண்பற்ற தீயசெயலை ஒருவன் விளையாட்டாகக் கூட விரும்பக் கூடாது. கவனமாக இரு. இதற்குப் பாடங் கற்பித்தே தீருவதென்று சொல்லிச் சென்றுள்ளனர்” என்று நவராசா சொன்னவன்” என்றது குமரன் எலி.

“அவரைத் திருத்த உது தான் வழி. விட்டால் தினமும் இதே பிரச்சினை தொடரும்” என்றது லட்சுமி எலி.

**872. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்வேன் உழவர் பகை.**

“காண்டீபா, போர் வீரர்களோடு சண்டையிடலாம். அது பின் சமாதானத்திலும் முடிவடையும். விவேகானந்தன் பெரிய உத்தியோகத்தில் இருப்பவன். அறிஞன். அவன் நினைத்தால் உன்னை இலகுவாகச் சிறைக்கும் அனுப்பலாம். மாவட்ட அரச அதிபராக அவன் கடமையாற்றுகிறான் என்பதை நினைவில் வைத்துக்கொள். அப்படி இருந்தும் உனக்குத்தான் அடிக்கவேண்டுமென்று வந்தவன். தனக்குப் பிரச்சினையாக நீ இருக்கிறாய் என்று காவல்துறை அதிகாரிக்குச் சொன்னால் உனது நிலை என்னாகும்?” என்று நவராசா சொன்னவன்” என்றது குமரன் எலி.

“யார் எதைச் சொன்னாலும் குடும்பத்தை விட்டவனுக்கு ஏறாது. நாலு அடிபோட்டால் தான் சரி” என்றது லட்சுமி எலி.

**873. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்**
**பல்லார் பகைகொள் பவன்.**

“டேய், உனக்கு யார் துணைக்கு வரப்போகிறார்கள்? நமசிவாயகம் உன்னைக் கைவிட்டு விட்டதாகச் சொன்னவர். ஊரவர் எவரும் வரமாட்டார்கள். நானும் வரமாட்டான். ஏனென்றால் நீ செய்வதெல்லாம் மகா தவறு. உன்னை நம்பித் தன் பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக அவள் உன்னைத திருமணம் செய்தவள். பூப்போல வைத்திருக்க வேண்டியவளை கசக்கிப் பிழிந்து விட்டாய். அத்துடன் தனியாக இருந்து கொண்டு பலம் மிக்கவர்களைப் பகைக்காதே” என்று நவராசா சொன்னவனன்” என்றது குமரன் எலி.

“அவன் காலமையே குடிச்சிடுவன். நவராசா வந்தது, சொன்னது அவனுக்குத் தெரியுமோ தெரியாது” என்றது லட்சுமி எலி.

**874. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்**
**தகைமைக்கண் தங்கிற்று உலகு.**

“நீ ஏன் கார்த்திகாவை வெறுக்கிறாய். உனது சொல்லைக் கேட்கிறாளில்லையா? உன்னோடு சண்டைக்கு வருகிறாளா? இல்லை யாருடனாவது கள்ள உறவு வைத்துள்ளாளா..? இவை தான் ஒரு மனைவியை வெறுக்கக் காரணங்கள். மற்றவையெல்லாம் பேசித்தீர்க்கக் கூடியன. பகைவரையும் நண்பனாக்கி அவனோடு அன்புடன் பழகுபவர்களது பெருந்தன்மையை உலகம் மெச்சும் என்பார்கள். உனது மனைவி உனக்குப் பகையாளியா? அவளது குடும்பம் உனக்குப் பகைவர்களா..?” என்று நவராசா கேட்டவன்” என்றது குமரன் எலி.

“வேண்டாப் பெண்டாட்டி எதைச் செய்தாலும் குற்றம்” என்றது லட்சுமி எலி.

**875. தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்**
**இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.**

“ஒருவனுக்கு இரண்டு பகைவர்கள் இருந்தால் அவர்களுள் ஒருவனைத் தனது நல்ல நண்பனாக்கிக் கொள்வதே புத்திசாலித்தனம். உனக்கு கார்த்திகாவும் பகை அவளது குடும்பத்தினரும் பகை. இதில் கார்த்திகாவின் பகையை நீக்கி அவளை அன்புள்ளவளாக மாற்றினால் உனது வாழ்வு சிறக்கும். அவளது குடும்பத்தினர் தமது பிள்ளை மகிழ்வுடன் வாழ்கிறது என்று நினைத்து உங்கள் விடயங்களில் தலையிடார். நீ இருவரையும் பகைத்தால் இருவரும் ஒன்று சேர்ந்து உன்னைத் தாக்குவர்” என்று நவராசா சொன்னவன்” என்றது குமரன் எலி.

“அது தான் நடக்கப்போகுது. இருபகுதியும் சேர்ந்தால் விவாகரத்துத் தான்” என்றது லட்சுமி எலி.

**876. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்**
**தேறான் பகாஅன் விடல்.**

“நீ காதலித்துத் திருமணம் செய்தனி. முன்பே அவளைப் பற்றி ஆராய்ந்து முடிவெடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டாலும் பிரச்சினைகள் குடும்பத்தில் வந்தால் நடுவு நிலையில் நின்று முடிவெடுக்க வேண்டும். கோபப்பட்டு எடுக்கும் முடிவும், ஆராயாமல் எடுக்கும் முடிவும் பெரும் துன்பங்களைத் தான் தரும். ஊரில் பெரியவர்கள் இருக்கிறார்கள். ஊரவர்கள் எல்லோரும் அவர்கள் சொல்வதைக் கேட்கிறார்கள். நீ கேளாததால் அவர்கள் உன்னை வெறுக்கின்றனர். இது ஆரோக்கியமானதல்ல” என்று நவராசா சொன்னவன்” என்றது குமரன் எலி.

“எல்லோரையும் வெறுத்து விட்டு உவர் என்ன செய்யப்போகிறார். கெடு குடி சொற்கேளாது” என்றது லட்சுமி எலி.

**877. நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க**
**மென்மை பகைவ ரகத்து.**

“கற்காத ஒருவனுக்குத் தான் புத்திமதிகள் கூறவேண்டும். தனக்கு வரும் துன்பத்தைத் தானாகவே அறிந்து கொள்ள முடியாதவனுக்குப் புத்திமதிகள் ஒரு போதும் சொல்லக்கூடாது. நீ எனது நண்பன். இரவு பகலாகக் குடித்து விட்டு அறிவில்லாமல் இருக்கிறாய் என்பதற்காகச் சொன்னேன். நீ உனது எதிரிகளை பலவீனர்களாக நினைக்கக் கூடாது. கார்த்திகா பெண் தானே. அவளை ஏமாற்றலாம் என்று நீ நினைக்கிறாய். அது தவறு. சாதாரணமான பெண் கோபப்பட்டால் கண்ணகி யாகவும் மாறுவாள்” என்று நவராசா சொன்னவன்” என்றது குமரன் எலி.

“கார்த்திகா நல்ல பெண். நெடுக இவர் அடிக்க அவள் பொறுப்பாளே. அன்றைக்குக் கோவிலடியில் அடிக்க அவள் அவருக்கு நல்ல அடி கொடுத்தாள்” என்றது லட்சுமி எலி.

878. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு

''ஒருவன் தனது கடமைகளை உணர்ந்து தனது குறைபாடுகளையும் உணர்ந்து தன்னை வலிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். நீ வலிமையானவன் என்று நினைப்பதை விட எதிரி வலிமையானவன் என நினைப்பவனால் தான் பகையை வெல்ல முடியும். கணவனும், மனைவியும் பகைவர்கள் அல்ல. நல்ல நண்பர்கள் என்ற நிலை இருவரது மனதிலும் உண்டாக வேண்டும். அன்பாகப் பேசி, பண்பாக நடந்தால் வாழ்வில் பகை ஏற்பட வாய்ப்பே இல்லை'' என்று நவராசா சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''காதலிக்கும் போது காமமோகத்தில் தான் நவராசா சொன்னது நடக்கும். கல்யாணமானால் பெண் தனது அடிமை என்ற நிலை தான் உருவாகும்'' என்றது லட்சுமி எலி.

879. இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

''காண்டீயா, முட்செடியையும் குடும்பப் பகையையும் முளையிலேயே அகற்றி விட வேண்டும். இல்லாவிட்டால் விபரீதமான பல துன்பங்கள் வந்து கொண்டே இருக்கும். உனது மனைவி நல்லவள், வல்லவள், அன்பானவள், உன்மீது உயிரையே வைத்திருக்கிறாள் என்று நினை. அந்த நினைவு உன்னை அந்த நிலைக்குக் கொண்டு வரும். எனது மனைவி மிகமிக ஏழை. நான் அவள் பெரும் பணக்காரி என்று நினைக்கிறேன். அதனால் மனதில் உற்சாகமும் சுறுசுறுப்பும் உள்ளது. அதனால் எனது வியாபாரம் பெருகுகிறது. நினைவு தான் கனவு. கனவு தான் வாழ்க்கை'' என்று நவராசா சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''ஓ இவர் காதலிக்கும் போது எத்தனை புழுகு புழுகினவர். இப்ப..'' என்றது லட்சுமி எலி.

880. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

''பகைவரின் தலையை அழிக்கக் கூடிய வலு இருந்தும் அதையழிக்காது இருப்பவன் உயிரோடு இருக்கும் பிணம்'' என்று விவேகானந்தன் கதிரேசனுக்குக் கூறினவனாம். அவர்கள் பெரும் பணக்காரர்கள். ஒரே ஒரு பெண் பிளைப் பிள்ளை. அதுவும் திருமணம் செய்த நாளிலிருந்து துன்பப்பட்டால் அவர்களால் எப்படித் தாங்க முடியும். குடும்பத்தில் பகை வந்தால் அது உடன் தீரவே வேண்டும். இல்லாவிட்டால் அது வளர்ந்து பெரும் பிரச்சினைகளை உருவாக்கும். அதனால் பெரியவர்களிடம் சென்று உனது பிரச்சினையைக் கூறிச் சமாதானமாகு'' என்றவன்'' என்றது குமரன் எலி.

''உண்மை தான். அவர்கள் பெரும் பணக்காரர். எதையும் செய்வார்கள். ஆனால் பொறுமையாக இருக்கிறார்கள். இது எத்தனை நாட்களுக்கு'' என்றது லட்சுமி எலி.

## உட்பகை - 89

881. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்

''நமசிவாயகம் மிகுந்த கவலையோடு வந்து கதிரேசனுக்குச் சொன்னார், ''எனது மனைவியின் தம்பி நவரத்தினம் தனது மகளைக் காண்டீபனுக்குத் திருமணம் செய்ய விரும்பினவன். நான் விரும்பவில்லை. அவன் பெருங்குடிகாரன் தொழில் இல்லாதவன். அவன் நான் மாட்டன் என்று சொன்னன்றே என்னோடு

பிரச்சினைப்பட்டவன். இப்ப அவன் கார்த்திகாவின் தந்தை கணபதீஸ்வரனுடன் திரிகிறான். அவன் தான் நடக்கும் சம்பவங்களுக்கெல்லாம் காரணகர்த்தாவாக இருப்பான் என்று சந்தேகிக்கிறேன். இப்போ அவன் என்னைக் கண்டால் கேலி பண்ணிச் சிரிக்கிறான். இனிமை தரும் நீரும், நிழலும் நோய் தருமானால் அவை தீயவையே யாகும். அது போலச் சுற்றத்தவர்களின் செயல்களும் துன்பம் தருமானால் அவையும் தீயவையே யாகும்'' என்று கவலையுடன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''நவரத்தினம் செய்யக்கூடிய ஆள். முன்பு காண்டீபன் உருத்திரகுமாரனோடு சேர்ந்திருக்கும் போது சாராயம் வாங்கிக் கொடுப்பவன்'' என்றது லட்சுமி எலி.

**882. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்**
**இன்னாவாம் இன்னா செயின்**

''அப்படித் தான் நானும் நினைக்கிறேன். நவரத்தினத்திற்கு உன்மீது ஆத்திரம் இருக்கிறது என்பது அவனது பேச்சில் இருந்து தெரிகிறது. வாளைப் போல கண்ணுக்குத் தெரிந்த பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் உறவினர் போல உடனிருந்து வெளிப்படாமல் நடிக்கும் பகைவருக்கு அஞ்சியே தீரவேண்டும். நவரத்தினம் கேலி பண்ணிக் கதைப்பதாகத் தான் பலரும் எண்ணுவார்கள். ஆனால் அக்கதைகளுக்கும் ஓர் அர்த்தம் இருக்கும் என்று எனது அனுபவத்தில் உணர்ந்துள்ளேன்'' என்று நமசிவாயகத்திற்கு கதிரேசன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''ஓம். சனம் நவரத்தினத்தை நம்புவதில்லை. அவன் இரட்டை அர்த்தத்தில் தான் எப்போதும் கதைப்பான்'' என்றது லட்சுமி எலி.

**883. உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து**
**மட்பகையின் மாணத் தெறும்.**

''நமசிவாயகம் உட்பகைக்கு ஒருவன் அஞ்சியே தீரவேண்டும். ஏனென்றால் உட்பகை உள்ளவன் தன்னை ஒரு போதும் வெளிக்காட்டிக் கொள்ளாது இரகசியமாகச் செயலாற்றுவான். கோவிலில் பல பிரச்சினைகளை அவன் தான் மற்றவர்களைக் கொண்டு தொடக்கி விட்டு இருபக்கமும் சார்ந்து செயலாற்றுபவன். உட்பகை உள்ளவன் சந்தர்ப்பம் ஏற்படும் போது மண் பாத்திரத்தை அறுக்கும் கருவியைப் போலச் செயற்படுவான்'' என்று கதிரேசன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''அவன் பொல்லாதவன். மணியத்தின்ரை மகளுக்கு வலிப்பு வருவதாக ஒரு வதந்தியைக் கிளப்பியதால் கலியாணம் குழம்பியது. அதற்குக் காரணம் இவன் என்று தான் சனம் கதைத்தது'' என்றது லட்சுமி எலி.

**884. மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா**
**ஏதம் பலவும் தரும்.**

''நமசிவாயகம் உட்பகை என்பது என்ன காரணத்திற்காக ஒருவனுக்கு வந்ததென்று அவன் தான் சொல்லுதல் வேண்டும். சிலருக்குப் பார்வை பிடியாது. சிலருக்குப் பேச்சுப் பிடிக்காது. சிலருக்குச் செயல்கள் பிடிக்காது. மனதுக்குள் வைத்துக் கறுவித் தனது வன்மத்தைத் தீர்ப்பா். அதனால் அவன் உறவினர்களையும், நண்பர்களையும் விரோதியாக்குவான். துணையாக இருப்போரைப் பிரிப்பான். அதனால் உண்மையை அறிந்து அது பற்றிக் கணபதீஸ்வரனுக்குச் சொல்லுதல் வேண்டும்'' என்றவர்'' என்றது குமரன் எலி.

''நவரத்தினத்துடன் உருத்திரகுமாரனும் சேர்ந்தால் பேசத்தேவையில்லை'' என்றது லட்சுமி எலி.

**885. உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்**
**ஏதம் பலவும் தரும்.**

“நமசிவாயகம், நெருங்கிய உறவினர்களுக்கிடையில் உட்பகை ஏற்படுமானால், அது அவனது உயிரை அழிக்கக் கூடிய பல குற்றங்களை உருவாக்கும். இப்போது காண்டீபனின் நிலையைப் பார்த்தாயா..? படிக்கும் போது அடுத்தவர்களுக்கு உதவியவனைக் கண்டு இப்போது எல்லோரும் விலகி ஓடுகிறார்கள். அவன் ஒரு மனநோயாளியைப் போலச் செயற்படுகிறான். இது உயிரை அழிக்கின்ற நிலைக்கும் தள்ளும். அதனால் நாம் சென்று கணபதீஸ்வரனுடன் பேச வேண்டும்'' என்று கதிரேசன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

“இப்பவே அவனது வாழ்க்கை அழிந்து விட்டது. இனி அழிய என்ன இருக்கிறது?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**886. ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்**
**பொன்றாமை ஒன்றல் அரிது.**

“நமசிவாயகம், ஒருவனுக்கு அவனது உறவினர்களிடத்துப் பகை ஏற்பட்டால் அவனது கல்வி, தொழில், குடும்ப வாழ்க்கை யாவும் பாதிக்கப்படும். இப்போ காண்டீபனின் மனைவி பெற்றோர், சகோதரர்கள் எல்லோரும் மூர்க்கத்தனமாக எதிர்க்கின்றவர். அதனால் காண்டீபனின் வாழ்வு அழிந்து விட்டது. இதைக் காண்டீபனால் உணரமுடியவில்லை. அதோடு உணர்த்தக் கூடிய நிலையிலும் அவன் இல்லை. அது போலக் கார்த்திகாவுக்கோ அவளது குடும்பத்தினருக்கோ உணர்த்த முடியாது. அது கவலையைத் தருகிறது'' என்று கதிரேசன் கூறியவர்'' என்றது குமரன் எலி.

“யார் கவலைப்பட்டென்ன? உரியவர்கள் உணரும் வரை யாரையும் திருத்தவோ குறை சொல்லவோ முடியாது'' என்றது லட்சுமி எலி.

**887. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே**
**உட்பகை உற்ற குடி**

“நமசிவாயகம் செப்பின் கலப்புப் போல புறத்தே கூடியிருந்தாலும் உட்பகை உள்ளவர்கள் மனத்தினால் ஒன்றுபட்டு இருக்கமாட்டார்கள். நாம் சென்று கார்த்திகாவுடனும் அவளது உறவினர்களுடனும் கதைத்தால் மகிழ்வுடன் கதைக்கிறார்கள். அன்பாக வரவேற்கிறார்கள். சொல்வதைக் கேட்கிறார்கள். ஆனால் செயற்படுவதில்லை. செயற்பட யாருக்கும் விருப்பம் இல்லை. இந்த நிலை மிகவும் மோசமானது. இதை எப்படிச் சரி செய்வது என்று தெரியவில்லை'' என்றவர் கதிரேசன்'' என்றது குமரன் எலி.

“சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்தது போலத் தான் இருக்கிறது'' என்றது லட்சுமி எலி.

**888. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது**
**உட்பகை உற்ற குடி.**

“எனக்குப் புரியுது கதிரேசு. உட்பகை என்பது அரத்தினால் தேய்க்கப்படும் இரும்பு போன்றது. அது போலத் தான் உட்பகை உள்ளவர்களது குடும்பம் தேய்ந்து அழிந்து விடும். இதை நாம் தெரிந்து என்ன பயன். அவன் உணர வேண்டும். அவனால் உணர முடியாது. பெண்ணைப் பெற்றவர்கள் உணர வேண்டும். அவர்களும் உணர்வதாக இல்லை. அவர்கள் எம்மோடு கதைக்கும் போது எமக்குச் சார்பாகச் செயற்படுகின்றனர். பின் விவாகரத்திற்கு ஆயத்தப்படுத்துகின்றனர்'' என்று நமசிவாயகம் கவலைப்பட்டவர்'' என்றது குமரன் எலி.

“ஆறாம் அறிவு இத்தகைய செயல்களைத் தான் செய்யும். படித்தவர்களுக்கு விளங்கப்படுத்தவே முடியாது” என்றது லட்சுமி எலி.

**889. எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்**
**உட்பகை உள்ளதாம் கேடு.**

“எனக்குப் பயமாக இருக்கிறது கதிரேசு. உட்பகை ஓர் எள்ளளவு இருந்தாலும் அது பாரிய கோட்டைகளையும் தகர்த்து விடும். காண்டீபனது செயலால் பகை பூதாகரமாக வளர்ந்து செல்கிறது. பெண் வீட்டார் சமாதானப்படுத்தி இருவரையும் ஒற்றுமையாக்க விரும்புகிறார்கள் இல்லை. நான் இன்றோ நாளையோ என்றிருக்கிறேன். கடைசி காலத்தில் மகிழ்வாக ஒரு பிடி உணவு உண்ண முடியவில்லை” என்று நமசிவாயகம் அழுதவர்” என்றது குமரன் எலி.

“பாவம் மனிதன். வளர்ந்த பாசம். நல்லவற்றை இப்போ யாரும் உணர்வதில்லை. விட்டுக் கொடுப்பதில்லை. ஒவ்வொருவரும் தாம் செய்பவற்றை நியாயப்படுத்துகின்றனர்” என்றது லட்சுமி எலி.

**890. உடம்பொடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்**
**பாம்போடு உடனுறைந் தற்று.**

“நமசிவாயகம் மனப்பொருத்தம் இல்லாதவர்களுடன் சேர்ந்து வாழ்வதென்பது ஒரு குடிசையில் நச்சுப் பாம்புடன் சேர்ந்து வாழ்வதைப் போன்றது. காதலித்தவர்கள் மனம் ஒத்து வாழ்தல் வேண்டும். ஏதோ ஒரு வகையில் மனம் ஒன்றுபட்டதால் தானே காதலித்தவர்கள். இப்போ என்ன பிரச்சினை என்று தெரியவில்லை. தெரிந்தால் தான் சீர்செய்யலாம். இருட்டுள் பாதை தெரியாத ஊருக்குப் பயணிப்பதைப் போலுள்ளது” என்று கதிரேசன் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“காதலிப்பவர்கள் உடற்கவர்ச்சியையும், பணத்தையும் விரும்பிக் காதலித்தால் இப்படியான பிரச்சினைகள் தான் வரும். காதலித்துத் திருமணம் செய்த பல குடும்பங்கள் ஒற்றுமையாக இல்லை என்று கோவிலில் பெண்கள் பேசுகிறார்கள்” என்றது லட்சுமி எலி.

## பெரியாரைப் பிழையாமை – 90

**891. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்**
**போற்றலுள் எல்லாம் தலை.**

“வரவரக் காண்டீபனின் போக்கு மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கிறது. காலையில் திருநாவுக்கரசு கோவிலடியில் கணபதீஸ்வரனுடன் கதைத்துக் கொண்டிருக்கிறார். அதைக் கண்ட காண்டீபன் அவர்கள் தம்மைப் பற்றித் தான் பேசுகிறார்கள் என்று நினைத்து இருவரையும் மதிப்பு மரியாதை இல்லாமல் பேசியிருக்கிறான். திருநாவுக்கரசு நேருக்கு நேராகப் பேசுவாரே தவிரக் குறையாகச் சொல்ல மாட்டார்கள். அத்துடன் ஊரவர்கள் ஒருவரோடு ஒருவர் கண்டால் கதைப்பார்கள் தானே. கோவிலுக்கு வந்தவர்கள் மிகத் தரக்குறைவாகச் சொன்னார்கள். திருநாவுக்கரசின் இனத்தவன் ஒருவன் காண்டீபனது பேச்சைச் சகிக்க முடியாது அவனுக்கு அடித்து விட்டான்” என்று கதிரேசன் நமசிவாயகத்திற்குச் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“மேற்கொள்ளும் செயல்களில் வெற்றி பெறுபவர்களின் நட்பை இழந்து விடாமல் இருப்பது ஒருவனுக்குச் சிறந்த பாதுகாப்பு. இவன் நல்லவர்களுடன் முரண்படுகிறான்” என்று நமசிவாயகம் அழுதவர்” என்று குமரன் எலி.

“ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிசரைக் கடிக்கிற அளவுக்கு வந்தவன் திருந்த மாட்டான்” என்றது லட்சுமி எலி.

**892. பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்**
**பேரா இடும்பை தரும்.**

“ஆற்றல்மிக்க பெரியவர்களைப் போற்றி மதிக்க வேண்டும். இல்லாவிட்டால் பெரும் தீமைகள் உண்டாகும் என்று சிறுவயதில் இருந்தே சொல்லி வளர்த்தேன். எனது வளர்ப்பு முறை பிழையோ என்னவோ தெரியாது அவன் தலைகால் புரியாமல் செயற்படுகிறான். திருநாவுக்கரசு எல்லாம் விளங்கியவர். வந்து குறைப்பட்டு விட்டுச் சென்றார். வேறு யாராக இருந்தாலும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்” என்று நமசிவாயகம் கதிரேசனுக்குச் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“வயதைக் கூடக் கவனிக்காது கேளாக் கேள்வி கேட்டால் யார் தான் பொறுத்துக் கொள்வார்கள்” என்றது லட்சுமி எலி.

**893. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்**
**ஆற்று பவர்கண் இழுக்கு.**

“திருநாவுக்கரசு நல்ல மனிதன். கணபதீஸ்வரனும் நல்ல மனிதன் என்று ஊரவர்கள் பேசிக்கொள்கிறார்கள். அதைப் பற்றிச் சிந்திக்காது செயற்படும் காண்டீபனை என்னால் மன்னிக்க முடியாது. எண்ணினால் எண்ணியவுடனேயே நினைத்தவற்றைச் செய்து முடிக்க வல்லவர்கள் அவர்கள். திருநாவுக்கரசு எமக்காகப் பொறுத்துக் கொள்வார். ஆனால் கணபதீஸ்வரன் பொறுத்துக் கொள்ள மாட்டார். அவருடன் கெட்டுப்போக விரும்புபவன் தான் பிரச்சினைக்குப் போவான்” என்று கதிரேசன் நமசிவாயகத்திற்குச் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“கணபதீஸ்வரன் தனது மகள் சேர்ந்து வாழ்வாள் என்ற நம்பிக்கையில் பொறுத்தவர். இனிப் பொறுப்பாரோ தெரியாது” என்றது லட்சுமி எலி.

**894. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு**
**ஆற்றாதார் இன்னா செயல்**

“ஆற்றல் உள்ளவருக்கு ஆற்றல் இல்லாதவர் தீங்கு செய்வது, யமனைக் கைதட்டி அழைப்பதைப் போன்றது. மேலதிகாரியோடு தேவையில்லாமல் பிரச்சினைப்பட்டு வேலையை இழந்தாயிற்று. இப்போ கணபதீஸ்வரனோடு பிரச்சினைப்படுவதால் நான் கதைத்து விவாகரத்தைப் பெறாதீர்கள். காலப்போக்கில் காலம் அவர்களது பிரச்சினையைச் சரி செய்யும் என்று கூறிச்சம்மதிக்க வைத்தேன். இன்றுடன் அது சரிவராது” என்று கதிரேசன் நமசிவாயகத்திற்குச் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“இவர் எல்லாவற்றையும் விளையாட்டாக நினைக்கிறார். விளையாட்டு ஒருநாள் வினையாக மாறும்” என்றது லட்சுமி எலி.

**895. யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்**
**வேந்து செறப்பட் டவர்**

“நமசிவாயகம் அரசனைப் போல வாழ்பவரின் சினத்துக்கு ஆளானவர்கள் எங்கு சென்றாலும் சிறப்பாக வாழமுடியாது. வாழ அவர்கள் விடமாட்டார்கள். கணபதீஸ்வரனின் மகன் பெரிய அதிகாரி. அவன் நினைத்தால் இழந்த வேலையைக் காண்டீபனுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும். இவன் அவர்களுடன்

தேவையில்லாது முரண்பட்டுக் கொண்டே இருக்கிறான்.“கோவிலுக்குக் கூட வந்து நிம்மதியாக வணங்க முடியவில்லை, நண்பர்களுடனோ உறவினருடனோ பேசமுடியவில்லை”என்று கணபதீஸ்வரன் குறைப்பட்டவராம்” என்று கதிரேசன் கூறியவர்” என்றது குமரன் எலி.

“இவருக்குப் பயந்து யாரோடும் கதைக்காமலும் எங்கும் செல்லாமலும் இருக்க முடியுமே..? விசர் முத்திப் போச்சு” என்றது லட்சுமி எலி.

**896. எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்**
**பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.**

“உண்மை தான் கதிரேசு. நெருப்பில் விழுந்தவனும் தப்பிப்பிளைக்கலாம். ஆனால் ஆற்றல் மிகுந்தவர்களைப் பகைப்பவர்கள் ஒருபோதும் தப்பிக்க முடியாது” என்று எனக்குத் தெரியும். அவன் இப்போ என்னையும் மதிப்பதில்லை என்னுடனும் முரண்படுகிறான். நேற்றுச் சமைக்கப்பிந்தி விட்டதென்று சட்டி பானைகளை உடைத்து விட்டான். இது நானாகத் தேடிக்கொண்டவினை. தம்பியும் நான் தான் அவனைக் கெடுத்ததாகக் கூறித்திரிகிறான்” என்று நமசிவாயகம் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“இப்போ எல்லோரும் பொறுப்பை மற்றவர்கள் மீது சுமத்தப் பழகி விட்டனர்” என்றது லட்சுமி எலி.

**897. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்**
**தகைமாண்ட தக்கார் செறின்.**

“பல பெருமைகளுக்குரியவர்கள் கூட ஆற்றல் மிகுந்தவர்களைப் பகைக்க அஞ்சுவார்கள். ஆற்றல் உள்ளவர்கள் தகுந்த நேரம் பார்த்துத் தம்மை அழித்து விடுவார்கள் என்ற பயம் அவர்களுக்குண்டு. எல்லோரோடும் பிரச்சினைப்படும் உருத்திரகுமாரன் திருநாவுக்கரசுவுடனும் கணபதீஸ்வரனுடனும் உங்களுடனும் பிரச்சினைக்கு வருவதே இல்லை. அதற்குக் காரணம் அளவுக்கதிகமான பயம். ஆனால் காண்டீபன் யாரையும் மதிக்காமல் இருப்பது பெருங்கேட்டை உண்டாக்கும்” என்று நமசிவாயகம் கதிரேசனுக்குச் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“தலைக்கு மேலை வெள்ளம்போயிட்டுது. இனிக் கவலைப்பட்டு என்ன பயன்?” என்றது லட்சுமி எலி.

**898. குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு**
**நின்றன்னார் மாய்வர் நிலத்து.**

“எல்லாம் முடிவடைந்து விட்டது. இனிச் சேர்ந்து வாழ்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. எனது தந்தையையும் சகோதரர்களையும் அவமானப்படுத்தும். ஒருவனோடு எப்படிக் கூடி வாழ்வது. அன்று ஒரு நாள் கோவிலடியில் எல்லோரும் கூடியிருக்க என்னை அடித்தார். நேற்று கோவிலடியில் எல்லோரும் கூடியிருக்க அப்பாவை அவமானப்படுத்தினார். அப்பா மலை. அவரை எந்தவகையிலும் அசைக்க முடியாது. நான் எனது அறியாமையால் அவமானப்படுத்தி விட்டேன். இவர்களைக் குடும்பத்தோடு அழிக்க வேண்டும் என்று நவராசாவுக்குக் கார்த்திகா கூறினவளாம். அதை நவராசா நமசிவாயகத்திற்குச் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“பொறுத்தது போதும் என்று பொங்கி எழுகிறாள் போலும்” என்றது லட்சுமி எலி.

**899. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து**
**வேந்தனும் வேந்து கெடும்.**

“கதிரேசு, எனக்குப் பயமாக இருக்கிறது. உயர்ந்த கொள்கைகளை உடைய சிறந்தவர்கள் சீற்றம் கொண்டால், ஆட்சி புரிபவனே பயப்படுவானாம். கணபதீஸ்வரன் உயர்ந்தவர், உத்தமன், பணமுடையவர் செல்வாக்குள்ளவர். அதை அறியாது இவன் அவரைக் கண்டபடி விமர்சிக்கிறான். நேற்று இரண்டு தடவைகள் காவல்துறையினர் வீட்டிற்கு வந்து இவனைப் பற்றி விசாரித்தவர்கள். அவன் அவர்களது கையில் சிக்கினால் அடித்தே கொன்றுவிடுவார்கள்’’ என்று நமசிவாயகம் நடுநடுங்கியவர்’’ என்றது குமரன் எலி.

“பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவது அவர்கள் வாழும் வாழ்க்கையைக் கண்டு மகிழ்வதற்காக தற்போதைய பிள்ளைகள் தலை கீழாக நடக்கிறார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**900. இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்**
**சிறந்தமைந்த சீரார் செறின்**

“பெரியவர்களின் துணையிருந்தாலும், நல்ல மனிதர்களைப் பகைத்தால் நல்ல துணை வரும் நம்மை விட்டுச் சென்று விடுவர். இப்போ எனக்கு உன்னைத் தவிர வேறு யாரின் துணையும் இல்லை. நீ ஒருபோதும் காவல்துறையினர் இயங்கும் இடத்திற்கு வரமாட்டாய். வர உனது மனைவியும் பிள்ளைகளும் விடமாட்டார்கள். தனித்து நின்று நான் செய்வது? எதிரிகள் மிக்க பலம் உள்ளவர்கள். என்னைப் பஞ்சைப் போல ஊதி விடுவார்கள்’’ என்று நமசிவாயகம் கதிரேசனுக்குச் சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

“இதை உணருறவையெல்லோ உணர வேண்டும். காவாலிகள் கடப்புளிகளுக்காகப் பெரியவர்கள் கோடேற முடியுமே..?’’ என்று கேட்டது லட்சுமி எலி.

## பெண்வழிச் சேறல் - 91

**901. மனைவிழைவார் மாண்பயன் எய்தார் விளைவிழைவார்**
**வேண்டாப் பொருளும் அது.**

“வழமையாக நான்கு மணிக்குப் பின் வீட்டுக்குச் செல்லும் வரதன் அன்று இரண்டு மணிக்கே வீட்டுக்குப் புறப்பட்டான். அலுவலகத்தில் உள்ளோர் அவனை கேலியாகப் பார்த்தனர். வரதன் சொன்னான், “வினோ இன்று தனது நண்பியின் பிறந்தநாளுக்குச் செல்வதாகச் சொன்னவள். பத்துத் தரம் போன்பண்ணி விட்டாள். நான்போக வேண்டும்’’ என்று புறப்பட்டான். அவன் சென்ற பின் பீயோன் கணதீபன் சொன்னான், “இவர் மனைவியைப் பெரிதும் விரும்புபவர். அதனால் அவளின் சொல்லிற்கு அடங்கி நடப்பவர். அதனால் தான் அவசர அவசரமாகச் செல்கிறார். ஆனால் அவள் உவரைப் பெரிதாக மதிப்பதில்லை. அதனால் தான் விழுந்து விழுந்து செயலாற்றுகிறார்’’ என்று கூறிச் சிரித்தவன் என்று நவராசா நகுலனுக்குச் சொன்னவன்’’ என்றது குமரன் எலி.

“விநோதினி நல்ல அழகி. தகப்பன் பெரும் பணக்காரன். அத்துடன் சொல்லாலும் செயலாலும் விநோதினி வரதனை மயக்கி வைத்திருக்கிறாள் என்று கோவிலில் பெண்கள் கதைப்பார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**902. பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்**
**நாணாக நாணுத் தரும்.**

“வரதன் எப்பவும் தன் மனைவியைப் பற்றிப் பெருமையாகக் கதைப்பான். அவளின் விருப்பங்களை எப்பாடுபட்டாவது பூர்த்தி செய்வான். அவள் எங்காவது செல்ல வேண்டுமானால் அவன் தனது வேலையை விட்டு விட்டுச் செல்வான். அல்லது யாரையன் ஒழுங்குபடுத்தி அழைத்துச் செல்லச் சொல்வான். அவனுக்கு

அவள் மீது தீராத மயக்கம். பாவம் பற்குணம் இவனைக் கண்டால் ஒளித்து விடுவான். தனது கடமையைப் பெரிதாக எண்ணாது தனது மனைவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதையே இலக்காகக் கொண்டவன். மற்றவர்களை மதிக்கமாட்டான். அவளது செயல்கள் யாவும் வேதனைக்குரியன'' என்று நகுலன் நவராசாவுக்குச் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''அவளின் அழகும் ஒப்பனையும் செயல்களும் வரதனை வேறெதையும் நினைக்க விடாது'' என்றது லட்சுமி எலி.

**903. இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்**
**நல்லாருள் நாணுத் தரும்.**

''மனைவியை அளவுக்கதிகமாக நேசித்து ஆண்மையின்றி தாழ்த்து நடப்பவர்களுக்கு நல்லவர்களிடத்தில் மதிப்புக் கிடையாது. பண்டிதரிடம் வரதன் படித்தவன். பண்டிதர் அவனைச் சந்தித்து பண்டித வகுப்புச் சம்பந்தமாகப் பேச விரும்பினவர். அவன் பண்டிதரைச் சந்திப்பதைத் தவிர்த்து வந்தான். அதற்குக் காரணம் விநோதினி அவனைத் தடுத்தமையே யாகும். இதையறிந்த பண்டிதர் சொன்னார், ''இவன் அவளின் சொல்லுக்கு ஆடுறவன். உருப்படமாட்டான்'' என்றவர் என்று நகுலன் நவராசாவுக்குக் கூறினவன்'' என்றது குமரன் எலி.

''சில பெண்கள் கணவரை மயக்கித் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றனர். கட்டுப்படாவிட்டால் எதுவும் கிடையாது'' என்றது லட்சுமி எலி.

**904. மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்**
**வினையாண்மை வீறுஎய்தல் இன்று.**

''எவ்வளவு தான் கற்றாலும் மனைவிக்கு அஞ்சும் மறுமைப் பயன் இல்லாதவன் ஆண்மையுள்ளவனாக இருந்தாலும் ஒருபோதும் பெருமை அடையமுடியாது. வரதனின் மகன் தரம் ஐந்தில் படிக்கிறான். பாடசாலையில் கொடுக்கும் எந்தப் படிவத்திற்கும் விநோதினி தான் ஒப்பமிடுவாள். ஒரு நாள் அதிபர் ஒரு படிவத்தைக் கொடுத்து இதை அப்பாவிடம் கொடுத்து நிரப்பி அவரிடம் ஒப்பம் வாங்கிவா என்று கூற அவன் சொன்னான்,''அம்மா தான் ஒப்பம் வைப்பா. அப்பா அம்மாவுக்குப் பயம். எதுவும் செய்யமாட்டார்'' என்றானாம். வகுப்பாசிரியர்,''எமக்கு முன்பே தெரியும்'' என்றாராம் என்று நவராசா நகுலனுக்குச் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''மகிழ்வுடன் வாழத் தெரிந்தவன்'' என்றது லட்சுமி எலி.

**905. இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்**
**நல்லார்க்கு நல்ல செயல்.**

''இவனது இளைய மகன் முன்பள்ளியில் கற்கிறான். நிர்வாகத்தினர் ஒரு கலை விழா நடத்த விரும்பி இவனிடம் பணம் கேட்க இவன் தனது மனைவியைக் கேட்கும்படி கூறியிருக்கிறான். அவர்கள் விநோதினியிடம் சென்று பணம் கேட்டுப் பெற்றுள்ளனர். பணம் கொடுக்கும் போது அவள், ''இனிமேல் அவரைப் பணம் கேட்கவேண்டாம். எதுவாக இருந்தாலும் என்னிடம் கேளுங்கள்'' என்றவளாம். இவனைப் பற்றிக் கதைத்து ஊர் சிரிக்கிறது'' என்று நவராசா நகுலனுக்குச் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''மாத முடிவில் சம்பளம் முழுவதையும் விநோதினி வாங்கி விடுவாள். பிறகு எப்படி இவர் யாருக்காவது பணம் கொடுக்க முடியும்'' என்றது லட்சுமி எலி.

**906. இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்**
**அமையார்தோள் அஞ்சு பவர்.**

“மனைவியோடு கூடிப் பெறும் அந்த இன்ப சுகத்தை மேலாக எண்ணுவோர் தேவர்களைப் போலப் பூமியில் வாழ்ந்தாலும் பெருமைப்பட முடியாது. ஏனென்றால் அவரை யாரும் மதிப்பதில்லை. அவரது பதவி, பணம், பொருள் யாவும் வெட்கத்திற்குரியனவாகவே இருக்கும். இவன் கோவிலுக்குக் கொடுப்பதனாலும் மனைவியைக் கேட்டே கொடுப்பான். அலுவலகத்தில் விழாக்களுக்குக் கொடுப்பதனாலும் அவளைக் கேட்டு அனுமதி பெறாமல் கொடுக்கமாட்டான்” என்று நவராசா நகுலனுக்குச் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“இவர் கொஞ்சம் பலவீனம் உள்ளவர். தினமும் இவருக்கு அவளின் உதவி தேவை” என்றது லட்சுமி எலி.

**907. பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்**
**பெண்ணே பெருமை உடைத்து.**

“எனது மனைவி நல்ல அழகி. அவளைப் பார்த்தால் உடல் சிலிர்க்கும். அன்பாகக் கதைத்தால் உலகே இருளும். ஆனால் அவள் என்னைத் தன் தலைவனாக துணைவனாக வழிகாட்டியாக ஏற்றுள்ளதால் எனது வேலைகள் எல்லாவற்றையும் செய்வாள். எனது வியாபார விடயத்தில் தலையிடமாட்டாள். கோவிலுக்கு, சனசமூக நிலையத்திற்குக் கொடுக்குமாறு கூறுவாளே தவிரக் கட்டுப்பாடு விதிக்கமாட்டாள். ஆனால் வரதன் மனைவிக்கு அடிமையாகி, அவளுக்கு ஏவலாளாய் வாழ்கிறான். இது வெட்கக் கேடானது. இதை விட நாணமுள்ள பெண்ணாக இருப்பது மேலானது” என்று நவராசா நகுலனுக்குச் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“நவராசா கொடுத்து வைத்தவன். வரதன் கெடுத்து வைத்தவன்” என்றது லட்சுமி எலி.

**908. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்**
**பெட்டாங்கு ஒழுக பவர்.**

“எனக்கு அவசியமாக இரண்டு இலட்சம் ரூபா தேவைப்பட்டது. நீ கொழும்புக்குச் சென்று விட்டாய். அதனால் வரதனிடம் சென்று இன்று காலை ஒருவருக்குப் பணம் கொடுத்தல் வேண்டும். இரண்டு இலட்சம் ரூபா தா. இரவு நகுலன் வந்ததும் தருகிறேன்” என்று வரதனைக் கேட்டேன். அவன் வெகுநேரம் யோசித்து விட்டு,“உனக்கு எனது நிலை தெரியும் தானே. நான் கேட்டால் விநோதினி தரமாட்டாள். உனக்கு அவளின் குணம் தெரியும் தானே” என்றான். நான் போய் விநோதினியிடம் கேட்டேன். வட்டிக் காசைக் கழித்துக் கொண்டு தந்தவள். என்ன குடும்பம்” என்று நவராசா நகுலனுக்குச் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“பிழைக்கத் தெரிந்தவன். ஒரு நாளையிலை மூவாயிரம் ரூபா உழைத்து விட்டாள்” என்றது லட்சுமி எலி.

**909. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
**பெண்ணேவல் செய்வார்கண் இல்.**

“பெண் ஏவுகின்றபடி செயற்படுபவன் அறச்செயல்களைக் கூடச் செய்யமாட்டான். தேடுகின்ற பொருள் அனைத்தையும் அவளிடம் கொடுத்து விட்டு அவளது பெண்மையை விரும்புவான். இவன் பெற்றோருக்குக் கூட உதவுவதில்லை. இவனுக்கு வயது வந்த தங்கை ஒருத்தி கல்யாணமாகாமல் இருந்தவள். இவன்

அவளில் அக்கறை கொள்ளாததால் அவள் ஏழை விவசாயி. ஒருவனோடு சென்று விட்டாள். இவன் அவளைத் தேடவும் இல்லை'' என்று நவராசா நகுலனுக்குச் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''அவளை மச்சான்காரன் விரும்பக் கேட்டவன். இவன் கொஞ்சப் பணம் கொடுத்திருந்தால் செய்திருப்பன். இப்ப அவள் ஓடினது வரதனுக்கு நல்ல விருப்பம். மனைவியின் சொற்படி அவளது உறவைத் துண்டித்து விட்டான்'' என்றது லட்சுமி எலி.

**910. எண்சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க்கு எஞ்ஞான்றும்**
**பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.**

''இவன் எதையும் சிந்தித்து முடிவெடுப்பதில்லை. அவளின் முடிவிற்குத் தலையாட்டுவான். இவனது தங்கையை அழைத்துச் சென்றவன் ஏழை விவசாயி. சேர்த்தால் சீதனம் கொடுக்க வேண்டும் என்று விநோதினி நினைத்திருப்பாள். அவளின் முடிவு தானே இறுதி முடிவு. உண்மையான ஆண்மகன் சிந்தித்துச் செயலாற்றுவான். இவனது மைத்துனன் நல்ல வசதியானவன். அதைக் குழப்பியது விநோதினி தான். இவன் சிந்தித்து முடிவெடுத்திருந்தால் அவள் நல்லாய் இருந்திருப்பள்'' என்று நவராசா சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''இந்த மனிதர் ஏன் பெண்களிடம் சீதனம் பெறுகின்றனர். புராணங்கள் பெண்களைத் தெய்வம், பூமாதேவி, அன்னையென்று கூற இவர்கள் அதை மதிப்பதில்லையே'' என்றது லட்சுமி எலி.

## வரைவில் மகளிர் - 92

**911. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்**
**இன்சொல் இழுக்குத் தரும்.**

''அர்ச்சகா, புண்ணிய மூர்த்தியின் மகன் சேரலாதனைக் காதலித்தவள். கூடிக்கொண்டு படம் திருவிழா என்று திரிந்தவள். இப்ப சிவகுருவின் மகன் கண்ணன் சுவிஸ் நாட்டில் இருந்து வந்து நிற்கிறான். அவள் இப்ப அவனுடன் தான் திரிகிறாள். வாற கிழமை கலியாணமாம்'' என்று சரஸ்வதி கோவிலில் காலைப் பூசை நடக்கும் போது நளினிக்குச் சொன்னவள். நாலைந்து பெண்பிளைகள் உதடு பிரியாமல் சிரிச்சவை. அப்ப நளினி சொன்னவள்,''உது இப்பவே உனக்குத் தெரியும். இரண்டு பேரும் ரெலிபோனிலை இரண்டு வரிசமாய்க் கதைச்சவையாம். அன்பு காரணமாய் விரும்பாமல் பொருள் காரணமாக விரும்பும் விலை மகளின் இனிய சொற்கள் இப்போ இனித்தாலும் பிற்காலத்தில் பெரும் தீமைகளைத் தரும்'' என்று நளினி சொல்ல, ''இப்ப எல்லாரும் காசைத் தானே விரும்பீனை'' என்றவள்'' என்றது குமரன் எலி.

''இங்கே எல்லாம் தப்பாகத் தான் நடக்குது. சாமியை வணங்க வந்து ஏதேதோ கதைக்கினை. காதல் ஒருவரோடை கல்யாணம் இன்னொருவரோடை'' என்றது லட்சுமி எலி.

**912. பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்**
**நயன்தூக்கி நள்ளா விடல்.**

''அர்ச்சகா வலுகெட்டிக்காரி. கிடைக்கக் கூடிய பொருளின் அளவுக்கேற்ப இங்கிதமாய் நடக்கத் தெரிந்தவள். கண்ணனுக்கு எங்கே புத்தி போனது. அவள் சேரலாதனோடை காதல் என்று ஊர் முழுவதுக்கும் தெரியும். ஊரவை இரவு பகலாய் ரெலிபோனிலை பலரோடும் கதைக்கிறவை. உதைப் பற்றிக் கதைக்காமல் விட்டவையே. அவள் நல்ல அழகி. கதைத்தால் தேன் ஒழுகும். அந்தக் கதைகளை நம்பி ஏமாந்திட்டான். இது பெற்றோருக்குத் தெரியாதே. பொருளை விரும்பும் பெண்களை மனதால் கூட நினைக்கக்

கூடாது. மீறி நினைத்தால் துன்பங்கள் தான் மிஞ்சும்'' என்று சரஸ்வதி நளினிக்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''மயக்கத் தெரிந்தவர்கள், மயக்கம் தீராது வைத்திருக்கத் தெரிந்தவர்கள்'' என்றது லட்சுமி எலி.

**913. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்**
**ஏதில் பிணந்தழீஇ யற்று**

''அர்ச்சகாவின் தாயும் அப்படித் தான். அவளை நம்பி சுந்தரேசன் தன் பொருளை இழந்தவன். பின் பித்துப் பிடித்து அலைந்தவன். இவங்களுக்கு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லாம் இருக்கு, பிறகேன் அலையுறாங்கள். பெரியவர்கள் பொருளைப் பெரிதென்றும் விலை மகளின் பொய்யான தழுவல் இருட்டறையில் முன்பின் தொடர்பில்லாத ஒரு பிணத்தைத் தழுவுவது போன்றது என்று சொல்லியும் குடும்பத்தை மறந்து பேயாய் அலையுறாங்கள்'' என்று கோபத்துடன் சரஸ்வதி நளினிக்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''கிளி போல மனைவி இருந்தாலும் காகம் போல வைப்பாட்டி வைத்திருப்பார்கள் என்றும் பெரியவர்கள் கூறியுள்ளனர்'' என்றது லட்சுமி எலி.

**914. பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்**
**ஆயும் அறிவி னவர்.**

''நல்ல மனிதர்கள், ஒழுக்கமுள்ளவர்கள், அருளாளர்கள் பொருள் ஒன்றையே விரும்பி பொருளுள்ளவனைக் கவர்ந்திழுக்கும் விலை மகளிர் தரும் அற்பமான இன்பத்தை விரும்பமாட்டார்கள். அர்ச்சகா நகுலனை வளைத்துப்போட எத்தனை திருவிளையாடல்களைச் செய்தவள். அவன் தனக்குக் காதல் கடிதம் தந்ததாகவும் கூறியவள். நகுலன் ஒழுக்கமானவன் அவளை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. அதனால் தான் கண்ணனை விரும்பியவள்'' என்று சரஸ்வதி நளினிக்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''ஒருவன் விட்டதும் இன்னொருவனைப் பிடிக்கக் கெட்டித்தனம் வேணும். இது எத்தனை பேரிடம் இருக்கு?'' என்றது லட்சுமி எலி.

**915. பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்**
**மாண்ட அறிவி னவர்**

''நகுலன் மிகுந்த அறிவுள்ளவன். அர்ச்சகா பொருள் அதிகமாக உள்ளவர்களை விரும்புபவள் என்று தெரிந்ததால் தான் அவளோடு பழகாது விட்டவன். அர்ச்சகா நல்ல அழகி. அவள் தன்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டாளா என்று எத்தனை பேர் ஏங்கினவை. பின்னால் அலைந்தவை. கதைக்கமுற்பட்டவை. ஆனால் அவள் பொருள் உள்ளவர்களைத் தானே விரும்பினவள். நகுலன் இதை அறிந்து தான் விலகியவன்'' என்று சரஸ்வதி நளினிக்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''அழகான ஒரு பெண் மகிழ்வுடன் சிரித்தால் எந்த ஆண் தான் மயங்கமாட்டான்'' என்றது லட்சுமி எலி.

**916. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்**
**புன்னலம் பாரிப்பார் தோள்**

''அர்ச்சகாவுக்குத் தான் பெரிய அழகி என்ற திமிர் அளவுக்கதிகமாக இருக்கு. அதனால் தான் அவள் சிலரைப் பார்த்துச் சிரிப்பாள். சிலரைப் பார்த்து முறைப்பாள். இதனால் எத்தனை பேர் அவளுக்குப் பின்னால்

அலைஞ்சவை. ஆனால் நல்லொழுக்கமுள்ள நகுலன் தனக்கு அவளால் பெரும் அவமானம் ஏற்படும் என்று தெரிந்தமையால் தான் விலகியவன். பலர் அலைஞ்சவை. அடிபட்டவை. காவல்துறைக்குக் கூடச் சென்றவை. அவள் பணக்காரனும் ஏமாளியுமான சேரலாதனை விரும்பினாள். இப்ப திடகாத்திரமான பணக்காரனை கண்ணனுடன் சேர்ந்து திரிகிறாள்'' என்று சரஸ்வதி நளினிக்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''பொடியள் எல்லோரும் பொழுது போக்கிற்காகத் தான் திரிந்தவங்கள். கல்யாணம் என்றால் காசு, பணம் கேட்பார்கள். சேரலாதன் சொன்னவனாம்,''அவள் நல்ல அழகி. அவள் மீதுள்ள பற்று நீங்கி விட்டதென்று'' என்றது லட்சுமி எலி.

**917. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்**
**பேணிப் புணர்பவர் தோள்.**

''சேரலாதன் வெகுளியாக இருந்தாலும் புத்திசாலி. அவள் இவன் கண்ணனோடு திரிவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. தகப்பன் அவனுக்கு நல்ல இடத்தில் சம்பந்தம் பேசுகிறார். இவளைப் பற்றி அறியாததாலும், வலிய வந்ததாலும் அவளுடன் பழகினேன். ஒழுக்கமில்லாதவளை ஒழுக்கமில்லாதவர்களே விரும்புவார்கள். கண்ணன் மேல் நாட்டவன். அந்தக் கலாச்சாரத்தில் வாழ்ந்தவன். அவனுக்கு அவள் சரி. சரியில்லையென்றால் விட்டு விடவேண்டியது தானே'' என்று கண்ணனது தகப்பன் கூறினாராம். எப்படி இருவரினதும் போக்கு'' என்று சரஸ்வதி நளினியைக் கேட்டவள்'' என்றது குமரன் எலி.

''காலம் இடங்குடுக்குது. காலம் சேர்த்து வைக்குது. அவனவன் விருப்பம். இதில் ஏன் மற்றவர்கள் தலையை உடைக்க வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**918. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப**
**மாய மகளிர் முயக்கு.**

''கண்ணன், அர்ச்சகாவைப் பற்றி அறியாமையால் தான் அவள் கொடுக்கும் இன்பத்தை மோகினி மயக்கு என்று எண்ணுகிறான். வஞ்சனை நிறைந்த விலை மகளின் தன்மையை அறிந்த பின்பு தான் அதிலிருந்து விடுபடுவான். அதுவரை அவனது மயக்கம் தீராது. அர்ச்சகாவின் அழகு. அதை விட மற்றவர்களைக் கவர வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் ஒப்பனை. வாசனைத் திரவியங்கள் யாவும் பருவ வயதினரை மட்டுமன்றி மற்றவர்களையும் திரும்பத் திரும்பப் பார்க்க வைக்கும். இதுக்கென்றே பிறந்தவள் அர்ச்சகா'' என்று சரஸ்வதி நளினிக்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''முதலீடு இல்லாமல் தொழில் செய்ய முடியுமே..? ஒப்பனை தான் அவளின் முதலீடு. ஏமாந்தால் அவளுக்குப் பொருள் சேரும்'' என்றது லட்சுமி எலி.

**919. வரைவுஇலா மாணிழையார் மென்தோள்**
**புரையிலாப் பூரியர்கள் ஆழும் அளறு.**

''ஒழுக்க நெறிகளை மேற்கொள்ளாத விலை மகளின் அழகிய உடல் அறிவற்ற இழிந்தவர்களது நாகம் என்று இப்போ தெரியாது. காலம் செல்லச் செல்லத் தான் தெரியும். ''நல்ல வேளை, கண்ணன் வந்ததால் எனது மகன் தப்பித்தான். இல்லாவிட்டால் இவளைச் செய்து அழிந்திருப்பன். இனிக் கண்காணாத தேசத்துக்குப் போய் எதையும் செய்யட்டும்'' என்று சரஸ்வதி நளினிக்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''அவள் கெட்டிக்காரி. சந்தர்ப்பத்தை நல்லபடி பயன்படுத்தத் தெரிந்தவள். பாவம் சனம் இப்ப நிம்மதியாகக் கோவிலில் கதைச்சுச் சிரித்துப் பாவத்தைத் தேடுதுகள்'' என்றது லட்சுமி எலி.

**920. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்**
**திருநீக்கப் பட்டார் தொடர்பு**

“இருமனம் கொண்ட விலை மாதர்களின் உறவு, கள், சூது ஆகிய இம் மூன்றும் திருமகளால் வெறுக்கப்பட்டவர்கள் மட்டுமே உறவு கொள்வதற்கு உரியவை” என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். “சேரலாதன் முன்பு தாடி வளர்த்துக் கொண்டு சோகமாகத் திரிந்தவன். இப்ப தாடியை மழித்து விட்டுச் சந்தோசமாகத் திரிகிறான். கேட்டதற்கு அவளை விலக்க முடியவில்லை. பொருள் தான் அழிந்தது. இப்போ விலகி விட்டாள். பொருளும் மிச்சம். மனதிலும் சந்தோசம் என்றவன்” என்று சரஸ்வதி நளினிக்குக் கூறியவள்” என்றது குமரன் எலி.

“சிலருக்கு ஒருவரை விட்டால் இன்னொருவர் சேர்ந்து விடுவர். இராசி அப்படி” என்றது லட்சுமி எலி.

## கள் உண்ணாமை– 93

**921. உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்**
**கட்காதல் கொண்டொழுகு வார்.**

“அதிகாலையில் கஜேந்திரன் கோவிலுக்கு வந்த போது கோவிலடியை வழமையாகக் கூட்டித் துப்பரவு செய்வோர் நின்றனர். பற்குணம் சொன்னான், “கஜேந்திரா நீ இப்படி மாறுவாய் என்று நான் நினைக்கவில்லை. ஒரு நாள் நீ நன்றாகக் குடித்து விட்டு உருத்திரகுமாரனோடு சண்டைக்குச் செல்ல அவன் உன்னை தள்ளி விழுத்தி விட்டு உனது நெஞ்சில் தனது காலால் மிதித்தவன். நீ வலிக்கிறது விடு என்று வேதனையால் கத்தியும் விடவில்லை. நான் தான் வந்து விடுவித்தேன். அந்த நிலைமையை நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது. இப்போ முழுமையாகத் திருந்தி ஊருக்குதவுவனாகி விட்டாய்” என்று கூறக் கஜேந்திரன் சொன்னான், “அறியாமையால் பல வருடங்களைப் பயனின்றிக் கழித்து விட்டேன். கள்ளின் மயக்கம் பகைவரையும் குடிக்கச் செய்யும். மதிப்பை இழக்கச் செய்யும். இப்போ ஊர்ப் பெரியவர்கள் என்னை மதிக்கிறார்கள். இப்போ நான் பலத்துக் கதைத்தால் எனது பகைவர்கள் பயப்படுகிறார்கள்” என்று சொன்னவன்” என்றது குமரன் எலி.

“இருக்கும் இடத்தில் இருந்தால் எல்லாரும் மதிப்பினை. எதிரிகள் பயப்படுவினை” என்றது லட்சுமி எலி.

**922. உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்**
**எண்ணப் படவேண்டா தார்**

“கள்ளுக் குடித்த காலத்தை எண்ணிப் பார்த்தால் கவலையாக இருக்கு. குடித்து விட்டு நல்லது கெட்டது தெரியாமல் நல்லவர்களுடன் விரோதப்பட்டேன். தீயவர்களுடன் கூட்டுச் சேர்ந்து தீயசெயல்களில் ஈடுபட்டு மகிழ்ந்தேன். நல்லவர்கள், பெரியவர்கள் என்னைக் கண்டதும் விலகிச் சென்றனர். அதை நான் பெரும் மதிப்பாக எண்ணினேன். இப்போ கள்ளைக் குடிக்காது விட்டமையால் எல்லோரும் என்னை மதிக்கின்றனர். குடும்பமும் மகிழ்வுடன் இருக்கிறது. இனிக் குடிக்கமாட்டேன்” என்று கஜேந்திரன் பற்குணத்திற்குச் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“பட்டால் தான் தெரியும். நல்லாய்த் துன்பப்பட்டுட்டார்” என்றது லட்சுமி எலி.

**923. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**

**சான்றோர் முகத்தக் களி**

“அம்மாவிற்கு முன்பு என்னைக் காணவே பிடிக்காது. நீ செத்தால் தான் இந்தக் குடும்பம் உருப்படும் என்று சொல்வா. பெற்ற தாய்க்கே குடித்து விட்டுக் கலகம் செய்யும் என்னைப் பிடிப்பதில்லை. அப்படி இருக்கக் குற்றத்தைக் கண்டிக்கும் பெரியவர்கள் என்னை எப்படிக் கண்டித்திருப்பர். குடித்தால் நல்லது கெட்டதாகத் தெரியும், கெட்டது நல்லதாகத் தெரியும். தீயவர்கள் நல்லவர்களாவர். அதனால் எவ்வளவு கொடுமைகளைச் செய்திருப்பேன்” என்று துக்கப்பட்டவன்” என்றது குமரன் எலி.

“இவனது குடியால் இவனது குடும்பம் எவ்வளவு துன்பங்களை அனுபவித்தது. இனியாவது குடிக்காமல் விட்டால் சரி” என்றது லட்சுமி எலி.

**924. நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்**
**பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.**

“கள்ளுக் குடித்தால் வெக்கம், ரோசம், மானம் எதுவும் இராது. புத்திமதி சொல்வோர் பெரியவர்கள் நல்லவர்களைக் கண்டால் அவர்களோடு வேடிக்கையாகச் சண்டை பிடித்து அவர்களை ஏச வேண்டும் என்ற எண்ணமே மேலிடும். யாராவது சண்டைக்கு வந்தால் வேட்டியைத் தூக்கிக் காட்டினால் அவர்கள் ஓடிவிடுவார்கள். வீதியில் எனது குரல் கேட்டால் பெண்கள் மறைந்து விடுவார்கள். அப்பூ பட்ட துயரம் போதும்” என்று கஜேந்திரன் அழுதவன்” என்றது குமரன் எலி.

“முன்பும் இப்படித்தான். அழுவன். சத்தியம் செய்தவன். மறுநாள் குடித்து விட்டு கலகம் செய்வன். இப்ப ஆறு மாதங்கள் எதுவும் இல்லை. இப்படியே இருந்தால் ஊருக்கு நல்லது” என்றது லட்சுமி எலி.

**925. கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து**
**மெய்யறி யாமை கொளல்.**

“உழைக்கும் காசு முழுவதும் கள்ளுக் குடிக்கத்தான் காணும். குடிகார நண்பர்கள் சேர்ந்தால் பேசதேவையில்லை. கடன் பட்டுக் குடித்தால் காலப்போக்கில் கடன் காரன் நெருக்கக் களவெடுத்துத் தான் கடனை அடைப்பேன். கள்ளைக் குடித்தால் என்ன செய்கிறோம், எதை பேசுகிறோம் என்று தெரியாது. இதற்குக் காரணம் அறியாமை தான். இப்போ குடிக்காமல் விட்ட பின் உழைக்கும் பணத்தை மகளிடம் கொடுப்பேன். அவள் தனது சம்பளத்தையும் போட்டுச் சங்கிலி வாங்கினவள்” என்று பற்குணத்திற்குக் கஜேந்திரன் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“கஜேந்திரனின் மகள் காவியா இப்போ மகிழ்வுடன் இருக்கிறாள்” என்றது லட்சுமி எலி.

**926. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்உண் பவர்.**

“ஆழ்ந்த நித்திரையில் இருந்தால் உலகில் நடிப்பவை தெரியாது. அப்படியான நிலை செத்தவர்களுக்குத் தான் உண்டாகும். அப்படியான நிலையில் தான் நஞ்சான கள்ளைக் குடிப்பவர்களினதும் நிலை. எத்தனை நாட்கள் குடித்து விட்டு மதி மயங்கி வீதிகளில் விழுந்து கிடப்பேன். போவோர் வருவோர் செத்த நாயைக் காலில் பிடித்து இழுத்துக் கரையில் விடுவது போல என்னையும் விட்டு விட்டுச் செல்வர். எவ்வளவு அவமானம். மறுநாள்க் காலையில் நான் வீட்டை விட்டுப் புறப்படும் போது எனது மனைவி கேட்பாள்,“இன்று எந்த வீதியில் பிரதட்டை என்று. மானம், மதிப்பு எல்லாம் போனதோடு மகளின் வாழ்வும் அழிந்து விட்டது” என்று கஜேந்திரன் அழுவான்” என்றது குமரன் எலி.

“இப்பென்றாலும் உண்மையை உணர்ந்ததைப் பாராட்ட வேண்டும்” என்றது லட்சுமி எலி.

**927. உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்**
**கள்ஒற்றிக் கண்சாய் பவர்.**

"தனியிடத்தில் மறைவாய் இருந்து கள்ளைக் குடித்து விட்டு ஆட்டம் போடுவது தெருக்கடையில் நல்ல மகிழ்வுடன் குடித்தால் ஆடச்சொல்லும். பாடச்சொல்லும். உருத்திரகுமாரன் நாவேந்தனைப் பாடச் சொல்வான். என்னை ஆடச்சொல்வான். எனது மகளுடன் வேலை செய்வோர் அதைப் பார்த்துவிட்டு, "உனது தந்தை நன்றாக ஆடுகிறார். நடனம் கற்றவரா" என்று நக்கலாகக் கேட்பார்களாம். அதனால் பல நாட்கள் அவள் வேலைக்குச் செல்வதில்லை. இதை நினைக்க நெஞ்சு வெடிக்குது" என்று கஜேந்திரன் பற்குணத்திற்குச் சொன்னவன்"என்றது குமரன் எலி.

"இவற்றை ஆட்டத்தைப் பார்த்து சனம் சிரித்தது. இப்ப இவர் அதை நினைத்து அழுகிறார். காலமாற்றம் தான்" என்றது லட்சுமி எலி.

**928. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சகத்து**
**ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.**

"கள்ளைக் குடித்து விட்டுப் பல தடவை நான் மனைவிக்கு,"நான் கள்ளுக் குடிக்கவில்லையென்று சத்தியம் பண்ணுவேன். ஆனால் குடித்த கள் உள்ளே சென்று தனது வேலையை ஆரம்பித்ததும் எனது குட்டு வெளிப்பட்டு விடும். கள்ளு பாடச் சொல்லும், ஆடச்சொல்லும், சிரிக்கச் சொல்லும், அழச்சொல்லும். இப்படிப் பலவற்றைச் சொல்லும் போது மனம் கட்டுப்பாட்டை இழந்து கள்ளின் சொல்லிற்கேற்பச் செயற்படும். அதனால் கள்ளுக் குடித்தவர்கள் கள்ளு குடிக்கவில்லை என்று சொல்லக் கூடாது" என்று கஜேந்திரன் பற்குணத்திற்குச் சொன்னவன்" என்றது குமரன் எலி.

"கள்ளுக் குடித்தவனின் நடை உடை பாவனையெல்லாம் கள்ளின் செயற்பாடுதானே" என்றது லட்சுமி எலி.

**929. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்**
**குளித்தானைத் தீத்துரீஇ யற்று.**

"கஜேந்திரா, கள்ளுண்டு மயங்கியிருப்பவனை அது தவறானது என்று கூறி அவனைத் திருத்த முயல்வது நீருக்குள் மூழ்கியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது" என்று பெரியவர்கள் சொல்வார்கள். உன்னைத் திருத்த ஊர்ப் பெரியவர்கள் எவ்வளவு முயன்றனர். உன்னால் உனது மகளுக்கு எவ்வளவு அவமானம் என்று கூறியும் நீ திருந்தவில்லை. இப்போ கடவுளின் அருளால் திருந்தியுள்ளாய். இனிமேல் குடிக்காதே" என்று பற்குணம் கஜேந்திரனுக்குச் சொன்னவன்" என்றது குமரன் எலி.

"பாவம் காவியா. சிலரை உருத்திரகுமாரன் ஏவி விட, அவர்கள் காவியாவை அளவுக்கதிகமாகத் துன்புறுத்தி விட்டனர்" என்றது லட்சுமி எலி.

**930. கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்**
**உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.**

"நான் வேலையை முடித்துக் கள்ளுக் குடிக்கப் போகும் போது வழியில் நாவேந்தன், கதிரவன், குணசீலன் போன்றோர் தள்ளாடித் தள்ளாடி வருவர். பெரும்பாலும் நாவேந்தனது வேட்டி உரிந்து வீதியில் இழுபடும். அவன் கோவனத்துடன் தான் வருவான். அவர்களை நான் அப்போது ஒரு பொருட்டாக

மதிப்பதில்லை. இப்போ அதை நினைக்க வெட்கமாகவும், வேதனையாகவும் இருக்கு. நான் அதற்காக மிகமிக வருந்துகிறேன்'' என்று கஜேந்திரன் பற்குணத்திற்குச் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''நடந்ததை எண்ணிக் கவலைப்பட்டால் அது மடமை. இப்போ நினைத்ததைச் செயற்படுத்தினால் அது திறமை'' என்றது லட்சுமி எலி.

## சூது– 94

**931. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்**
**தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.**

''காலையில் கோவிலைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த கஜேந்திரனின் அருகில் வந்த நாவேந்தன் சொன்னான், ''மனைவிக்குச் சுகமில்லை. ஆயிரம் ரூபா தா. நாளைக்குத் திருப்பத் தருகிறேன்.'' ''உனது மனைவியைக் காலையில் கோவிலடியில் கண்டனான். சிரித்து விட்டுச் சென்றாள். நீ நேற்றுச் சூதாடி மூவாயிரம் ரூபாவை இழந்தனியாம். அதைக் கொடுக்கத் தான் கேட்கிறாய். நாளைக்குத் தருவதாகக் கூறி எத்தனை தரம் என்னிடம் பணம் பெற்றிருக்கிறாய். எப்பெண்டாலும் திருப்பித் தந்தனியா? நானும் சூதாடினனான் தான். சூதாடி எவ்வளவு பணத்தை இழந்திருப்பேன். நீ நேற்றுத் தோற்ற பணம் ஒரு வாரத்திற்குக் குடும்பம் நடத்தப் போதும். வெற்றி கிடைத்தாலும் சூதாடக் கூடாது. வெற்றி ஒரு முறை கிடைத்தால் தோல்வி பல முறை கிடைக்கும். அந்த வெற்றி தூண்டில் உள்ள இரையை மகிழ்வுடன் மீன்கள் கௌவுவதைப் போன்றது. நான் இப்போ திருந்தியதால் தான் அதன் தார்ப்பரியம் தெரிகிறது'' என்று நாவேந்தனுக்குக் கஜேந்திரன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''குடியும், சூதும், விலை மாதும் தானே பலரின் வாழ்வைக் கெடுக்கிறது. பெற்ற பிள்ளை பட்டினி கிடந்தாலும் இவர்கள் சூதை விடாங்கள்'' என்றது லட்சுமி எலி.

**932. ஒன்றுஎய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்**
**நன்றெய்தி வாழ்வதோர் ஆறு.**

''சூதாடி ஒரு பொருளை வென்றால் இன்னொன்றை வெல்ல வேண்டும் என்ற நினைப்பு மனதில் எழும். இப்படி இழப்புக்கள் தான் தொடரும். நான் சூதாடிய காலத்தில் எனது மனைவியின் நகைகள், பிள்ளைகளின் நகைகள் எல்லாம் வைத்துச் சூதாடித் தோற்றனான். அப்படி இருந்தும் ஆசை விடாததால் தொடர்ந்தும் சூதாடுவேன். இப்ப உழைக்கும் பணத்தில் அரைவாசிக்கு மேல் மிச்சமாகிறது. இந்த எண்ணம் முன்பே வந்திருந்தால், நான் லட்சாதிபதியாகி இருப்பேன்'' என்று கஜேந்திரன் நாவேந்தனுக்குச் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''பட்டால் தான் தெரியும் சிலருக்கு. பட்டாலும் தெரியாது பலருக்கு. மனிதர்களுக்கேன் இத்தீய குணம்'' என்றது லட்சுமி எலி.

**933. உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்**
**போஒய்ப் புறமே படும்.**

''இந்தச் சூதென்பது ஒரு வகை மனநோய். உருளுகின்ற சூதாட்டக் கருவி உருள உருளச் சூதாடுபவனின் பணம் உருண்டோடிப் பகை வரை அடையும். பலர் திட்டமிட்டுக் கள்ளத்தனமாகச் சூதாட்டினாலும் அக்கள்ளத்தனம் விரைவில் வெளிப்படும். நாகராசா கள்ளமாகச் சூதாடியவன் என்று சொல்லி

கந்தராசன் அவனை வாளால் வெட்டியவன். அதனால் சூதாடுவதை விட்டு விடு. விட்டாயேயானால் மனைவி மக்கள் மகிழ்வாக வாழ்வர்'' என்று கஜேந்திரன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''சூதாட்டத்தாலை அடிபாடு வெட்டுப்பாடு வழிப்பறி என்பன நடைபெறும். போன வாரம் சூதாடிப் பத்தாயிரம் ரூபாவை வென்ற நாகராசா குடித்து விட்டு வெறியில் செல்ல அக்காசை யாரோ பறித்தவன்கள்'' என்றது லட்சுமி எலி.

**934. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்**
**வறுமை தருவதுஒன்று இல்.**

''சூதாடி ஒரு போதும் வயிறு நிறைய உண்ணமாட்டான். அவனது குடும்பத்தினரும் வயிறார உண்ணமாட்டார்கள். அதற்குக் காரணம் அவன் உழைத்த பணத்தைச் சூதாடுவதே. சிவஞானம் திருமணம் செய்து மூன்று வருடங்கள். ஒரு பிள்ளை இருக்கு. சிவஞானம் மனைவிக்குப் பணம் கொடாததால் அவள் வாமதேவனோடு உறவு வைத்திருக்கிறாள். கேட்டால் பணம் இல்லை. பசிக்கிறது என்கிறாள். சூது இப்படியான பல இழிவுகளை உண்டாக்கும். அதனால் சூதாடுவதை விடு'' என்று கஜேந்திரன் நாவேந்தனுக்குச் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''பெண் சாதி போனால் என்ன பிள்ளை போனாலென்ன சூதாடிக்கு இது பற்றி கவலை இருக்குமா..?'' என்றது லட்சுமி எலி.

**935. கவறும் கழகமும் கையும் தருக்கி**
**இவறியார் இல்லாகி யார்.**

''சூதாடும் எமது நண்பர்களைப் பார். அவர்களின் முகத்தில் எப்போதாவது மகிழ்ச்சியைக் கண்டதுண்டா. எவ்வளவு பணம் இருந்தாலும் சூதாடிக்கு திருப்தி வராது. சூதாடும் இடத்தையும் சூதாட்டக் கருவியையும் கை விடா விட்டால் நிம்மதி,மகிழ்ச்சி, குடும்ப சுகம் யாவும் அழிந்து விடும். சிவராசா எவ்வளவு பொருள் வைத்திருக்கிறான். அவனை விட்டு விட்டு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு அவனது மனைவி தாய் வீட்டுக்குச் சென்று விட்டாள். சிவராசா சாப்பாட்டிற்குக் கஷ்டப்படுகிறான். இவனுக்குச் சாப்பாடு கொடுக்க யாரும் இல்லை'' என்று கஜேந்திரன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

ஓர் ஆம்பிளை அடுத்து இரண்டு நாட்களுக்கு ஒரு வீட்டுக்குச் சென்றால் சனம் எப்படிக் கதைக்கும் தெரியுமே?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**936. அகடுஆரார் அல்லல் உழப்பர் சூது என்னும்**
**முகடியான் மூடப் பட்டார்.**

''இப்ப சிவராசாவிடம் பணம் இருக்கிறது. ஆனால் அவனுக்கு உணவு கொடுக்க யாரும் இல்லை. நேரகாலம் புரியாது சூதாடி விட்டுச் சாப்பாட்டுக்குச் சென்றால் யார் கொடுப்பார்கள். அருணனின் மனைவி கயல்விழி போராட்டத்தின் போது காலை இழந்தவள். இப்போ ஐந்தாறு பேருக்குச் சாப்பாடு கொடுக்கிறாள். இவர் இரவு பத்துப் பதினொரு மணிக்கு வெறியில் சாப்பாட்டுக்குச் சென்றிருக்கிறார். அவள் பேசிக் கலைத்து விட்டாள். சூதாடிகளால் வயிறு நிறைய உண்ணக் கூட வழியற்றவர்களாகி விடுவர்'' என்று கஜேந்திரன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''அவள் இயக்கத்திலிருந்தவள். என்றாலும் பெண். அத்துடன் கால நேரமில்லாது உணவு கொடுக்க முடியுமே?'' என்றது லட்சுமி எலி.

**937. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்**
**கழகத்துக் காலை புகின்.**

''சிவராசா இரவு பகலாகச் சூதாடு மிடத்தில் இருந்ததால் அவனது முன்னோர் தேடிய சொத்துக்களையெல்லாம் இழந்து விட்டான். இவன் இரவிலும் சூதாடு இடத்தில் இருப்பதால் திருடர்கள் அடிக்கடி வீட்டை உடைத்துத் திருடி விடுகின்றனர். அப்படி இருந்தும் அவன் திருந்தவில்லை. நல்ல குடும்பம் என்று தான் பெண் வீட்டார் இவனுக்குப் பெண் கொடுத்தவர்கள். இப்ப அந்தப் பெண் தாய் வீட்டில் இருக்கு. அவளின் வாழ்க்கை பாழாகி விட்டது. அதனால் நான் உனக்குப் பணம் தரமாட்டேன்'' என்று கஜேந்திரன் கூறினான்'' என்றது குமரன் எலி.

''பணத்தைக் கொடுத்ததும் குடும்பத்திற்கு அரிசியா வாங்கப்போகிறார்? அவனது மனைவியும், பிள்ளைகளும் மடத்திலை சாப்பிடுதுகள்'' என்றது லட்சுமி எலி.

**938. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து**
**அல்லல் உழப்பிக்கும் சூது**

''எனக்கு உன்னுடைய உபதேசம் தேவையில்லை. என்னில் நம்பிக்கையிருந்தால் தா'' என்று நாவேந்தன் சொல்லக் கஜேந்திரன் சொன்னான்,''உன்னில் எனக்கு நம்பிக்கை இல்லை. சூது உள்ள பொருட்களையும் அழித்து பொய் சொல்லும் நிலைக்கு ஆளாக்கும். அருள் உள்ளத்தைக் கெடுத்துப் பல துன்பங்களைக் கொடுக்கும். சூதாடுபவனின் கையில் பணம் கிடைத்தால் சூதாடுவானே தவிரக் கடனைப் பற்றியோ குடும்பத்தைப் பற்றியோ நினைக்கமாட்டான். நீ கோபித்தால் கோபி'' என்று கஜேந்திரன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''சூதாடுபவை கட்டாயம் வாங்கிய கடனைக் கொடுத்து விட்டுத் தான் சூதாடுவினை'' என்றது லட்சுமி எலி.

**939. உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்**
**அடையாவாம் ஆயம் கொளின்.**

''சூதாட்டத்தை விரும்பி அதை ஆடினால் அது புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தையும் இழக்கச் செய்யும். நீ உனது பிள்ளைக்கு உனது மாமனார் வாங்கிக் கொடுத்த புதிய உடைகளை வைத்துச் சூதாடினனி. அத்துடன் நெல் மூட்டையை எடுத்துச் சென்று விற்று விட்டுச் சூதாடினனீ. ஞான சம்பந்தன் தனது கல்வி கற்ற சான்றிதழ்களை வைத்துச் சூதாடியவன். அதனால் அவனுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை. இவற்றையெல்லாம் யோசி'' என்று கஜேந்திரன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''பதவி உயர்விற்கு மேலதிகாரி கல்விச் சான்றிதழைக் கேட்பார் என்று ஞானசம்பந்தன் நினைக்கவில்லை. பகுத்தறிவுள்ள சமூகம் சீரழியுது'' என்றது லட்சுமி எலி.

**940. இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்**
**உழத்தொறூஉம் காதற்று உயிர்.**

''சூதாட்டத்தைப் பற்றி எனக்குச் சொல்கிறாயா..? பொருளை இழக்க இழக்க வெற்றி பெறவேண்டும் என்ற வெறியை சூதாட்டம் உண்டாக்கும். அதனால் தோல்வியடைபவன் தொடர்ந்து சூதாடித் தனது பொருட்களை இழப்பான். அது போலத் துன்பங்கள் வந்து வருந்திய போதும் மனம் உயிர் வாழவே

விரும்பும். இது இயல்பு'' என்று கஜேந்திரன் சொல்ல நாவேந்தன் சொன்னவன். இப்ப நான் இரப்பதும் அதனால் தான். நான் போறன்'' என்று கூறிவிட்டுச் சென்றான்'' என்றது குமரன் எலி.

''புற்று நோய் வந்து துன்பத்தால் வருந்துபவனும் உயிர் வாழவே விரும்புகிறான். உலகத்தைப் புரியாதவர்கள் மனிதர்கள். மேலும் மேலும் கற்றும் பயனில்லை'' என்றது லட்சுமி எலி.

## மருந்து– 95

**941. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று.**

''காலையில் கதிரேசன் வீட்டுக்கு மக்கள் சென்றனர். திருநாவுக்கரசு கதிரேசன் வீட்டுக்குச் சென்றார். அங்கு கதிரேசன் நோய் வாய்ப்பட்டிருந்தார்,''நேற்று அமாவாசை விரதம். மகாலட்சுமி கத்தரிக்காய்ப் பொரித்துக் குழம்பு வைத்திருந்தாள். மிகவும் சுவையாக இருந்தது. தயிர், அப்பளம், வடகம், வடை என்று இலகுவில் சமிபாடு அடையாத உணவு வகைகளை உண்டு விட்டேன். வயது போன நேரம் இவற்றை அளவுக்கதிகமாகச் சாப்பிட்டதால் அசீரணம். மருத்துவர்கள் சமிபாடு அடைய நேரமெடுக்கும் உணவுகளைக் குறைவாகச் சாப்பிட வேண்டுமென்பார்கள். இவற்றை அதிகமாகச் சாப்பிட்டால் நோய்கள் வரும். வாதம், பித்தம் என்பவை கூட்டினாலும், குறைந்தாலும் நோய் வரும். எனக்குக் கூடி விட்டது. இஞ்சி, கொத்தமல்லி, சீரகம், மிளகு இவற்றை அவித்து உப்பிட்டுக் குடித்தால் சரி வருமென்றவர்'' என்று கோவிலில் நின்றவர்களுக்குத் திருநாவுக்கரசு கூறியவர்'' என்றது குமரன் எலி.

''மனிதர் முன்பு இலை குழைகள், வேர்கள், விதைகளை அரைத்து மருந்தாகப் பயன்படுத்தியவர்கள். இப்ப காசுமெத்தி தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்கின்றனர். கதிரேசன் மூலிகைகளைப் பற்றித் தெரிந்தவர்'' என்றது லட்சுமி எலி.

**942. மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்.**

''திருநாவுக்கரசு, வருத்தம் என்பது சிறு விடயம். உண்ட உணவு சமித்த பின்பு, அடுத்த வேளை உணவை அளவோடு உண்ண வேண்டும். அப்படி உண்டு வந்தால் மருந்து தேவையில்லை. நான் இரவு சாப்பிடவில்லை. குடி நீர் குடித்து விட்டுப்படுத்தேன். இப்ப சுகம். நமசிவாயகம் மட விஷயமாக என்னைச் சந்திக்க வந்த போது நான் சற்றுத் தளர்ச்சியாக இருந்தேன். அதை அவன் பெரிதுபடுத்தி ஊருக்குள்ச் சொல்லி விட்டான். மிருகங்களைப் பாருங்கள். அவை பசிக்காவிட்டாலும், சமிக்காவிட்டாலும் உணவை உண்ணமாட்டா. அதனால் தான் அவற்றிற்கு நோய் வருவதில்லை'' என்று கதிரேசன் கூறியதாகச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''மிருகங்கள் எல்லாம் தமக்குத் தாமே வைத்தியம் செய்யுது. பிரசவம் பார்க்குது. மிகவும் படித்த மனிதர்கள் தான் வைத்திய நிபுணர்களிடம் செல்கிறார்கள். பெரும் புத்திசாலிகள்'' என்றது லட்சுமி எலி.

**943. அற்றால் அளவறிந்து உண்க அ.்.துடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.**

''முன்னர் உண்ட உணவு சமித்த பின் அளவோடு சத்தான உணவு வகைகளை உண்டால் நோயின்றி நீண்ட காலம் வாழலாம். இதை விட்டு விட்டு மாமிச உணவுகளையும், குடிவகைகளையும், இனிப்பான பானங்களையும் அளவுக்கதிகமாக உண்டால் எப்படி நோயில்லாமல் வாழமுடியும். இப்ப மாட்டின்

இறைச்சியைச் சாப்பிடுகிறார்கள். அதில் கொழுப்பு அதிகம். கிரந்தி அதிகம். அதனால் தான் மாரடைப்பு வருகிறது. இராசதுரை வாரத்தில் மூன்று நாட்களுக்கு மாட்டிறைச்சி சாப்பிடுவான். கொழுப்புக் கூடி பத்து லட்சம் செலவு செய்து இருதய அறுவை சிகிச்சை செய்தது'' என்று திருநாவுக்கரசு கோவிலடியில் சொன்னார்'' என்றது குமரன் எலி.

''சாப்பிடக் கூடாதவற்றையெல்லாம் சாப்பிடுகிறார்கள். மேலைத்தேய உணவுகளை உண்கிறார்கள். கொழுப்புப் படியாமல் என்ன செய்யும்?'' என்றது லட்சுமி எலி.

**944. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து.**

''முன்பு உண்ட உணவு சமிபாடு அடைந்த பின்பு, தனது உடம்பிற்கு ஏற்ற உணவு வகைகளை நன்றாக அறிந்து, பசி ஏற்பட்ட பின்பு உணவை உண்டால் நோய்கள் வராது. எனது மாமியார் உணவுப் பிரியை. அவாவுக்கு இனிப்பு உணவு கூடாது. கொழுப்புள்ள உணவு கூடாது. ஆனால் அவற்றைத் தான் விரும்பிச் சாப்பிடுவா. அடிக்கடி சாப்பிடுவா. வைத்தியர் சொன்னாலும் கேட்கமாட்டா. அவாவுக்கு வயது எண்பது. எழுபது வயது நடக்கும் போது சலரோகம் வந்தது. அது வந்த பின்பும் இனிப்பு வகைகளை உண்டதால் முதலில் காலில் உள்ள விரல்கள் அகற்றப்பட்டன. பின்பு வலது கால் அகற்றப்பட்டது. இனிப்பைச் சாப்பிடாது விட்டிருந்தால் இவை நடந்திராது'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''மனிதர்களுக்கு ஆசை இல்லை, அவா. அதனால் தான் வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் துன்பப்படுகிறார்கள். அறிவோ, கல்வியோ, உபதேசங்களே அவர்களுக்குப் பயன் கொடுப்பதில்லை'' என்றது லட்சுமி எலி.

**945. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்**
**ஊறுபாடு இல்லை உயிர்க்கு.**

''ஒவ்வாத உணவு வகைகளைச் சாப்பிடவே கூடாது. அத்துடன் அளவுக்கதிகமாகவும் உண்ணக் கூடாது. அதிகமான மனிதர்கள் நாவாலேயே அழிகிறார்கள். நல்லவற்றைப் பேசத் தெரியாது. உடம்புக்கு ஏற்ற உணவை உண்ணத் தெரியாது. சுவை குறைந்தால் உணவை தட்டோடு வீசுபவர்களே அதிகம். மாமிக்கு உணவு கொடுப்பதற்கு எனது மனைவி பின் நிற்பாள். அவாவுக்கு மிகவும் சுவையான உணவு வேண்டும். இறைச்சி வகைகளை அளவுக்கதிகமாக உண்டு விட்டு வயிற்றோட்டத்தால் அவதிப்படுவா. மறுநாள் அதே உணவைக் கேட்பா. திருந்தவே முடியாது'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''இது மனிதரின் இயல்பு. உணரமாட்டார்கள்'' என்றது லட்சுமி எலி.

**946. இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**
**கழிபேர் இரையான்கண் நோய்.**

''தனது உடம்பு ஏற்கக் கூடிய உணவை மட்டும் அளவோடு உண்பவன் நெடுங்காலம் மிக்க மகிழ்வோடு வாழ்வான். அளவுக்கதிகமான உணவை உண்பவன் நோயோடு வாழ்நாள் முழுவதும் துன்பப்பட்டே வாழ்வான். கதிரேசன் ஆசைப்பட்டு ஒரு வேளை உணவைச் சற்று அதிகமாக உண்டதால் பெரும் அவதிப்பட்டார். அதனால் இனிமேல் அவர் ஆசைக்குக் கூட ஒவ்வாத உணவை உண்ணமாட்டேன்'' என்று கூறினார்'' என்றது குமரன் எலி.

“கணவன்மாரைக் கெடுப்பது மனைவிமார். கொஞ்சம் சாப்பிடுங்கோ, கொஞ்சம் சாப்பிடுங்கோ என்று இரண்டு வேளை உணவைக் கொடுப்பார்கள். தனக்குத் தேவையானதைத் தானே போட்டு உண்ணவிடார்கள்” என்றது லட்சுமி எலி.

**947. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்**
**நோயள வின்றிப் படும்.**

“பசித்த பின் உண். பசிக்களவான உணவை உண்” என்று பெரியவர்கள் கூறியிருக்கின்றனர். அதிகமான மனிதர் இதைக் கைக்கொள்வதில்லை. வயிறு நிறைய உண்பார்கள். உண்ட பின் நொறுக்குத் தீண்களை உண்பார்கள். பின் இனிப்புப் பானங்களை அருந்துவார்கள். இவை தான் நோய்க்கான காரணிகள் மேலைநாடுகளில் இறந்தவர்களைப் புதைப்பார்கள். ஒரு மேல்நாட்டு தத்துவ ஞானி, “ஒருவன் தனது பற்களால் தான் தனது புதை குழியை வெட்டுகிறான்” என்று சொல்லியிருக்கிறார். அது உண்மை” என்று திருநாவுக்கரசு சொன்னவர்” என்றது குமரன் எலி.

“எல்லாவற்றிற்கும் காரணம் ஆசை. இந்துமதம் உணவைப் பற்றி, உண்ணும் முறை பற்றிக் கூறியுள்ளதும் அதை யார் கேட்கிறார்கள். விரதம் என்பது சுவையைத் தவிர்த்தல். அன்று தான் இந்துக்கள் உண்ணக் கூடாதவற்றை உண்கின்றனர்” என்றது லட்சுமி எலி.

**948. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்**

“வைத்தியர்கள் நோய் என்ன என்பதை அறிந்து, அந்த நோய் எதற்காக வந்தது என்று அறிந்து, அதை நீக்கும் வழிவகைகளையும் ஆராய்ந்து, உடல் நிலைக்கேற்ப மருந்து கொடுப்பது தான் சிறந்த மருத்துவரின் செயல். இப்போ எல்லாம் கணணி மயமாகி விட்டது. மனிதனை ஒவ்வொரு இயந்திரத்துள்ளும் புகுத்தி படம் எடுக்கிறார்கள். இதை விட்டு விட்டு உணவு விடயத்தில் கவனமெடுத்தால் நோய் வராது. பணச்செலவும் வராது, பக்கவிளைவும் வராது. இயற்கை வைத்தியம் நோயைத் தீர்த்து ஆரோக்கியத்தை வளர்க்கும்” என்று திருநாவுக்கரசு சொன்னவர்” என்றது குமரன் எலி.

“உணவுக் கட்டுப்பாடு தான் ஆரோக்கியத்திற்கு மருந்து. நோய் வராவிட்டால் மருந்து தேவையில்லை. வந்த பின் எந்தநோய் மாறியது” என்று கேட்டது லட்சுமி எலி.

**949. உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்**

“மருத்துவர்கள் நோயாளியின் வயது, உடலின் தன்மை, அந்நோய் ஏன் உண்டானது. அந்நோய் எவ்வளவு காலமாக உள்ளதென்று அறிந்த பின்பு தான் மருந்து கொடுத்தல் வேண்டும். இப்போ வைத்தியசாலைகளில் நோயாளர் அதிகரித்து விட்டனர். இவை பற்றி ஆராய்வதை விடுத்து உணவுக் கட்டுப்பாட்டை வலியுறுத்தினாலே போதும் அதைச் செய்தால் ஆஸ்பத்திரிகள் தேவையில்லை” என்று திருநாவுக்கரசு சொன்னார்” என்றது குமரன் எலி.

“இப்போ மனிதர்கள் கால் நடைகளுக்கும் செயற்கை உணவுகளைக் கொடுக்கிறார்கள். தாமே வைத்தியம் செய்த மிருகங்கள் மனிதரின் வைத்தியத்தால் பாதிக்கப்படுவதோடு மனிதர்களுக்கு நோய்களை உண்டாக்குகின்றன” என்றது லட்சுமி எலி.

**950. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து**

“நோயுற்றவன் நோய் தீர்க்கும் மருத்துவன். மருந்து அருகில் இருந்து நேரம் தவறாது மருந்து கொடுப்பவன் என்று வைத்திய முறை நான்கு பகுதிகளைக் கொண்டது. நோயாளிக்கு முக்கியமானது மருந்தை நேரத்திற்கு நேரம் கொடுத்தலாகும். கதிரேசனுக்கு மனைவி அருகில் இருந்து கொடுக்கிறாள். நமசிவாயகம் பாவம். மனைவி இல்லாததால் மருந்தை வாங்குவார். மறதியால் உரிய நேரம் குடிக்கமாட்டார். அதனால் அவருக்கு நோய் மாறுவதில்லை” என்று திருநாவுக்கரசு சொன்னவர்” என்றது குமரன் எலி.

“இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே தாதி முறை இருந்திருக்கிறது. அதைப் பிற நாட்டவர் அறியாது இருபதாம் நூற்றாண்டில் தான் தாதி முறை உருவானதென்கிறார்கள். இதை புத்திசாலிகள் மறுத்திருக்க வேண்டும்” என்றது லட்சுமி எலி.

## குடிமை– 96

**951. இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகச்**
**செப்பமும் நாணும் ஒருங்கு.**

“கஜேந்திரன் மிகுந்த துயரத்துடன் கோவில் வாசலில் இருந்த போது திருநாவுக்கரசு வந்து சொன்னார், “உனது மகள் காவியா வீடுதேடி வந்து எல்லாவற்றையும் சொன்னாள். ஒருவனிடம் பணம் சேரும், காணி, பூமி சேரும், அடியாட்கள் சேருவார்கள். ஆனால் நடுவு நிலைமையும், நாணமும் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்களிடம் மட்டுமே சேரும். ஏனையோரிடம் சேராது. உருத்திரகுமாரனிடம் பணம், பொருள் எல்லாம் இருக்கு. ஆனால் ஒழுக்கம் இல்லை. இல்லாவிட்டால் காவியா வேலை செய்யுமிடத்திற்குச் சென்று பலர் முன்னிலையில் வாய்க்கு வந்தபடி பேசினாளாம். தான் ஆராயாமல் காதலித்து விட்டேன். இப்போ தந்தையினதும், மகனினதும் செயல்களைப் பார்க்க வேதனையாக இருக்கு. காதலிப்பது பாவமா..? எமது முருகக் கடவுள் காதலித்துத் தானே திருமணம் செய்தவர். தாம் பெரும் பணக்காரராம். நாம் பிச்சைக்காரராம். அவனை மறந்து விடு என்று ஏசினார்” என்று அழுதாள்” என்று திருநாவுக்கரசு சொன்னார்” என்றது குமரன் எலி.

“கள்ள உறவு கொள்ளச் சாதி சமயம் இல்லை. கலியாணத்துக்கு மட்டும் தான் சாதியும், சமயமும், பொருளும் தேவை. கேடுகெட்ட மனிதர்கள்” என்றது லட்சுமி எலி.

**952. ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்.**

“கவலைப்படாதை கஜேந்திரா. உனது மகள் ஒழுக்கமானவள். உனது மனைவியும் ஒழுக்கமான குடும்பத்தில் பிறந்தவள். நீயும் ஒழுக்கமான குடும்பத்தில் பிறந்தவன். சேரக்கூடாதவர்களுடன் சேர்ந்து கெட்டுவிட்டாய். இருப்பினும் இப்போ உனது குடும்பத்தை நினைத்துத் திருந்தி விட்டாய். முனிவர்கள், ரிசிகள் பெரும் பெரும் மனிதர்கள் பலர் இளமையில் தீயவர்களாக இருந்து சந்தர்ப்ப வசத்தால் திருந்தி அரிய பல சாதனைகளைச் செய்தவர்கள். முன்னைய ஆளாக இருந்திருந்தால் உருத்திரகுமாரன் உனது மகளைப் பேசிய பேச்சிற்குக் கத்தி கொண்டு சென்றிருப்பாய். அப்படிச் செல்லாதது உனது உயர்ந்த பண்பைக் காட்டுகிறது. நல்ல குடும்பத்தில் பிறந்தவர்கள் ஒழுக்கம், உண்மை, நாணம் என்ற மூன்றிலிருந்தும் வழுவமாட்டார்கள் என்பதை உணர்த்தி விட்டாய். வாய்க்கு வந்தபடி பேசும் இயல்புடைய உருத்திரகுமாரனின் செயல்களை மறந்து விடு” என்று திருநாவுக்கரசு கஜேந்திரனுக்குச் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“மறந்தாலும் நல்ல குடும்பத்தில் பிறவாதவர்கள் பயப்படுகிறான் என்று நினைத்து ஏறி மிதிப்பர்” என்றது லட்சுமி எலி.

**953. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.**

“கஜேந்திரன் பேசவில்லை. விக்கி விக்கி அழுதான். அப்போது திருநாவுக்கரசு சொன்னார்,“நீ முன்பு செய்த தவறுகளை நினைத்து அழுகிறாய். அழுதால் மனப் பாரம் தீரும். நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களுக்குத் தான் முகமலர்ச்சி கொடுத்து உதவும் தன்மை, இனிய சொல் பேசல், பிறரை மதித்தல் என்பன இருக்கும். இதிலேதாவது உருத்திரகுமாரனுக்கு இருக்கா. எல்லாவற்றையும் விடலாம் மற்றவர்களை இழிவாக எண்ணுவதை மன்னிக்க முடியாது. உனது மகள் பட்டதாரி. நல்ல தொழிலில் இருக்கிறாள். அவளை மிகமிக இழிவாகப் பேசியதால் அவள் மிக்க கோபம் கொண்டு, “உருத்திரகுமாரனின் மகன் ஆண்மையில்லாதவன். அவனை எனக்குத் தேவையில்லை” என்று கூறிவிட்டாள். இது உருத்திரகுமாரனுக்குப் பொறுக்கவில்லை” என்று திருநாவுக்கரசு கூறியவர்” என்றது குமரன் எலி.

“ஆண்மையில்லாதவர்கள் தான் உழைக்க முடியாது சீதனம் கேட்பர். காதலிக்கும் போதே பல லட்சம் வாங்க முடியாதென்று தெரியும் தானே. பிறகேன் காதலித்தவர்” என்று கேட்டது லட்சுமி எலி.

**954. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.**

“வறுமை பல வழிகளால் ஏற்படும். உழைக்காமல் சோம்பேறியாக இருந்தால் வரும். தீயவாழ்வு வாழ்ந்தால் வரும். இயற்கை அனர்த்தங்களால் வரும். நீ நல்ல உழைப்பாளி. தீயவனாக வாழ்ந்ததால் உனது செல்வம் அழிந்தது. ஆனால் இப்போ அதை உணர்ந்து விட்டாய். இனிக்கோடி கோடியாகக் கொட்டித் தந்தாலும் ஒழுக்கக்கேடான செயல்களைச் செய்யமாட்டாய். நீ உனது தொழிலில் கவனமெடு. உறுதியுடன் வேலை செய் முன்னேறுவாய். காதலிப்பது குற்றமல்ல. காதலில் தோல்வியடைந்தாலும் உனது மகள் உறுதியாக இருக்கிறாள். அவளின் பேச்சைப் பார்த்தால் அவள் கண்ணகி போல எனக்குத் தோன்றினாள். அவள் மிகுந்த ஒழுக்கமுள்ளவள் என்று அவளது பேச்சில் இருந்து தெரிந்து கொண்டேன். இளமைப் பருவம் தீயவற்றை ஆராயாது. ஆராயாது கெட்டவன் ஒருவனின் மகனை, அவனும் கெட்டவன் தான் காதலித்து விட்டேன். இப்ப உறுதியாக இருக்கிறேன்” என்றவள்” என்று திருநாவுக்கரசு சொன்னவர்” என்றது குமரன் எலி.

“தனப்பனைப் போல பிள்ளையும் வேற நினைப்போடு பழகி இருப்பர். தன்ரை விருப்பம் பூர்த்தியானதும் விலகலாம் என்று நினைத்திருப்பர்” என்றது லட்சுமி எலி.

**955. வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று.**

“ஐயா, நான் ஆராயாது உருத்திரகுமாரனுடன் சேர்ந்து தீயசெயல்களில் ஈடுபட்டு விட்டேன். அது மகாதவறு என்று இப்போது புரிகிறது. எனது தகப்பனார் ஒழுக்கம் மிக்கவர். இரக்கமுள்ளவர். பிறருக்கு உதவுபவர். அவர் ஏழையாக இருந்தாலும் தனது உயர்ந்த குணத்தைக் கைவிடாதவர். நான் தவறு செய்து விட்டேன். கதிரேசன் காண்கின்ற போதெல்லாம் அப்பாவைப் பற்றிச் சொல்லார். அதை நான் கவனத்தில் எடுக்கவில்லை. எனது மகள் காவியா அப்பாவைப் போன்றவள். அப்பாவின் குணங்கள் அனைத்தும்

அவளிடம் உள்ளன. அடிக்கடி என்னைக் கண்டித்தவள். நான் தான் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை'' என்று கஜேந்திரன் அழுதவன்'' என்றது குமரன் எலி.

''கிரகங்கள் கூடாதிருந்தாலும் மனிதனைக் கெடுக்கும் என்று கதிரேசன் சொல்லுறவர்'' என்றது லட்சுமி எலி.

**956. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற**
**குலம்பற்றி வாழ்துமென் பார்.**

''ஐயா, நான் இனிமேல் குற்றமற்ற குடிக்குரிய பண்புகளுடன் வாழவேண்டுமென்று நினைத்து விட்டேன். இனிமேல் தீயசெயல்களைச் செய்து எனது குடும்பத்திற்கு தீங்கு ஏற்பட விடமாட்டன். எனது அப்பாவைப் போன்றவள் காவியா. எனது இளையமகள் பல்கலைக்கழகத்தில் படிக்கிறாள். எனது மகன் பொறியியல் கல்வி கற்கத் தகுதி பெற்று விட்டான். அதனால் இனிமேல் மறந்தும் தீயசெயல்களைச் செய்யமாட்டேன். இது எனது குடும்பத்தினருக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது'' என்று கஜேந்திரன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''இப்ப கஜேந்திரனின் மனைவி மிக்க மகிழ்வுடன் கோவிலுக்கு வருகிறாள்'' என்றது லட்சுமி எலி.

**957. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்**
**மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.**

''ஐயா, நல்ல குடும்பத்தில் பிறந்த நான் தீயசெயல்களைச் செய்தமையால் எனது இனத்தவர்கள் என்னை விட்டு விலகிச் சென்று விட்டனர். எனது தங்கையின் மகன் வெளிநாட்டில் வைத்தியராகப் பணிபுரிகிறான். அவனுக்குக் காவியாவைத் திருமணம் செய்ய விருப்பம். ஆனால் எனது தங்கைக்கு விருப்பமில்லை. நல்ல குடும்பத்தில் பிறந்த நீ செய்யும் குற்றங்கள் வானத்து நிலவில் காணப்படும் களவகத்தை ஒத்தவை. உனது அடாவடித் தனங்கள் யாவும் அனைவர்க்கும் தெரியும். அப்படியிருக்க உனது குடும்பத்தில் எப்படிச் சம்பந்தம் செய்வது என்றாள். எனது மனைவியின் சகோதரனின் மகன் பொறியியலாளன். தகப்பனுக்கு விருப்பம். ஆனால் மகனுக்கு விருப்பமில்லை. நான் ஒரு தீயவனின் மகளைத் திருமணம் செய்தால் ஊரவர் என்னை மதிப்பார்களா என்று தகப்பனைக் கேட்டவனாம்'' என்று சொல்லிக் கஜேந்திரன் அழுதவன்'' என்றது குமரன் எலி.

''ஆராயாமல் செய்த செயல்கள் எப்படியெல்லாம் தாக்குது'' என்றது லட்சுமி எலி.

**958. நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்**
**குலத்தின்கண் ஐயப் படும்.**

''ஐயா, நான் தீயசெயல்களைச் செய்கின்ற காலத்திலும் பெரியவர்களை மதித்தேன். அன்புள்ளவனாக இருந்தேன். அப்படியிருந்த போது சிலர் எனது பிறப்பைக் கூடச் சந்தேகித்தனர். கதிரவேலு நல்ல மனிதன். இவன் அவருக்குத் தான் பிறந்தானா? என்று கூடக் கதைத்தனர். ஒரு நல்ல குடும்பத்திற்குக் களங்கமேற்படுத்திய பாவி ஐயா நான் என்று கஜேந்திரன் விம்மி விம்மிச் சிறிது நேரம் அழுது விட்டுச் சொன்னான்,''உருத்திரகுமாரன் எனது மகள் எனக்குப் பிறக்கவில்லை என்று மகளுக்குச் சொல்ல அவள் அவனைக் கொலை செய்வேன்'' என்றவள். இது என்னால் தானே நடந்தது'' என்று கஜேந்திரன் அழுதவன்'' என்றது குமரன் எலி.

''இந்த மனிதர்கள் கேவலமானவர்கள். நியாயத்தைக் கதைக்காது வசைபாடுவார்கள்'' என்றது லட்சுமி எலி.

**959. நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலததிற் பிறந்தார்வாய்ச் சொல்**

“மகனே, நிலம் எத்தகையது என்பதை அதில் விளையும் பயிர் காட்டிக் கொடுக்கும். அது போல ஒருவனது வாய்ச்சொல் அவனது பிறந்த குலத்தைக் காட்டிக் கொடுக்கும். உருத்திரகுமாரனை யாராவது மதிக்கிறார்களா..? நேற்று உனது மனைவியின் சகோதரன் என்னைத் தேடி வந்து உனது இரண்டாவது மகளைத் தனது மகனுக்குத் திருமணம் செய்ய விருப்பம் என்றான். அதை அவனது மகனும் விரும்புகிறானாம். நீ உன் குலப் பெருமையைக் காப்பாற்றியதால் வந்த பயன் இது. அதனால் கவலைப்படாதே'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

“நல்ல மனிதர்கள் நல்ல குடும்பத்தை விரும்புவர். தீயமனிதர்கள் சீதனத்திற்கு ஆசைப்பட்டு எதையும் செய்வர். இப்போ ஊரில் அது தானே நடக்கிறது'' என்றது லட்சுமி எலி.

**960. நலம்வேண்டின் நாணுடமை வேண்டும் குலம்வேண்டின்**
**வேண்டுக யார்க்கும் பணிவு.**

“ஐயா, ஒருவன் நன்மையடைய வேண்டுமானால் ஒழுக்கமுடையவனாக இருத்தல் வேண்டும். பிறந்த குடிக்கு உயர்வு வேண்டுமானாலட அனைவரிடமும் பணிவுடன் நடக்க வேண்டும் என்பார்கள். அதை இப்போது நன்கு உணர்ந்ததால் தான் உருத்திரகுமாரன் எனது மகளைத் தரக்குறைவாகப் பேசியும் பொறுத்துக் கொண்டேன். காலம் எல்லாவற்றையும் மாற்றும். கடவுள் உதவி செய்வார்'' என்று கஜேந்திரன் திருநாவுக்கரசுவிற்குக் கூறியவன்'' என்றது குமரன் எலி.

“மனிதரில் பலர் தலை கீழாக நடந்து விட்டு இறுதியில் தத்துவம் பேசுவர். கடவுளின் மேல் பாரத்தைப் போடுவர். இது மனித இயல்பு'' என்றது லட்சுமி எலி.

**மானம் - 97**

**961. இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்**
**குன்ற வருப விடல்**

“திருநாவுக்கரசு உருத்திரகுமாரனைச் சந்தித்துச் சொன்னார்,“நேற்றுக் காவியா வந்து என்னுடன் கதைத்த பின்பு எனது மனம் குழம்பிவிட்டது. கஜேந்திரன் கூடாதவன் தான். ஆனால் காவியா சேற்றில் மலர்ந்த செந்தாமரை. களங்கமில்லாதவள். பெரும் அறிவாளி. அவளை நீ வாயில் வந்தபடி பேசியும் அவள் எதுவும் பேசாது இருந்து தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டாள். நீ கற்றவன். கற்றபடி நடக்கிறாயா? கஜேந்திரன் செய்யும் குற்றங்களுக்கு அவள் காரணியாக இருக்கிறாளா…? பெரும் சிறப்புகள் வருவதாக இருந்தாலும் பயனற்ற வார்த்தைகளைச் சொல்லக் கூடாது. எனது மனம் கொதிக்கிறது'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

“அவனுக்குக் குலப்பெருமை இருந்தால் கதைக்கலாம். பாவம் திருநாவுக்கரசு'' என்றது லட்சுமி எலி.

**962. சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு**
**பேராண்மை வேண்டு பவர்**

“நான் காவியாவைப் பற்றிச் சொன்னனான். அவள் நல்லதொரு பரம்பரையின் வாரிசு. தகப்பன் தீயசெயல்களிலீடுபட்டாலும் இப்போ திருந்திவிட்டான். மதிப்பையும், மரியாதையையும் குலப்பெருமையையும் அவள் நினைத்துப் பார்த்ததனால் தான் அவள் எதுவும் பேசாமல் இருந்தாள். அவள் தனது புகழுக்கு

இழுக்கு வரக்கூடாதென்பதற்காகத் தான் அவளை மதிக்கின்ற அலுவலகத்தில் பலர் மத்தியில் பேசியும் அவள் வாய் திறக்கவில்லை. மேலதிகாரி காவல்துறைக்கு அறிவிக்க முற்பட்ட போதும் அவர் அதை விரும்பவில்லை. அதற்குக் காரணம் தனது பெருமைக்கு இழுக்கு வந்து விடும் என்பதற்காகவே'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''ஏச்சு வாங்கியும் அடி வாங்கியும் வெட்கப்படாதவன் இவற்றை பேச்சைச் செவிமடுப்பனா?'' என்றது லட்சுமி எலி.

**963. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய**
**சுருக்கத்து வேண்டும் உயர்வு.**

''செல்வமுள்ளவன் பணிவோடு வாழவேண்டும். கல்வியறிவுள்ளவன் கற்றபடி வாழவேண்டும். செல்வம் வரும் போகும். செல்வமுள்ள போது பணிவுடன் வாழ்பவன் தான் வறுமைப்பட்ட போது தலை நிமிர்ந்து நடப்பான். நீ உனது செல்வத்தால் கர்வத்துடன் செயலாற்றுகிறாய். அதனால் உன்னை யாரும் மதிப்பதில்லை. உனது குடும்பத்தையும் மதிப்பதில்லை. உனது மகன் உன்னை விடக் கேவலமானவன் என்று காவியா சொல்கிறாள். நீ அவனைக் காவியாவைத் திருமணம் செய்ய விடமாட்டேன் என்கிறாய். ஆனால் அவள் உனது மகனைத் திருமணம் செய்யமாட்டேன் என்று கூறுகிறாள். இதில் யார் பெரியவர்'' என்று திருநாவுக்கரசு கேட்டவர்'' என்றது குமரன் எலி.

''அவனுக்கு மானம், ரோசம் இருந்தாலெல்லோ உவையெல்லாம் உறைக்கும். கேவலப்பட்டவனுக்குப் புத்திமதி சொல்வது தான் கேவலம்'' என்றது லட்சுமி எலி.

**964. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்**
**நிலையின் இழிந்தக் கடை**

''அவள் சொன்னாள்,''உயர்ந்த ஒழுக்கத்திலிருந்து தாழ்ந்தவர்கள் தலையில் இருந்து உதிர்ந்த மயிருக்குச் சமமானவர்கள். உருத்திரகுமாரனும் அவனது மகனும் தலையில் இருந்து உதிர்ந்த மயிர்கள்'' என்றவள். தலையில் இருக்கும் வரை அதை விட உயர்ந்தது எதுவுமில்லையென்று மிகுந்த கவனத்துடன் பராமரிப்பர். விழுந்துவிட்டால் குப்பையாகக் கூட நினைக்கமாட்டார்கள். இப்படி அவளைச் சொல்ல வைத்து விட்டாயே'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''நல்ல உதாரணம் தான். அதைச் சொல்லுபவர்களுக்குத் தான் சொல்ல வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**965. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ**
**குன்றி அனைய செயின்.**

''காவியா சொன்னாள், ''ஐயா, மலை போல உயர்ந்த பெருமையை உடையவராக இருந்தாலும், குன்றிமணி அளவு இழிவான செயலைச் செய்தாலும் மிகத்தாழ்ந்த நிலையை அடைவர் என்று நான் கற்றதனால் தான் அன்று உருத்திரகுமாரனைப் பாதுகாப்பாக விட்டேன். எனது அலுவலகச் சிற்றூழியர்கள் அவனை அடித்து முறித்திருப்பர். எனது மேலதிகாரி காவல்துறைக்கு அறிவித்திருந்தால் என்ன நடக்கும். ஒவ்வொருவரும் செய்யும் தீயசெயல்கள் அவர்களையே சூழும். அதனால் எனக்கு இழுக்கைத் தேடிதரும் செயல்களை நான் செய்யவில்லை'' என்றவள் என்று திருநாவுக்கரசு கூறினவர்'' என்றது குமரன் எலி.

''உது செவிடனின் காதில் ஊதின சங்கு தான்'' என்றது லட்சுமி எலி.

**966. புகழின்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று**
**இகழ்வார்பின் சென்று நிலை.**

“ஐயா, எம்மை மதிக்காது இகழ்பவரின் வீட்டில் சென்று வாழ்வதை விடச் சாகலாம். வாழ்க்கை என்பது இனிமையானது. மகிழ்வான குடும்ப வாழ்வு சொர்க்கத்திற்கு ஈடானது. உருத்திரகுமாரனது வீடு நரகம். அங்கே மகிழ்வுக்கு இடமில்லை. அங்குபோய் வாழ்வதை விட நான் கன்னியாகவே இருந்து சாகிறேன்’’ என்று அவள் கூறிய போது நான் கலங்கி விட்டேன். எதிரியாக இருந்தாலும் அவரை மதித்துப் பேசுதல் நல்ல குடும்பத்தில் பிறந்தவரின் இயல்பு. நீ மனிதநேயத்திற்கு அப்பால் பேசிவிட்டாய்’’ என்று திருநாவுக்கரசு சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

“காவியா பிச்சைக்காரி. இவளுக்கு இவ்வளவு திமிரென்றால் எனக்கு எவ்வளவு இருக்கும் என்று நினைத்திருப்பன்’’ என்றது லட்சுமி எலி.

**967. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின்**
**அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று.**

“உந்தக் கேவலங்கெட்ட குடும்பத்தில் சென்று வாழ்வதை விடச் சாவது மேலானது. உருத்திரகுமாரனின் மகனில் ஏதோ ஒரு ஈர்ப்பு இருந்ததால் அவனை விரும்பினேன். அதுவும் சில நாட்கள் மட்டும் தான். நான் சிரித்தவுடன் அவன் கதைத்தான். பின் தனது சுயரூபத்தைக் காட்டினான். முன்பு ஒரு பெண்ணுடன் அவன் தொடர்பு வைத்திருந்தவன். அதை நான் பின்பு தான் அறிந்தேன். காதல் என்பது மாசற்ற அன்பு, தெய்வீகத் தொடர்பு, பிறவிகள் தோறும் தொடரும் பிணைப்பு. அப்படி இருக்க அவன் காதலை காம உணர்வுகளைத் தீர்க்கும் இடமாக நினைத்து விட்டான்’’ என்று காவியா கூறியதாகத் திருநாவுக்கரசு சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

“இப்போதைய ஆண்கள் எங்கே காதலிக்கிறார்கள். காமத்தைத் தீர்க்கத் தானே பேயாய் அலைகிறார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**968. மருந்தோமற்று ஊனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடழிய வந்த இடத்து**

“ஐயா, வாழ்க்கை என்பது புகழுக்குரியது, பெருமைக்குரியது, தன்மானம் மிக்கது. இந்தக் கேவலமான உடம்பைப் பெரிதாக எண்ணி வாழுகின்ற வாழ்க்கை, உயிரைக் காக்கின்ற மருந்தா என்ன..? மயிர்நீர்ப்பின் கவரிமான் இறக்குமாம். மானம் கெட்ட பின்பு மகிழ்வுடன் வாழும் வாழ்க்கை பிணத்திற்கு அலங்காரம் செய்வதைப் போன்றது. உருத்திரகுமாரன் தனது பணத்தின் பெருமையைக் கூறி எம்மை இகழ்கிறார். அதைத் தயவு செய்து விடச் சொல்லுங்கள்’’ என்று சொன்னவர் என்று திருநாவுக்கரசு கூறினவர்’’ என்றது குமரன் எலி.

“பாவம் உருத்திரகுமாரன். இனி எப்படித் தனது குலப் பெருமையைக் கூறப்போகிறார்’’ என்றது லட்சுமி எலி.

**969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்.**

“ஐயா, தனது உடலில் இருந்து ஒரு மயிர் பிறரால் நீக்கப்பட்டால் கவரிமான் உயிர் வாழாதாம். நானும் கவரி மானைப் போன்றவள். எனக்கு மானம் தான் பெரிது. கேடு கெட்ட காதலை விட உயிர் துறப்பது மேலானது. தற்போதைய சூழ்நிலையில் நான் உயிர் துறந்தால் என்னைப் பற்றிப் பல கேவலமான

கதைகளை உருத்திரகுமாரனும் அவனது மகனும் உருவாக்குவார்கள். சிலர் அதை உண்மையென்றும் நம்புவார்கள். இந்த நிலை வருவதை எதிர்த்துப் போராடி விட்டுத் தான் நான் இறப்பேன்'' என்றவள்'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''இந்தக் காலத்தில் பெண்கள் சிரித்தாலே பல அர்த்தங்களைக் கண்டு பிடித்து விடுவார்கள்'' என்றது லட்சுமி எலி.

**970. இளிவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழுது ஏத்தும் உலகு.**

''தமக்கு ஏதேனும் இழிவு ஏற்பட்டால் உயிர் வாழாத மானம் உடையவரின் பூட்டி நான். எனது தாயாரின் பேரனாரைப் பண விடயத்தில் ஒருவர் குற்றம் சாட்டினார். அம்மாவின் பேரனார் அதை மறுத்த போதும் யாரும் நம்பவில்லை. அவர் கவலை மிகுதியால் தற்கொலை செய்து கொண்டார் அதன் பின்பு தான் ஊரவர்கள் அவர் மீது குற்றமில்லை என்று கண்டு கொண்டனர். இதனால் அம்மாவின் குடும்பத்திற்கு அவரின் ஊரில் மிகுந்த புகழ் உண்டு. அப்படிப்பட்ட குடும்பத்திலிருந்து வந்தவள் நான். உயிருக்கு மதிப்புக்கொடுக்க மாட்டேன். மானத்திற்குத் தான் மதிப்புக் கொடுப்பேன்'' என்றவள் என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''ம் பிரச்சினை தான். காவியாவில் தான் உருத்திரகுமாரன் பழகுவர்'' என்றது லட்சுமி எலி.

## பெருமை– 98

**971. ஒளியொருவற்கு உள்ள வெறுக்கை இளியொருவற்கு**
**அஃதிறந்து வாழ்தும் எனல்.**

''கஜேந்திரா, ஒருவன் மிகுந்த ஊக்கத்துடன் தொழில் செய்தால் கட்டாயம் நல்ல நிலையை அடைவான். பெரியவர்களால் பாராட்டப்படுவான். ஒருவனுடைய இழிவுக்குக் காரணம் அவன் ஊக்கமில்லாமல் சோம்பியிருப்பது தான் நான் அடுத்த நேரச் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருந்தவன். இன்று பெருங் கோடீஸ்வரன். அதற்குக் காரணம் யாருமல்ல எனது முயற்சி தான். முயற்சியில்லாது இருக்கும் போது யாரும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள். முயன்று முன்னேறிவிட்டால் எல்லோரும் தேடி வருவார்கள். பாராட்டுவார்கள். நீயும் உனது நண்பர்களும் முன்னேறாமைக்குக் காரணம் உழைக்காமல் பொழுது போக்கியதேயாகும். ஊக்கத்துடன் உழை ஒரு வருடத்தில் முன்னேறுவாய்'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''இதை எத்தனை பேர் சொல்லிவிட்டார்கள். செயற்பட்டால் சரி'' என்றது லட்சுமி எலி.

**972. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

''எல்லா உயிர்களுக்கும் பிறப்பு ஒரு தன்மையானது. அவர்களது வாழ்க்கை முறை தான் அவர்களை வேறுபடுத்துகிறது. நானும் நாவேந்தனும் ஒருநாள்ப் பிறந்தோம். இருவரும் மிகமிக வறிய குடியில் பிறந்தவர்கள். நான் கஷ்டப்பட்டு முன்னேறினேன். அவன் ஊக்கமில்லாமல் செயற்பட்டு பிறந்தது போலவே இருக்கிறான். மிகமிக வறிய குடியில் பிறந்த கதிரேசன் ஊக்க மிகுதியால் மிக்க பெருமையுடன் வாழ்கிறார். பிள்ளைகள் மிகமிக வசதியாக இருக்கின்றனர். இவற்றையெல்லாம் நீ ஏன் யோசிக்கிறாயில்லை. எல்லாம் தொழில் தான். வைத்தியசாலையில் துப்பரவுத் தொழிலாளி இல்லாவிட்டால் நோய் தீர்க்கும் வைத்தியசாலை நோய்களைப் பரப்புமிடமாக மாறிவிடும். தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை. செய்யும் முறைகளில் தான்

வேறுபாடுகள் உண்டு. இதை உணர்ந்தவர்கள் தான் முன்னேறியுள்ளனர்'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''சின்னத்துரையும், மனைவியும் அரச உத்தியோகத்தர். குடியிருக்க வீடில்லை. வேலாயுதம் கூலிக்காரன் மாளிகை மாதிரி வீடு கட்டியுள்ளார். இவற்றையெல்லாம் உணர்கிறார்களில்லை'' என்றது லட்சுமி எலி.

**973. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்.**

''பணம், பொருள், காணி, பூமி வீடு வளவுடன் இருந்தாலும் நல்ல பண்புகள் இல்லாவிட்டால் அவர்கள் மேலானவர்களாக மாட்டார்கள். அதற்கு உதாரணம் உருத்திரகுமாரன். மிகவும் வறுமைப்பட்டிருந்தாலும் இழிந்த குணங்கள் இல்லாதவர்களை மக்கள் மேன் மக்களாகத் தான் கருதுவர். நவராசாவின் குடும்பம், பற்குணத்தின் குடும்பம் மிகவும் வறுமைப்பட்டது. பற்குணத்தின் நல்ல குணத்தை அறிந்த பெரும் வர்த்தகரான பரஞ்சோதி தனது மகளை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்துள்ளார். இவற்றை அறிந்தும் பலர் அவற்றை உணர்கிறார்கள் இல்லை'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''நல்லவர்களைக் கெடுப்பவர்கள் தான் பலர். கெட்டவர்களைக் கொண்டு தமது காரியங்களைச் செய்விப்போர் பலர்'' என்றது லட்சுமி எலி.

**974. ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.**

''கற்பு நெறி தவறாத ஒரு பெண்ணைப் போல ஒழுக்க நெறி தவறாது வாழ்பவன் எப்பொழுதும் பெருமையுடன் வாழ்வான். இந்த ஊரில் உள்ளவர்களைப் பார். கதிரேசன், நமசிவாயகம், பரஞ்சோதி போன்றவர்களின் வாழ்க்கையில் எவ்வளவு போராட்டங்கள் வந்தன. அந்த நிலையிலும் அவர்கள் ஒழுக்கம் தவறவில்லை. தவறியிருந்தால் ஊரவர் அவர்கள் பணக்காரர்களானாலும் பழையவற்றைச் சொல்லிக் கேலி செய்வர். பஞ்சம் போகும். பஞ்சத்தில் பட்ட வடுப்போகாது என்று எனது தந்தை சொல்வார். அது உண்மை. உருத்திரகுமாரன் பெரும் தனவந்தன். அவனது முன்னோர் செய்த தவறுகளை மிகைப்படுத்திச் சொல்வோர் தான் அதிகம். அதனால் வறுமைப்பட்டாலும் ஒழுக்கமாக வாழவேண்டும்'' என்று திருநாவுக்கரசு கூறியவர்'' என்றது குமரன் எலி.

''எதற்கும் வசை சொல்லாவிட்டால் மனிதர்களுக்கு உண்டது சமிக்காது'' என்றது லட்சுமி எலி.

**975. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்.**

''ஐயா, நான் வசதியில்லாதவன். நீங்கள் பெரும் தனவந்தர். அப்படி இருந்தும் ஒருவனை விரும்பிக் கேவலப்பட்ட எனது மகளை உங்களது மகனுக்குத் திருமணம் செய்ய விரும்புகிறீர்கள். ''செய்வதற்கு முடியாத அரிய செயல்களை முறைப்படி செய்து முடிப்பவர்கள் தான் தன் நலமில்லாத பெரியவர்கள்'' என்று கதிரேசன் அடிக்கடி சொல்வார். ''நீங்கள் பெரியார்'' என்று பேசமுடியாது அவதிப்பட்டான் கஜேந்திரன். அதைப் பார்த்த திருநாவுக்கரசு சொன்னார், ''எமது மண்ணில் ஒரு புனிதமான போர் நடைபெற்றது. எனது மகன் வெளிநாட்டில் இருந்து இயக்கத்திற்கு உதவிகள் செய்தவன். நான் இயக்க ஆதாரவாளன். போரால் பாதிக்கப்பட்ட பெண்கள், விதைவைகளுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் தான்

நான் இங்கு வந்தேன். உனது மகள் உத்தமி. ஊரவன் என்ற நோக்கில் அவள் கதைக்க, அதை அவன் ஊரில் தவறாகக் கதைத்து வதந்தியைப் பரப்பி விட்டான். இதை நான் ஆராய்ந்து அறிந்தேன். அழகும், நல்ல பண்பும், கல்வியறிவும் உடைய ஓர் உத்தமமான பெண் பாதிக்கப்படக் கூடாது என்றதால் தான் விரும்பினேன்'' என்று திருநாவுக்கரசு கூறியவர்'' என்றது குமரன் எலி.

''பிள்ளைப் பெற்ற பெண்களையும் காசுக்காகச் செய்வார்களே தவிர இப்படியான பெண்களை ஏறெடுத்தும் பாராத இயக்க ஆதரவாளர்கள் தான் இங்கிருக்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**976. சிறியார் உணர்ச்சியுள் இல்லைப் பெரியாரைப்**
**பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.**

''அப்போது கோவிலுக்கு வந்த காவியா சொன்னாள், ''ஐயா, நான் அவனுடன் கதைக்கவில்லை, அவனுக்குக் கடிதம் கொடுக்கவில்லை. அவனைச் சந்திக்கக் கூட இல்லை. ஏதோ ஓர் உணர்வால் உந்தப்பட்டுச் சிரித்தேன். அவ்வளவு தான். அதை அவன் காது, மூக்கு வைத்துக் கதைத்ததால் ஊரவர் அவனது பேச்சைத் தான் நம்புகின்றனர். காலையில் இருவர் வந்து அவனைத் திருணம் செய்யும் படி வற்புறுத்தினர். எதுவும் நடக்காவிட்டாலும், பலவும் நடந்ததென்று ஊரவர் கூடிக் கதைக்கையில் உங்கள் மகன் அதை நம்பினால் எனது வாழ்வு சீரழிந்து விடும். அதனிலும் பார்க்க நான் திருணம் செய்யாதிருக்கவே விரும்புகிறேன்'' என்று அழ, திருநாவுக்கரசு சொன்னார், ''காவியா, பெரியவர்கள் தம்மை விரும்பிப்போற்ற வேண்டும் என்ற நல்லெண்ணம் இல்லாத இழிந்தவர்களின் கதைகளை எனது மகன் கேட்கமாட்டான். நான் அவனுக்கு நடந்த சம்பவங்கள் அனைத்தையும் கூறிய பின் இரண்டு நாட்கள் கழித்துத் தான் அவன் தனது சம்மதத்தைத் தெரிவித்தான். இது அவசரப்பட்டு எடுத்த முடிவல்ல, ஆராய்ந்து பார்த்து எடுத்த முடிவு'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''உங்கை காதலித்துச் சோடியாகத் திரிந்த பலர் காதலை மறந்து வசதியான இடத்திலை செய்து மகிழ்வாக வாழுகினை. மனிதருக்கு எல்லாவற்றையும் விடப்பணம் தான் முக்கியம். பணத்தைக் கூடக் கொடுத்தால் எதுவும் நடக்கும்'' என்றது லட்சுமி எலி.

**977. இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்**
**சீரல் லவர்கண் படின்.**

''காவியா, இழிந்தவர்களிடம் செல்வமும் சிறப்பும் சேர்ந்து விட்டால் அவர்கள் எல்லை மீறிச் செயற்பட்டுத் தமது மதிப்பைக் குறைத்துக் கொள்வார்கள். காலையில் உருத்திரகுமாரன் என்னைச் சந்தித்து மிகவும் அருவருக்கத்தக்க முறையில் நடந்து கொண்டான். நான் சொன்னேன், ''உனது மகனைச் செய்ய உனக்கு விருப்பமா...? இல்லையே. பிறகேன் பயனில்லாத கதைகளைக் கதைக்கிறாய்? விருப்பமென்றால் சொல்லு நான் காவியாவிடம் கதைக்கிறேன்'' என்றேன். மறுபேச்சுப் பேசாது எழுந்து சென்று விட்டான். இவர்களெல்லாம் கற்றவர்கள் என்று சொல்லிக் கொண்டு அம்மணமாக வீதிகளில் சென்று வருபவர்கள். மானத்தைப் பற்றி எண்ணாது அடுத்தவர்களைக் கெடுப்பவர்கள்'' என்று திருநாவுக்கரசு காவியாவுக்குச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''தனது பிள்ளைக்குச் செய்ய விரும்பாதவன் பிறகேன் அதைப் பற்றிக் கதைப்பான்'' என்று கேட்டது லட்சுமி எலி.

**978. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து.**

“காவியா, கதிரேசனும் நமசிவாயகமும் காலையில் என்னைச் சந்தித்து வாழ்த்தியவர்கள். ஒருவன் பணக்காரனாகவோ, கல்வியறிவுள்ளவனாகவோ, கல்வியறிவற்றவனாகவோ இருப்பதில் பயனில்லை. பெருமையான பண்புகள் இருத்தல் வேண்டும். நீ நல்லவன், பெருமையானவன், அரிய செயல்களைச் செய்பவன்” என்று பாராட்டினார். இது எனக்குப் போதும். அற்பர்கள் தான் பெருமைப்பட முடியாதவற்றைப் பெருமையாகக் கருதி ஊரெல்லாம் உழறுவார்கள். உனது ரெலிபோன் இலக்கத்தை நான் மகனிடம் கொடுத்துள்ளேன். அவன் கதைப்பான். அதன் பின் மகிழ்வாய் இரு” என்று திருநாவுக்கரசு சொன்னவர்” என்றது குமரன் எலி.

“ஊருக்கு உவர் சொல்ல வேணுவே. போன மாசம் இவரிடம் படித்த ஒருவன் வெளிநாட்டால் வந்து குடித்து விட்டு வெறியேற இவருக்கு அடித்தவன். பிறகு தன்னைப் பற்றி உயர்வாகப் பேச என்ன இருக்கு?” என்று கேட்டது லட்சுமி எலி.

**979. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை**
**பெருமிதம் ஊர்ந்து விடல்.**

“காவியா, மற்றவர்கள் எமது செயல்களைப் பாராட்ட வேண்டுமே தவிர நம்மை நாம் உயர்த்திப்பேசலாகாது. பெருமையை விரும்புபவன் அடக்கமாக இருத்தல் வேண்டும். நான் வெளிநாடு செல்லுமுன் மிகவும் கஷ்டப்பட்டேன். வாங்கிய கடன்களைக் கொடுக்கவில்லை. பல தவறுகளை வறுமை காரணமாகச் செய்தேன். அதனால் தான் நான் அடக்கமாக இருக்கிறேன். நான் கர்வங்கொண்டு சிறுமைத்தனமாக நடந்தால் மக்கள் பழையவற்றிற்குக் கைகால் வைத்துக் கதைத்துச் சிரிப்பர். அடக்கம் எம்மை உயர்த்தும்” என்று திருநாவுக்கரசு சொன்னவர்” என்றது குமரன் எலி.

“ஆர் தான் தவறு செய்யவில்லை. தவறு செய்வது இயல்பு. அடக்கமாக இருந்தால் தவறுகள் மன்னிக்கப்படும்” என்றது லட்சுமி எலி.

**980. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்**
**குற்றமே கூறி விடும்.**

“பிறர் எமக்குத் தீமை செய்தாலும் அவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். இது பகையை விலக்கி நட்புணர்வை உண்டாக்கும். அறிந்தோ, அறியாமலோ குற்றம் செய்தால் அதை அறிந்தவர்கள் மறைப்பது தான் பெருந்தன்மை. அவர்கள் செய்த குற்றங்களைப் பெரிதுபடுத்தி விமர்சிப்பது கேவலமானது. அதனால் நீ எதற்கும் கவலைப்படாதே. மனச்சாட்சியின் படி மனிதர்கள் வாழவேண்டும். மிகுதியைக் கடவுள் பார்த்துக் கொள்வார். நல்லவற்றை நினைப்பவர்களும், செய்பவர்களும் செழிப்புடன் வாழ்கிறார்கள். இதை உணர்ந்தால் மனிதன் பெருமைக்குரியவனாகிறான்” என்று காவியாவுக்குத் திருநாவுக்கரசு சொன்னவர்” என்றது குமரன் எலி.

“யோசித்துப் பார்த்தால் திருநாவுக்கரசு சொல்வது தான் உண்மை. ஆனால் யார் யோசிக்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

## சான்றாண்மை – 99

**981. கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு**

“திருநாவுக்கரசுவின் இளையமகன் வாகீசன் இன்று ரெலிபோனில் காவியாவுடன் கதைத்தவனாம். காவியா அச்சத்துடன் தான் கதைத்தவளாம். அவன் துணிவைக் கொடுத்தவனாம். “நல்ல பண்புள்ள

மனிதர்கள் நல்லவற்றைச் செய்வது தமது கடமை என்று நினைப்பார்கள். நான் இயக்கத்தின் உறுப்பினன். எமது சமுதாயம் பாதிக்கப்படுவதை நான் விரும்பமாட்டேன். அப்பா உனது கதைகள் முழுவதையும் கூறிய பின் அவர் எதற்காக அதைச் சொல்கிறார் என்று புரிந்து அவர் கேட்காமலே உன்னைத் திருமணம் செய்யச் சம்மதித்து விட்டேன். இனி எதற்கும் கவலைப்படாதே. விரைவில் ஊருக்கு வருவேன்'' என்றவனாம். இதைக் காவியா தனது நண்பியான கௌசல்யாவுக்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''இயக்கம் என்று சொல்லிப் பலர் தங்களது காரியங்களைத் தானே பார்த்தவை. இவன் வேறமாதிரி'' என்றது லட்சுமி எலி.

**982. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத் துள்ளதூஉம் அன்று.**

''கோவிலுக்கு வந்த கதிரேசனைக் கண்ட கஜேந்திரன் எழுந்து நின்று அவரை வரவேற்றான். அவர் சொன்னார், ''கஜேந்திரா நல்லவர்கள் எப்போதும் நன்மையைத் தான் செய்வார்கள். நல்லவர்களின் பிள்ளைகளும் நல்லதையே செய்வார்கள். சான்றோர்களின் சிறப்பு என்பது அவர்களின் சொல்லிலும், செயலிலும் தான் தங்கியுள்ளதே தவிரப் பணம் பொருளில் அல்ல. மனம் உண்டானால் இடமுண்டு என்பர். வாகீசன் தனது தந்தையின் பெருமையை நிலைநிறுத்தி விட்டான். நல்லது. காவியாவுக்கு எனது வாழ்த்தைத் தெரிவி'' என்று சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''வெளிநாட்டில் உள்ளவன் எக்கச்சக்கமாகச் சீதனம் வாங்கியிக்கலாம். மடையன் என்று சனம் கதைக்கும்'' என்றது லட்சுமி எலி.

**983. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்துசால் பூன்றிய தூண்.**

''கஜேந்திரா, அன்பு, நாணம், உதவும் பண்பு, இரக்கம், உண்மை ஆகிய ஐந்தும் தான் சால்பு என்ற மனிதாபிமானத்தைத் தாங்கும் தூண்களாகும். உண்மையில் திருநாவுக்கரசு ஒரு மாமனிதன். வாகீசன் அவரது புதல்வன் என்பதை நிரூபித்து விட்டான். அன்பு இருக்கும் இடத்தில் உதவும் பண்பிருக்கும். உதவும் பண்பு இருக்கும் மனதில் நாணமும், உண்மையும் இருக்கும். அதனால் தான் திருநாவுக்கரசுவும், வாகீசனும் ஒப்புக் கொண்டனர். இனிமேல் நீ தீயசெயல்கள் எவையும் செய்யக்கூடாது. உனது பிள்ளைகள் கல்வியாளர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்'' என்றவர்'' என்றது குமரன் எலி.

''சனம் வாகீசனுக்கு வருத்தம் இருக்குதென்று கதைக்குது. சந்திரமண்டலத்தில் நடப்பதும் ஊருக்குத் தெரியும்'' என்றது லட்சுமி எலி.

**984. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு**

''அப்போது அங்கே திருநாவுக்கரசு வந்தார். அவரைக் கண்டதும் கதிரேசன் சொன்னார், ''அரிய செயலலைச் செய்துள்ளீர்கள். தவம் என்பது ஓர் உயிரை வருந்தாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது. சால்பு என்பது பிறரது தீமையை எடுத்துச் சொல்லாத நல்ல பண்பினை அடிப்படையாகக் கொண்டது'' என்று கூறும் போது திருநாவுக்கரசு சொன்னார்,''இவ்வூரவரில் சிலர் எனது மகன் நோயாளியென்றும், குடிகாரன் என்றும். அதனால் தான் காவியாவைச் செய்யச் சம்மதித்தான் என்றும் கதைக்கிறார்கள். அப்படி எதுவும் இல்லை'' என்று கண்கலங்கினார் திருநாவுக்கரசு'' என்றது குமரன் எலி.

“ஒருவரது முன்னேற்றம் பலருக்கு வயிற்றெரிச்சல். இங்கு பல இரகசியக் குடிகாரா் இருக்கிறாா்கள்” என்றது லட்சுமி எலி.

**985. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

“திருநாவுக்கரசு இவைகள் பற்றிக் கவலைப்படாதே. ஆற்றல் உள்ளவா்களின் பெரிய ஆற்றல் பொறுமை என்ற அடக்கம். அது பகைவரையும் பணியவைக்கும்” என்பாா்கள். உனது மகனைப் பற்றிக் கேவலமாகக் கதைப்பவா்களை உனக்குத் தெரியும். இருந்து அதைப் பற்றி நீ கவலைப்படாததால், கதைத்த பலா் கதைப்பதை நிறுத்தி விட்டாா்கள். ஊாில் இப்போ ஒவ்வொரு வீட்டிலும், வெளிநாட்டவா்கள் இருக்கிறாா்கள். எனது இனத்தவா்கள் பலா் வாகீசன் மிகமிக நல்லவன் என்று கூறினாா்கள். காவியாவின் மாமன் காவியாவுக்கு வாகிசனைத் திருமணம் செய்ய நீ கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்” என்றவராம். ஊா்வாயை மூட உலை மூடி இருக்கா என்ன?” என்றவா்” என்றது குமரன் எலி.

“கொஞ்ச நாட்களுக்குக் கதைத்தது வயிற்றெரிச்சலை மாற்றட்டன்” என்றது லட்சுமி எலி.

**986. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்.**

“கதிரேசன் நமசிவாயகத்திற்குச் சொன்னாா்,“தம்மை விடத் தாழ்ந்தவாிடத்தில் ஒருவா் திருமண உறவு வைத்தாரானால் அவரது சால்பை எப்படிச் சொல்வது. திருநாவுக்கரசு இப்போதுள்ள நிலையில் பல கோடீஸ்வரா்கள் பெண் கொடுக்கத் தயாராக இருந்தும் கஜேந்திரனின் மகளை மருமகளாக்கியது எவ்வளவு பெரிய பெருந்தன்மை. காவியாவைப் பற்றிப் பலா் கேவலமாகச் சொல்லியும் மனதை மாற்றாத தன்மை அவரது சால்பினை உரைத்துப் பாா்க்கும் உரைகல்லாகும். நான் நினைத்துக்கூடப் பாா்க்கவில்லை. இப்போதும் அது எனக்கு ஆச்சாியத்தைக் கொடுக்கிறது” என்று கதிரேசன் சொன்னவா்” என்றது குமரன் எலி.

“எம்மைப் போலத் தான் மனிதா்களும் நாம் சேமித்து வைக்கும் உணவுகள் யாவும் வெள்ளத்தோடு போய் விடுகின்றன. மனிதா் சேமிப்பதும் சீதனம் என்ற பெயாில் யாரோ அனுபவிக்கிறாா்கள்” என்றது லட்சுமி எலி.

**987. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.**

“திருநாவுக்கரசு கோவிலடியில் நின்ற போது அவரது மைத்துனன் சந்திரசேகரன் அங்கு வந்து சொன்னாா், “மச்சான் திருமணமென்பது ஆயிரம் காலத்துப்பயிா். உனது காணியை உருத்திரகுமாரன் தனது பெயாில் கள்ள உறுதி எழுதிய போது அதற்குச் சாட்சிக் கையெழுத்திட்டவன் கஜேந்திரன். அவனது மகளை உனது மகனுக்குத் திருமணம் செய்யப்போவதாக அறிந்தேன். வேறு நல்ல பெண் கிடைக்கவில்லையா?” என்று கேட்ட போது திருநாவுக்கரசு சொன்னாா், “தனக்குத் துன்பம் செய்தவா்களுக்கும் நன்மை செய்யாதவா் சால்புடையவா் என்று எப்படிச் சொல்லலாம்? தாய் நாய் கடித்ததற்காகக் குட்டியைக் கடிக்க முடியுமா..?” என்று கேட்டவா்” என்றது குமரன் எலி.

“மனிதா்களுக்கு எதைச் செய்தாலும் நன்மை சொல்லமாட்டாா்கள் என்று திருநாவுக்கரசுவிற்குத் தொியும்” என்றது லட்சுமி எலி.

**988. இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின்.**

“மச்சான், ஒருவருக்குச் சால்பு என்றும் பெருந்தன்மை இருந்தால், அவனுக்குப் பொருள் இல்லாததால் ஏற்படும் வறுமை ஒரு குறையாகாது. காவியா பெருந்தன்மை மிக்கவர், வலிமையானவள், அறிவாளி. ஊரே மதிக்கும் உத்தமி. இதற்குமேல் என்ன வேண்டும். நீ ஒருமுறை சென்று அவளுடன் பேசிப்பார். அதன் பின் சொல். எமது பழைய நிலையைத் தான் நான் நினைத்துப் பார்க்கிறேன். ஊரில் கூலி வேலை செய்த நினைவு இப்போதும் மனதில் உள்ளது. பணம் வந்தால் முன்பு செய்த செயல்கள் உயர்ந்து விடுமா என்ன?” என்று திருநாவுக்கரசு கேட்டவர்” என்றது குமரன் எலி.

“பழசை யார் நினைக்கினை. பிச்சையெடுத்த பலர் பணம் சேர்ந்த பிறகு கோணக் கோணக் காய் என்ன காயென்று கேட்கினை” என்றது லட்சுமி எலி.

**989. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்.**

“நான் ஒரு காலத்தில் மிகவும் வறுமைப்பட்டவனாக இருந்து எனது முயற்சியால் முன்னேறி இந்த நிலையை அடைந்தேன். இப்பொழுது முன்பு என்னைப் போல இருந்தவர்களை மதித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறேன். வசதியற்றவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், போராளிகளுக்கு என்னாலான உதவிகளைச் செய்கிறேன். உலகம் அழியும் ஊழிக்காலம் வந்தாலும் நான் செய்யத் தொடங்கிய நற்பணிகளை முடிக்காமல் விடமாட்டேன்” என்று சந்திரசேகரனுக்குக் கூறியவர்” என்றது குமரன் எலி.

“தாமும் நன்மை செய்யார்கள். நன்மை செய்பவரையும் செய்யவிடமாட்டார்கள்” என்றது லட்சுமி எலி.

**990. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலத்தான்**
**தாங்காது மன்னோ பொறை.**

“சந்திரசேகரம் நல்லவர் ஒருவர் ஊரில் இருந்தால் அவருக்காக வானம் இரங்கி மழை பெய்யும்” என்று பெரியவர்கள் சொல்வார்கள். மரம் செடி கொடிகளெல்லாம் தன்நலங்கருதாது உயிர்களுக்கு உதவுவதால் தான் அவை வாழ்கின்றன. அது போல நல்லவர்கள் சிலர் இருப்பதால் தான் இப்பூமி அவர்களுடன் சேர்த்துத் தீயவர்களையும் தாங்குகிறது. இல்லாவிட்டால் பூமி தீயவர்களின் பாரத்தைச் சுமக்க முடியாது அவதிப்படும். நான் காவியாவின் நல்ல பண்புகளால் கவரப்பட்டுத் தான் இந்த முடிவை எடுத்தேன். இனிமாற்ற மாட்டேன்” என்றவர்” என்றது குமரன் எலி.

“மனவுறுதி இல்லாதவர்கள் முடிவுகளைப் பணம் பொருளுக்காகச் சாட்டுப்போக்குச் சொல்லி மாற்றுவர். திருநாவுக்கரசு அப்படிச் செய்யாது” என்றது லட்சுமி எலி.

## பண்பு உடைமை– 100

**991. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

“அதிகாலையில் கோவிலுக்கு வந்த கதிரேசன், திருநாவுக்கரசுவின் பெயரில் அர்ச்சனை செய்தார். பின்பு பிரசாதத்தைக் கொண்டு திருநாவுக்கரசின் வீட்டுக்குச் செல்ல ஆரம்பித்த போது திருநாவுக்கரசு பலருடன் கோவிலுக்கு வந்தார். கதிரேசனைக் கண்டதும் அவர் கதிரேசனை வணங்கக் கைகூப்பிய போது கதிரேசன் சொன்னார், “கோவிலில் சுவாமியைத் தவிர வேறு எவரையும் வணங்கக் கூடாது. இன்று

உங்களது பிறந்தநாள். எல்லோரிடத்தும் தகுதி பாராது மிகவும் எளிமையாகப் பழகும் பண்புடைய உங்களை நீடூழி வாழ்கவென்று வாழ்த்துகிறேன். நூறாண்டுகள் இப்படியே வாழவேண்டும்'' என்றவர்'' என்றது குமரன் எலி.

''ஆயிரக்கணக்கில் வைத்திருப்பவர்களே திமிர் பிடித்துத் திரிகிறார்கள். கோடீஸ்வரரான திருநாவுக்கரசு மிகமிக எளிமையாக வாழ்கிறார்'' என்றது லட்சுமி எலி.

**992. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

''கதிரேசனும் திருநாவுக்கரசுவும் கோவிலடியில் கதைத்துக் கொண்டு நின்ற போது காவியா அங்கே வந்தாள், ''மாமா, உங்களைத் தேடி வீட்டுக்குச் சென்றேன். மாமி கோவிலுக்குச் சென்றதாகச் சொன்னதால் இங்கு வந்தேன். மாலை நேரம் வீட்டில் சிற்றூண்டி வகைகள் செய்து கொண்டு வருகிறேன். உங்கள் நண்பர்கள் இனத்தவர்களை அழையுங்கள்'' என்றாள். அதை எதிர்பாராத திருநாவுக்கரசு சொன்னார், ''இன்று மதியம் மடத்தில் உணவு கொடுக்கிறேன். இது தேவையா?'' என்று கேட்டார். அப்போது காவியா சொன்னாள், ''பல வருடங்களுக்குப் பின் ஊருக்கு வந்துள்ளீர்கள். இன்னும் சில நாட்களில் திரும்பிச் சென்று விடுவீர்கள். பின் எப்போது வருவீர்களோ தெரியாது. ஊரில் ஒரு வைபவத்தை நடத்த நானும் எனது கணவரும் விரும்புகிறோம்'' என்றாள். அப்போது கதிரேசன் சொன்னார், ''காவியா சொல்வது உண்மை. நல்ல குடியிற் பிறத்தல், பண்புள்ளவர்களாக வாழுதல் ஆகிய இரண்டும் மேன்மை அடைவதற்கான வழிகள். நீங்கள் அத்தகையவர். எமக்கு உணவு வீட்டில் தாருங்கள்'' என்றார்'' என்றது குமரன் எலி.

''உது கனபேருக்கு வயிற்றெரிச்சலாக இருக்கும்'' என்றது லட்சுமி எலி.

**993. உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க**
**பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.**

''எல்லோரும் உடம்பால் ஒத்திருக்கிறார்கள். ஆனால் மனிதர்கள் என்று சொல்ல முடியாது. நிறைவான பண்புகளால் ஒத்திருப்போரே மேன்மக்கள். நீங்கள் பெரியவர். நற்பண்புகளை உடையவர். எனக்கும் ஊரவர்களுக்கும் தெய்வம் போன்றவர். நான் எனது வீட்டில் செய்ய விரும்பாமைக்குக் காரணம் எனது தந்தை. அவர் இப்போது திருந்தி விட்டதாகக் கூறினாலும் பழைய பகை கருதிப் பலர் வரமாட்டார்கள். நிறைந்த பண்புகளை உடைய உங்களின் வீட்டுக்கு எல்லோரும் வருவார்கள்'' என்று காவியா கூறிய போது கதிரேசன் சொன்னார்,''நீ சொல்வது சரி. ஒருவர் கூட வராது விட்டால் அது திருநாவுக்கரசின் நல்ல பண்புகளுக்கு இழுக்காகும்'' என்றவர்'' என்றது குமரன் எலி.

''அவள் புத்திசாலி. புத்திசாதுரியமாகத் திருமணக் கலப்பை நடத்தி விட்டாள் என்று சனம் சொல்லும்'' என்றது லட்சுமி எலி.

**994. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு.**

''அன்று மாலை திருநாவுக்கரசின் வீட்டில் எல்லோரும் வந்திருந்தனர். கதிரேசன் சொன்னார், ''அறத்தையும் நலத்தையும் பெரிதும் விரும்பி மக்களுக்கு உதவிகள் பலவும் செய்து பயன்படும் படியாக வாழும் திரநாவுக்கரசு இன்னும் நூறாண்டுகள் பயனுள்ள செயல்களைச் செய்து வாழ இறைவன் அருளல்

வேண்டும்'' என்று கூற நமசிவாயகம் சொன்னார், ''இன்று திருநாவுக்கரசின் சேவையை இவ்வூர் பாராட்டுகிறது. அதை ஏற்பாடு செய்த அவரது மருமகள் காவியாவுக்கு நன்றி என்றவர்'' என்றது குமரன் எலி.

''சேவை செய்தால் போற்றுவதும், தீயதைச் செய்தால் ஏசுவதும் மனிதரின் பண்பு. இப்போ பெரியவர்கள் எனச் சொல்வோர் சபைகளிலிருந்து திருடர்களையும் போற்றுகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**995. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு**

''கோவில் குருக்கள் சொன்னார், ''திருநாவுக்கரசு எமது ஊர்க்கோவில்களுக்கு நிறையப் பணஉதவி செய்துள்ளார். மக்களுக்கும் செய்துள்ளார். அவர் விளையாட்டாகக் கூட ஒருவரை இகழ்ந்து பேசியதில்லை. ஏனென்றால் தனக்குத் துன்பம் செய்தவனுக்குத் தான் துன்பம் செய்தால் அவன் துயரப்படுவான் என்ற காரணத்தால் பிறரின் இயல்புகளை அறிந்து அவர்களது மனம் நோகாதபடி நடக்கும் உத்தமர் திருநாவுக்கரசு. அதனால் பகைவர்கள் கூட அவரின் மீது அன்பு கொண்டுள்ளனர்'' என்று குருக்கள் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''குருக்களின் மகளின் திருமணம் சீதனம் இல்லாததால் தடைப்பட்டது. பணத்தைக் கொடுத்துத் திருமணத்தை நடத்தியவர் திருநாவுக்கரசு. அப்ப சொல்லத் தானே வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**996. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.**

''அப்போது யாரும் எதிர்பாராத வேளையில் உருத்திரகுமாரன் எழுந்து சொன்னான்,''பண்பு மிகுந்தவர்களான திருநாவுக்கரசு, கதிரேசன், நமசிவாயகம், பரஞ்சோதி போன்றவர்கள் வாழ்வதனால் தான் எமது கிராமம் மிகவும் செழிப்புடன் இருக்கிறது. அவர்கள் இல்லாவிட்டால் மாயான பூமி போலத் தான் காட்சியளிக்கும். இன்று பிறந்த நாளைக் கொண்டாடும் திருநாவுக்கரசு ஐயாவுக்கு எனது வாழ்த்துக்கள்'' என்றவன். அதற்குச் சனம்,''இவன் ஏதோ பெரியதாகத் திட்டமிட்டுள்ளான்'' என்றது குமரன் எலி.

''சோழியன் குடும்பி சும்மா ஆடாது. இவற்றை பேச்சை சனமே மதிக்கேல்லை. திருநாவுக்கரசு மதிக்குமே'' என்றது லட்சுமி எலி.

**997. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்.**

''சனம் உருத்திரகுமாரனது பேச்சைக் கேட்டு அதிசயத்துடன் கதைத்த போது பற்குணம் சொன்னான்,''திருநாவுக்கரசு ஐயா படிக்காத மேதை. உலகின் நடைமுறை பற்றி முழுமையாகத் தெரிந்து அதன் படி யாரையும் நோக வைக்காது வாழ்பவர். ஒருவர் அரத்தைப் போல கூர்மையான அறிவையுடையவராக இருந்தாலும் அவரிடத்தில் நல்ல பண்புகள் இல்லையென்றால் அவர் மரத்திற்குச் சமமானவர் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அரம் போன்ற கூர்மையான புத்தியுள்ள பண்பாளர் திருநாவுக்கரசு. அவர் இன்னும் பல காலம் வாழ்ந்து ஊருக்குச் சேவை செய்ய வேண்டும்'' என்றவன்'' என்றது குமரன் எலி.

''நல்ல அடி. சனத்திற்கு மகிழ்ச்சியாக இருந்திருக்கும்'' என்றது லட்சுமி எலி.

**998. நண்புஆற்றா ராகி நயமில செய்வார்க்கும்**

**பண்புஆற்றா ராதல் கடை.**

“அதற்குப் பதிலளித்துப் பேசிய திருநாவுக்கரசு சொன்னார், “நட்புக் கொள்ள முடியாமல் தீமைகளையே செய்பவர்களுக்கும் நாம் பண்போடு நன்மைகள் செய்யாவிட்டால், ஆறாவது அறிவு படைத்த மனிதர் என்று எப்படிச் சொல்வது. ஆறாவது அறிவு ஆய்வு செய்வது. அறியாமையால் தீமைகள் செய்வோரைப் புரிந்து அவர்களுக்கு நன்மை செய்வது. ஆனால் இப்போ ஐந்தறிவுள்ளவை ஆறாம் அறிவுள்ளவை செய்வதை விடச் சிறப்பாகச் செய்கின்றன” என்றவர்” என்றது குமரன் எலி.

“உண்மையைச் சொல்லியிருக்கிறார். இதுகனபேருக்குப் பிடிக்காவிட்டாலும் வெளிக்காட்டிக் கொள்ளமாட்டார்கள்” என்றது லட்சுமி எலி.

**999. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன்று இருள்.**

“பிறந்த நாளுக்கு வந்த எல்லோரும் சென்ற பின் கதிரேசன் திருநாவுக்கரசுவிற்குச் சொன்னார்,“மிகவும் மகிழ்வாக இருந்தது. அதற்குக் காரணமான காவியாவைப் பாராட்ட வேண்டும். எவருக்கும் தெரியாதவாறு இரகசியமாகச் செயற்பட்டு உரிய நேரத்தில் உனக்குச் சொல்லிச் சம்மதத்தைப் பெற்றாள். முதலே சொல்லியிருந்தால் நீ சம்மதித்திருக்க மாட்டாய் என்று அவளுக்குத் தெரியும். அவள் திட்டமிட்டுச் செயலாற்றுபவள். பிறருடன் மகிழ்வுடன் கலந்து பழகுபவள். அப்படிப் பழகாதவர்களுக்கு ஒளியுள்ள பகல் வேளையும் இருள் நிறைந்ததாகவே இருக்கும்” என்றவர்” என்றது குமரன் எலி.

“கதிரேசன் அப்படிச் சொல்கிறார். சனம் அவள் திட்டமிட்டு ஏமாற்றுகிறாள் என்று சொல்லுது” என்றது லட்சுமி எலி.

**1000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யால்திரிந் தற்று.**

“மாமா செல்வம் எல்லோரையும் சென்றடையும். உயர்ந்த பண்புகள் இல்லாதவனிடம் சென்றடைந்த செல்வம் வெட்கக்கேடானது. அது நல்ல பால் வைக்கப்பட்ட பாத்திரத்தின் தன்மையால் கெட்டுப்போவதைப் போன்றது. எமது சிறுவர் பாடசாலையில் ஐம்பது பிள்ளைகள் படிக்கிறார்கள். அக்கட்டிடம் அமைந்த காணி சிதம்பர சொத்து. அதைக் கதிரேசனின் பூட்டனார் பராமரித்தவர். அவர் இறக்க அதை உருத்திரகுமாரனது பேரனார் பராமரித்தவர். அதைப் பின் உருத்திரகுமாரனின் தந்தை கள்ள உறுதி முடித்துத் தனதாக்கிக் கொண்டார். இப்போ உருத்திரகுமாரன் அதை விடும்படி கூறுகிறான். ஊரவர் எவரும் அதில் அக்கறைப்படவில்லை. கதிர்காமநாதன் இருப்பது சிதம்பர சொத்துக்காணி. அவருக்குப் பிள்ளைகள் இல்லை. அந்நிலத்தில் சிறுவர் பாடசாலையைக் கட்டும் படி கேட்கிறார். அவரை வரச் சொன்னேன். வந்திருக்கிறார். அவருடன் கதைத்துச் செயற்படுங்கள்” என்றாள் காவியா. “ஐயா, நான் இருப்பது சிதம்பரக் காணியில் எனக்குப் பிள்ளைகள் இல்லை. எனக்கு எண்பத்தேழு வயது. எனக்குப் பின் யாராவது அக்காணியை ஆக்கிரமித்தால் பிரச்சினை. அதனால் அதற்குள் கட்டிடத்தைக் கட்டுங்கள்” என்று கதிர்காமநாதன் கூறினார்” என்றது குமரன் எலி.

“உயர்ந்த பண்புள்ளவர்கள் எப்போதும் உயர்ந்த சிந்தனை உள்ளவர்களாக இருப்பர். உருத்திரகுமாரன், கதிர்காமநாதனிடம் சென்று அக்காணியைத் தந்தால் ஐம்பதினாயிரம் ரூபா தருவதாகச் சொன்னவன். கிழவன் மறுத்திட்டுது. இப்ப அந்தக் காணி பத்து லட்சத்திற்குக் காணும்” என்றது லட்சுமி எலி.

## நன்றியில் செல்வம் - 101

**1001. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்**
**செத்தான் செயக்கிடந்தது இல்.**

“கதிர்காமநாதன் திருநாவுக்கரசை வணங்கி விட்டுச் சொன்னார், “ஐயா, மிகவும் வருத்தியும், அடாவடித்தனங்கள் செய்தும் பெருமளவு பொருளைச் சேர்த்து வைத்து அதை அனுபவிக்காமல் வைத்திருப்பவர்கள் உயிரோடு இருந்தாலும் அவர்கள் பிணம் தான். நீங்கள் பெருமளவு சொத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கிறீர்கள். இப்போதைய இளைஞர்களும் அவர்களது பெற்றோரும் சீதனத்திற்கு அலைகிறார்கள். சென்றவாரம் ஓர் இளைஞனுக்கு எமது ஊரில் திருமணம் பேசப்பட்டது. சீதனம் பேசி ஒத்துக் கொண்ட பின் இன்னொரு தரகர் ஒத்துக்கொண்டவர்களிலும் பார்க்கப் பத்து லட்சம் ரூபா கூறத் தருவதாகச் சொன்னதும் அவர்கள் முன்னயதை மறுத்து விட்டுப் பின்னயதைச் செய்தனர். அப்படியான உலகில் சீதனம் பெறாமல் பெண் எடுக்கும் நீங்கள் ஒரு மகான். காவியாவின் வீட்டுக்கு அருகில் தான் நான் இருக்கிறேன். மனைவியும், பிள்ளைகளும் இல்லாத எனக்கு அவள் தான் உதவி. அவளுக்குத் தான் நான் இருக்கும் காணியைக் கொடுக்க விரும்பினேன். அவள் தான் இந்த யோசனையைச் சொன்னவர்” என்று கதிர்காமநாதன் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“நல்ல மனம் படைத்தவர்களை யாராலும் கெடுக்க முடியாது” என்றது லட்சுமி எலி.

**1002. பொருளானாம் எல்லாமென்று ஈயாது இவறும்**
**மருளானாம் மாணாப் பிறப்பு**

“இவ்வளவு உயர்ந்த பண்புடைய காவியாவை நான் மருமகளாக அடையக் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். பொருளால் தான் எல்லாம் நடக்கும் என்று கருதி, யாருக்கும் உதவி செய்யாது பாதுகாத்து வைத்திருப்பவனின் செல்வம் யார் யாருக்கோ உரிமையாகித் தன் பெருமையை இழக்கும். நான் உங்கள் காணியில் சிறுவர் பாடசாலையை அமைத்துத் தருகிறேன். உங்கள் சகல தேவைகளையும் காவியா நிறைவேற்றுவாள்” என்றவர்” என்றது குமரன் எலி.

“பணம், பொருள் எல்லாரிடமும் வரும். புகழ் சிலருக்குத் தான் வரும் என்பதைப் புகழைத்தேடுவோர் அறிவதில்லை” என்றது லட்சுமி எலி.

**1003. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
**தோற்றம் நிலக்குப் பொறை.**

“ஐயா, நான் வறியவன். கடைகளில் கணக்குப் பார்ப்பது எனது தொழில். இப்பவும் அதைச் செய்கிறேன். எனது மனைவி பதினைந்து வருடங்களுக்கு முன் இறந்து விட்டாள். அதன் பின் எல்லாம் எனக்குக் காவியா தான். நான் இருக்கும் நிலத்தைத் தரும்படி பலர் கேட்கின்றனர். பணம் தருவதாகவும் கூறுகின்றனர். பொருள் சேர்ப்பதில் மிகவும் பற்றுக் கொண்டு மனிதத் தன்மையில்லாமல் வாழ்கின்றவர்கள் பூமிக்குப் பாரமானவர்களே தவிர வேறு எதைச் செய்கின்றனர். என்னிடம் கொஞ்சப் பணம் இருக்கிறது. அதை எனக்குப் பின் காவியாவுக்கு எழுதியுள்ளேன். அவள் அதை எடுத்துச் சிறுவர் பாடசாலை அமைக்கக் கொடுக்குமாறு கூறுகிறாள். இப்போ நீங்கள் அதைக் கட்டிக் கொடுப்பதால் அப்பணத்தை சிறுவர் பாடசாலைக்கு நன்கொடையாகக் கொடுக்க விரும்புகிறேன். அதன் வட்டிப் பணத்தை எடுத்து ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கலாம்” என்று கதிர்காமநாதன் கூறியவர்” என்றது குமரன் எலி.

“சிறுவர்களிடம் பெறும் பணத்திலிருந்து தான் ஆசிரியர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இனி கஷ்டப்படத்தேவையில்லை” என்றது லட்சுமி எலி.

**1004. எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரான்**

**நச்சப் படாஅ தவன்.**

“எனக்குப் பிள்ளைகள் இல்லாததால் நான் இறந்த பின்பு எனது பெயரைச் சொல்ல யாரும் இருக்கமாட்டார்கள். பிறருக்கு உதவிகள் செய்யாமல் பொருளைச் சேர்த்து வாழ்வதால் என்ன பயன். அவன் இறந்த பின்பு எஞ்சியிருப்பது என்ன? அதை யாரும் நினைப்பதில்லை. நான் இருக்கும் காணி கோவில் காணி. அதை யாருக்காவது கொடுத்தால் பணம் தருவார்கள் அதனால் எந்தப் பயனும் வராது” என்று கூறும் போது திருநாவுக்கரசு சொன்னார்,“சிறுவர் பாடசாலைக்கு கதிர்காமநாதன் சிறுவர் பாடசாலை” என்று பெயரிடுமாறு காவியா கூறியுள்ளாள். அதனால் நீங்கள் இல்லாத காலத்தில் அப்பாடசாலை உங்களது பெயரைச் சொல்லும்” என்றார்” என்றது குமரன் எலி.

“பொதுச்சேவை செய்கிறோம் என்று பலர் கூற மக்கள் கொள்ளையடிக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். மக்கள் கூறுவது தான் நிலைக்கும்” என்றது லட்சுமி எலி.

**1005. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**

**கோடிஉண் டாயினும் இல்.**

“ஐயா, மற்றவர்களுக்கு மனமுவந்து கொடுக்காமலும் தான் அனுபவிக்காமலும் பாடுபட்டுத்தேடுபவனது செல்வம் எந்தப் பயனுமில்லாமல் அழிந்து போகும். அதனால் தான் நான் தேடிய செல்வத்தைச் சிறுவர் பாடசாலைக்குக் கொடுக்கிறேன். வாழும் போது சுவையுள்ள உணவுகளை உண்டேன். விதம் விதமாய் உடுத்தேன். தான தர்மங்கள் செய்தேன். இனி எனக்குக் கவலை இல்லை. காவியா தான் எதிர்காலத்தில் மிகவும் கஷ்டப்படப்போகிறாள் என்று கவலைப்பட்டடேன். இப்ப எனக்கு அந்தக் கவலையும் நீங்கிவிட்டது. இனி நிம்மதியாகச் சாகலாம் என்றவர்” என்றது குமரன் எலி.

“கதிர்காமநாதன் நல்ல உழைப்பாளி. நேர்மையான மனிதன். அவரை மருட்டிக் காணியைப் பெறப்பலர் முயன்றவர். வாய்க்கவில்லை” என்றது லட்சுமி எலி.

**1006. ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்று**

**ஈதல் இயல்பிலா தான்.**

“கதிர்காமு, தானும் அனுபவிக்காது மற்றவர்களுக்கு கொடுத்துதவாமல் வாழ்கின்றவர்கள் தாம் தேடிய பொருளுக்கு நோய் போன்றவர்கள். நீ கொடுத்துதவியிருக்கிறாய். நன்கு உண்டு மகிழ்ந்திருக்கிறாய். உனது புகழைக் காப்பாற்றியிருக்கிறாய். எனது பிறந்தநாளன்று ஓர் உயர்ந்த மனிதனைச் சந்தித்ததற்காகப் பெருமைப்படுகிறேன். விரைவில் பாடசாலையைக் கட்டி முடிப்பேன். காணி பூமிகளைக் கைப்பற்றியோர் என்ன அதைக் கொண்டு செல்லப்போகிறார்களா? இருக்கும் போதும் இறந்த பின்பும் வசை தான் மிஞ்சும் என்றவர்” என்றது குமரன் எலி.

“காணி பிடித்தவை நன்கொடையென்றும், தமது பெயரில் மண்டபம் கட்ட வேண்டுமென்றும் கூறுகையில் கதிர்காமு தான் இருந்த காணியைக் கொடுத்தது பெரிய விஷயம்” என்றது லட்சுமி எலி.

**1007. அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்**

**பெற்றாள் தமியள்மூத் தற்று.**

“ஐயா, வறியவர்களுக்கு கொடுத்துதவாத பொருள் மிகவும் அழகான பெண் வயது வந்தும் திருமணமாகாது வாழ்ந்து கிழவியாவதைப் போன்றது” என்று பெரியவர்கள் சொல்வார்கள். உங்கள் பணம்

உரிய வயது வந்த பெண் உடனே திருமணமாகிப் பிள்ளை குட்டிகளுடன் மகிழ்வுடன் வாழ்வதைப் போன்றது. பலா் பணம் வைத்திருக்கின்றனா். அது அவா்களுக்கே உதவுவது இல்லை. பாவப்பட்ட பணம்'' என்று கதிா்காமநாதன் சொன்னவா்'' என்றது குமரன் எலி.

''உருத்திரகுமாரன் தில்லுமுல்லுகள் செய்து கோடிக்கணக்கில் பணம் வைத்திருக்கிறான். அவனால் தனது பெண்ணுக்கு ஒரு மாப்பிளை தேட முடியவில்லை. வறுமையான காவியாவுக்குப் பெரும் பணக்கார மாப்பிளை கிடைத்து விட்டாா்'' என்றது லட்சுமி எலி.

**1008. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்**
**நச்சு மரம்பழுத் தற்று**

''நீங்கள் பெருந்தனவந்தன். கொடுத்து உதவுபவா். அதனால் ஊரவா் நன்மையடைகின்றனா். நீங்கள் ஊரின் நடுவே பொது இடத்தில் நிற்கும் சுவையான கனிகளைக் காய்க்கும் மரம். பலா் அதைப் பறித்துண்டு பசியாறுகின்றனா். மற்றவா்களுக்குக் கொடுத்துதவாதவன் நச்சு மரத்தைப் போன்றவன். உயிரினங்கள் பயங் காரணமாகவும் நச்சு மரத்தின் அருகே செல்லாது'' என்று கதிா்காமநாதன் கூறினவா்'' என்றது குமரன் எலி.

''நச்சுக் காற்றுப்பட்டாலே நோய் வரும். கொடுத்துதவாதவா்களின் அருகே சென்றால் நிம்மதி போய்விடும்'' என்றது லட்சுமி எலி.

**1009. அன்பொரீஇத் தற்செற்று அறம்நோக்கா தீட்டிய**
**ஒண்பொருள் கொள்வார் பிறர்.**

''நான் இந்த ஊரிலை எண்பது வருடங்களாக வாழ்கிறன். விருத்தெரிந்த பின் நடைபெறும் சம்பவங்களைப் பாா்த்துத் தான் நான் என்னை வளப்படுத்துகிறேன். துரைராசா என்பவா் எனது மாமன். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு உருத்திரகுமாரனுக்கு ஐம்பதினாயிரம் ரூபா கொடுத்தவா். அவா் திருப்பிக் கொடுக்கவேயில்லை. சென்ற வருடம் துரைராசாவின் பேரன் மலிவாகத் தங்கம் வாங்கித் தருகிறேன் என்று கூறிப் பத்து லட்ச ரூபாவைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகி விட்டான். அவன் சொன்னானாம் எனது பேரனாரிடம் ஐம்பதினாயிரம் வாங்கி விட்டு ஏமாற்றியவன். அதுக்கு இது சாி என்றவனாம். ஏமாற்றுபவா்களை ஏமாற்ற ஒருவன் வருவான். அது போல உதவுவோா்க்கு உதவப் பலா் முன் வருவாா்கள். யாரும் கெட்டித்தனம் பேச முடியாது. நான் தேடிய செல்வத்தை யாருக்காவது கொடுக்காது விட்டால் அது யாரோ ஒருவரைச் சென்றடையும். கொடுத்துதவினால் வாழ்வும் சிறக்கும்'' என்று கதிா்காமநாதன் கூறியவா்'' என்றது குமரன் எலி.

''இப்போ உதை யாா் நினைக்கிறாா்கள். திருடனுக்கு உதவுகிறாா்கள். தீயவனை நல்லவனென்கிறாா்கள்'' என்றது லட்சுமி எலி.

**1010. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி**
**வறங்கூர்ந் தனையது உடைத்து**

''கதிா்காமு அண்ணை, கவலைப்படாதீா்கள். கொடுத்துதவுபவன் ஒரு போதும் கெட்டுப் போகமாட்டான். மாறிக்கெட்டுப்போனால் உதவப்பலா் வருவாா்கள். அத்துடன் உலகம் வாழப் பெய்யும் மழை பெய்யாது விட்டதைப் போன்ற நிலை உருவாகும். உலகத்தில் எப்போதும் நல்லவா்களைக் கடவுள் படைத்துக் கொண்டே இருப்பாா்'' என்று காவியா சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''சில மனிதா்கள் தாமில்லாவிட்டால் உலகம் இயங்காது என்று சொல்கிறாா்கள். சொல்விக்கிறாா்கள்'' என்றது லட்சுமி எலி.

## நாண் உடைமை– 102

**1011. கருமத்தான் நாணுதல் நாணுத் திருநுதல்**
**நல்லவர் நாணுப் பிற.**

‘‘காவியாவின் தோழியான கௌசல்யா வெளிநாட்டிலிருந்து குடும்பமாக வந்திருந்தாள். அவள் உருத்திரகுமாரனின் இரத்த உறவினள். அவள் வெளிப்படையாகக் கதைப்பவள். அவள் கேட்டாள்,‘‘வெளிநாடுகளில் காதல் கொள்வது சகசமானது. பிடிக்காவிட்டால் இருவரும் மகிழ்வுடன் விலகுவார்கள். பின் இன்னொரு துணையைத் தேடிக்கொள்வார்கள். அதுவும் கசந்தால் வேறொன்றைத் தேடுவார்கள். அது அந்நாட்டுக் கலாச்சாரம். இப்போ இங்கும் அது வந்து விட்டது போல் தெரிகிறது’’ என்றாள். காவியா எதுவும் பேசாது சில கணங்கள் நின்றாள். பின்பு சொன்னாள்,‘‘ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டுக்குரிய கலாச்சாரம் பேணப்படுகிறது. நான் அவனைக் காதலிக்கவில்லை. நாம் கதைத்தோம், சந்தித்தோம் அதை நாம் கண்டோம் என்று யாராவது கூறட்டும் பார்க்கலாம். ஊரவன் என்ற முறையில் கதைத்தான். நானும் கதைத்தேன். அவனது போக்குச் சரியில்லையென்று எனக்கு முன்பே தெரியும். அவன் ஒரு பெண்ணை ஏமாற்றியவன். ஒரு பெண் ஒரு ஆணோடு கதைக்கக் கூடாதென்றால் இந்த உலகம் இயங்காது. பெரும்பாலான ஆண்கள் பெண்களின் அழகை, கவர்ச்சியைத் தான் விரும்புகிறார்கள். அதில் அவன் மோசமானவன் என்று தெரிந்து விலகி விட்டேன். அவன் கதைத்தாலும் நான் கதைப்பதில்லை. அதனால் ஆத்திரங்கொண்டு வீண் கதைகளைப் பரப்பி விட்டான். நான் தகாத செயல்களைச் செய்யமாட்டேன். இக்கதை பரவிய பின் நான் காலம் பூராகவும் கன்னியாகவே வாழ விரும்பினேன். ஆனால் திருநாவுக்கரசு ஐயா என்னைப் பற்றித் தீரவிசாரித்து முடிவெடுத்த பின்பு தான் நான் முடிவெடுத்தேன்’’ என்று காவியா சொன்னவள்’’ என்றது குமரன் எலி.

‘‘மனிதர்கள் எல்லோரும் தன்னைப் போலத் தான் எல்லோரும் வாழ்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். கற்ற அறிவால் பயனில்லை’’ என்றது லட்சுமி எலி.

**1012. ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறல்ல**
**நாண் உடைமை மாந்தர் சிறப்பு.**

‘‘கௌசல்யா உயிர்களுக்கு உணவும், உடையும் மற்றும் பாவனைப் பொருட்கள் யாவும் பொதுவானவை. அது எல்லோருக்கும் பொருந்தும். மனிதர்களுக்குச் சிறப்பாக விளங்குவது நாணம் என்ற ஒழுக்கம். ஆண்கள் மனைவியைத் தவிர வேறு எவரையும் தீண்டலாகாது. அது போல பெண்களும் கணவனோடு மட்டும் உறவு கொள்ளல் வேண்டும். இது ஒழுக்கத்தோடு சேர்ந்த நெறிமுறை. இதனால் பல நோய்களைத் தவிர்க்க முடியும். மிருகங்களை எடுத்துப் பார்த்தால் அவை உறவு கொள்ளும் போது பல மிருகங்கள் சண்டையிடும். மனிதரும் அப்படி வாழ்ந்தால் அந்த நிலை தான் உருவாகும். அதனால் தான் சமூகம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது’’ என்று காவியா சொன்னவள்’’ என்றது குமரன் எலி.

‘‘கட்டுப்பாடுகளைப் பலர் பின்பற்றாததால் தான் சமூகத்தில் பல பிரச்சினைகள் உருவாகின்றன’’ என்றது லட்சுமி எலி.

**1013. ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்**
**நன்மை குறித்தது சால்பு.**

‘‘கௌசல்யா, உயிர்களின் இருப்பிடம் உடம்பாகும். சால்பு என்று சொல்லப்படுவது நாணம் என்ற நல்ல பண்பை இருப்பிடமாகக் கொண்டது. நாணம் என்றால் வெட்கப்படுதல் அல்ல. அஞ்சுதல், தீயவற்றைச்

செய்யப்பயப்படல். திருநாவுக்கரசு மாமா,கதிரேசன் ஐயா போன்றவர்களைப் பற்றி ஊரவர் ஏதாவது ஒரு குறை சொன்னார்களா..? கதிர்காமநாதன் தாத்தா தான் குடியிருந்த நிலத்தைச் சிறுவர் பாடசாலை அமைக்கக் கொடுத்த போது உருத்திரகுமாரனின் தாய் மாமன் அது தனக்குரிய காணி என்று கூறினார். அதனால் திருநாவுக்கரசு மாமா அக்காணிக்குள் சிறுவர் பாடசாலையைக் கட்டும் திட்டத்தை நிறுத்தி விட்டார். அதற்குக் காரணம் ஒழுக்கமுள்ளவர்கள் தகாத செயல்களைச் செய்ய அஞ்சுவர்'' என்று காவியா சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''உருத்திரகுமாரனின் பரம்பரையே கள்வர் கூட்டம். பலர் இரகசியமாக ஏவிவிட்டு விட்டு வேடிக்கை பார்த்தனர். நல்ல விடயத்தைக் கூடச் செய்ய விடமாட்டார்கள்'' என்றது லட்சுமி எலி.

**1014. அணியன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அ∴துஇன்றேல்**
**பிணியன்றோ பீடு நடை.**

''அதன் பிறகு கதிரேசனும் ஊர் மக்களும் அது கோவில் காணியென்று கூறி அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தனர். யாழ்ப்பாணம் கச்சேரியில் காணிப் பதிவு அலுவலகத்தில் வேலை செய்யும் கெங்காதரன் காணி அலுவலரிடமிருந்து அக்காணியைப் பற்றிய தகவலைக் கொண்டு வந்து கொடுத்த பின்பு தான் மாமா கட்டிட வேலையை ஆரம்பித்தவர். ஒழுக்கமுள்ளவர்களுக்கு நாணம் ஓர் ஆபரணமாகும். பெருமிதமாக ஒருவர் வாழ்ந்தால் அவரது வாழ்வு பிறருக்கு ஒரு நோயாகவே இருக்கும்'' என்று காவியா சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''உங்கை பலருக்கு அந்த நோய் இருக்கு. மறைக்கினை. ஆனால் முடியவில்லை'' என்றது லட்சுமி எலி.

**1015. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு**
**உறைபதி என்னும் உலகு.**

''திருநாவுக்கரசு மிகமிக நல்ல மனிதன். வெளிநாட்டில் எமக்கு அருகில் தான் அவரது குடும்பம் வாழ்கிறது. அங்குள்ளவர்களே அவரை மதித்துப்போற்றுகின்றனர். எமக்கு ஒரு முறை பெரும் பணக்கஷ்டம் ஏற்பட்டு விட்டது. உறவினர்கள் நண்பர்களிடம் கேட்ட போது அவர்கள் தரவில்லை. எமது கஷ்டத்தைக் கேள்விப்பட்ட திருநாவுக்கரசு வீடு தேடி வந்து உதவியவர். இரண்டு வருடங்களுக்குப் பின்பு தான் நாம் வாங்கிய கடனைக் கொடுக்க முடிந்தது. கடனைப் பெற்றாரே தவிர வட்டிக் காசைப் பெறவில்லை. வாகீசன் மிகமிக நல்லவன். நல்ல தொழிலில் இருக்கிறான். பெரும் பணக்காரன். நீ அதிஷ்டசாலி. பிறருக்கு வரும் பழியை நீக்குவதோடு தமக்கு எக் குற்றமும் வராதபடி வாழும் உயர்ந்த நாணத்திற்கு உறைவிடமான குடும்பம்'' என்று கௌசல்யா சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''பாவம் காவியா. நல்லதொரு குடும்பத்தில் இணைந்து விட்டாள். அதைக் கொடுக்க எத்தனை பேர் அலைந்தவை'' என்றது லட்சுமி எலி.

**1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்**
**பேணலர் மேலா யவர்.**

''இந்த உலகமே கிடைப்பதாக இருந்தாலும் திருநாவுக்கரசின் குடும்பம் தீயவற்றைச் செய்யாது. அங்குள்ள கோவிலுக்குத் தலைவர் திருநாவுக்கரசு தான். முன்பிருந்த தலைவர் இலச்சக்கணக்கான பணத்தைச் சூறையாடி விட்டார். இவர் மாதா மாதம் கணக்குக் காட்டுவார். யார் எதைக் கேட்டாலும்

பொறுமையாகப் பதில் சொல்வார். கோபம் கொள்ளமாட்டார். அந்த ஊரவர்கள் எல்லோரும் அவரை மதிக்கின்றனர்'' என்று கௌசல்யா சொன்னாள்'' என்றது குமரன் எலி.

''நல்லபடி வாழ்ந்தால் நன்மை சொல்லத் தானே வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**1017. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்**
**நாண்துறவார் நாண்ஆள் பவர்.**

''கதிர்காமநாதன் கோவிலுக்கு வந்த போது திருநாவுக்கரசும், கதிரேசனும் அங்கே நின்றனர். அவர்களைக் கண்டதும் அவரது கண்கள் கலங்கின,''ஐயா, நான் மானஸ்தன். எனது தந்தையின் தந்தை நான் இருக்கும் கோவிற் காணியை நிர்வாகத்திடம் பெற்று வரி கட்டியவர். இப்போ நிர்வாகம் இல்லை. எனினும் நான் தமிழ் நாட்டிற்குச் செல்பவர்களிடம் வரிப்பணத்தைக் கொடுத்தனுப்புவேன். அவர்கள் உண்டியலில் போடுவார்கள். கோவிற்காணியில் குடியிருந்த பலர் அதைத் தமது பெயரில் கள்ள உறுதி முடித்தனர். சிலர் விற்றும் விட்டனர். நான் அக்காணியைத் தனக்குத் தருவதாகக் கூறிய பணத்தைப் பெற்றதாக உருத்திரகுமாரனது மாமன் கூறியதால் நீங்கள் அதில் கட்டிடம் கட்ட மறுத்தீர்கள். நான் மானத்தைக் காக்க உயிரை விடுவேனே தவிர உயிரைக் காக்க மானத்தைக் கைவிட மாட்டேன். அவன் அதை நிரூபித்திருந்தால் நான் தற்கொலை செய்திருப்பேன்'' என்று அழுதவர்'' என்றது குமரன் எலி.

''பாவம் கிழவன். ஒரு கிழமைக்குள் பெருந்துன்பப்பட்டு விட்டது. இப்படியான மனிதர்களும் வாழ்கிறார்கள் தானே'' என்றது லட்சுமி எலி.

**1018. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்**
**அறம்நாணத் தக்கது உடைத்து.**

''வெக்கம் கெட்ட குடும்பம் அது. உருத்திரகுமாரனின் பரம்பரையே நாணமில்லாதது. செய்யக் கூடாதவற்றையெல்லாம் செய்து விட்டுத் தலை நிமிர்ந்து வாழ்கின்றனர். இவர்களின் தீயசெயல்களால் நாணப்பட்ட அறக்கடவுள் இவர்களை விட்டு விலகியதால் பல கொடுமைகளுக்கு ஆளான போதும் உணர்கிறார்களில்லை. உருத்திரகுமாரனது மாமனின் மகன் பித்துப் பிடித்து வீதிகளில் சுயநினைவில்லாமல் அலைந்து திரிகிறான். அப்படி நடந்தும் திருந்துகிறார்கள் இல்லை என்று கதிர்காமநாதன் ஆத்திரப்பட்டவர்'' என்றது குமரன் எலி.

''சிலருக்கு நீதி நியாயம் தெரிவதில்லை. எது நடந்தாலும் கவலைப்படுவதுமில்லை. உணர்ந்து கொள்வதுமில்லை. தமது குணங்களை மாற்றுவதும் இல்லை'' என்றது லட்சுமி எலி.

**1019. குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்**
**நாணின்மை நின்றக் கடை**

''கவலைப்படாதை கதிர்காமு, ஒருவன் ஒழுக்கம் தவறினால் அது அவனுக்கு வரும் நன்மை அனைத்தையும் அழிக்கும்'' என்று மாமனுக்கும், மருமகனுக்கும் பலமுறை சொன்னேன். கேட்பதாக இல்லை. சென்றவாரம் உருத்திரகுமாரனின் மகளுக்குப் பேசி வந்த திருமணம் குழம்பி விட்டது என்று என்னிடம் வந்து அழுதான். இவையெல்லாம் அவரவரது நடத்தையைப் பொறுத்தது. இனிமேலாவது ஒழுக்கமாக வாழ் எல்லாம் சரியாகும் என்று சொல்லிவிட்டேன்'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''உதை எத்தனை பேர் எத்தனை தரம் சொல்லி விட்டினை. யாராவது ஒருவரோடாவது நல்ல முறையில் பழகினால் தற்செயலாக மாப்பிளை பகுதி அவனைக் கேட்டால் அவனாவது நல்ல குடும்பம் என்று சொல்வான். ஊருடன் பகைத்தால் வாழவே முடியாது'' என்றது லட்சுமி எலி.

**1020. நாணகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை**
**நாணால் உயிர்மருட்டி யற்று.**

“இவர்களைத் திருத்த முடியாது. இவர்களது நடத்தையால் பிள்ளைகளல்லவா பாதிக்கப்படுகின்றனர். படித்தவன் அதைக் கூட உணராது இப்போதும் மற்றவர்கள் மீது குறை சொல்கிறான். போனவாரம் பேசிய திருமணத்தின் போது மாப்பிளையின் தந்தை எனக்குத் தெரிந்தவர். அவர் என்னைக் கேட்டார். நான் எதைச் சொல்வது. விசாரித்து விட்டுச் செய்யுங்கள் என்றேன். அதற்கு அவர் பலரை விசாரித்து விட்டுத் தான் உங்களை விசாரிக்க வந்தேன். இப்போது யாவும் எனக்குப் புரிந்து விட்டது’’ என்று கூறி விட்டுச் சென்றவர்’’ என்று கதிரேசன் சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

“இது உடனை முடிகிற காரியமே. திருமணம் ஆயிரங்காலத்துப் பயிர். பிறகு கதிரேசன் தான் அடிவாங்க வேண்டும்’’ என்றது லட்சுமி எலி.

## குடிசெயல்வகை– 103

**1021. கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையின் பீடுடையது இல்.**

“நவராசா கதிரேசனிடம் வந்து சொன்னான், “ஐயா, நான் ஒரு புதிய வீட்டை வாங்கியுள்ளேன். நீங்கள் தான் இந்த ஊருக்கு வழிகாட்டி. நாளைக் காலை பால் காய்ச்சப் போகுறேன். அந்த நேரம் வந்து வீட்டுத் திறப்பை வாங்கித் தரல் வேண்டும்’’ என்று சொல்லி விட்டு வணங்கினான்,“நல்லது மகனே, வீட்டார் எதிர்த்ததால் வெறுங்கையுடன் வாழ்க்கையைத் தொடங்கிய நீ இன்று ஒரு வீட்டை வாங்கி விட்டாய். தனது குடும்பத்திற்காக உழைத்து முன்னேறுபவனை வாழ்த்தல் வேண்டும். தனது குடும்பத்தை உயர்த்துவது தான் பெருமைகளுள் எல்லாம் பெருமை’’ என்று கதிரேசன் கூறியவர்’’ என்றது குமரன் எலி.

“நவராசா நல்ல உழைப்பாளி. அவன் உழைத்துக் கொடுத்ததை மறந்து அவனை வெறுத்த பெற்றார் மனிதர்களல்ல. காதலிப்பது தவறானதா..?’’ என்று கேட்டது லட்சுமி எலி.

**1022. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்**
**நீள்வினையான் நீளும் குடி**

“மகனே, நீ உத்தமன். ஒழுக்கமானவன். முயற்சியுள்ளவன். அறிவுள்ளவன். முயற்சியும் அறிவும் தான் ஒரு குடும்பத்தின் பெருமையைச் சிறப்பிப்பது. இப்போ புதிதாக வியாபாரம் தொடங்கியதாக அறிந்தேன். நல்லது என்று கதிரேசன் சொல்ல நவராசா சொன்னான்,“பெரியவர்களின் ஆசி இருக்கிறது. நண்பனான நகுலனின் உதவியும் இருக்கிறது. அத்துடன் என்னிடம் வியாபார அறிவும் உள்ளது. அதனால் முயற்சித்து முன்னேறியுள்ளேன்’’ என்று நவராசா சொன்னவன்’’ என்றது குமரன் எலி.

“பெற்றோருக்கு எவ்வளவை உழைத்துக் கொடுத்தவன். காதலித்தவள் பணக்காரியென்றால் பூப்போட்டு வரவேற்றிருப்பினை. ஏழையென்றபடியால் எதிக்கினை’’ என்றது லட்சுமி எலி.

**1023. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்.**

“நவராசா, தனது குடும்பத்தை உயர்த்துவேன் என்று திடசங்கர்ப்பம் பூண்டு அயராது உழைப்பவனுக்குத் தெய்வம் வரிந்து கட்டிக் கொண்டு உதவி செய்யுமாம். உனக்கு இப்போ தெய்வம்

உதவி செய்ய ஆரம்பித்து விட்டது. தளராது முயற்சி செய். அந்த முயற்சியின் போது ஒழுக்கத்தைக் கைவிட்டு விடாதே. ஒழுக்கமில்லாத முயற்சி வரம்பில்லாத வாய்க்காலால் நீர் பாய்வதைப் போன்றது. உனது பெற்றோர் உன்னை விரும்பவில்லை என்று கவலை கொள்ளாதே. அவர்கள் உன்னைத் தேடி வருவார்கள்'' என்று நவராசாவுக்குக் கதிரேசன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''இப்பவே தாம் செய்தது பிழை என்று வருமானமில்லாததால் நினைக்கினை. இன்று சென்றாலும் செல்வினை'' என்றது லட்சுமி எலி.

**1024. சூழாமல் தானே முடிவுஎய்தும் தம்குடியைத்**
**தாழாது உஞற்று பவர்க்கு**

''இப்போ எனக்கு நல்ல காலம் ஐயா,தோட்டங்களில் விளையும் பொருட்களை மக்கள் விரும்பித் தருகிறார்கள். நெல்லைத் தருகிறார்கள். கால்நடைகளை விற்பனைக்காகத் தருகிறார்கள். விவசாய உள்ளீட்டுப் பொருட்களை வாங்கித் தருமாறு கேட்கிறார்கள். அதை விட இப்போது வாகனங்களை வாங்கி விற்கின்றேன்'' என்று நவராசா சொல்லக் கதிரேசன் சொன்னார்,''மகனே, தனது குடும்பத்தை மேம்படுத்த வேண்டுமென்று நினைத்து ஒருவன் முயன்று முயற்சித்தால் அவன் ஆராய வேண்டிய நிலை இல்லாமலே அவன் நினைத்தது தானே நிறைவேறும் என்றவர்'' என்றது குமரன் எலி.

''தொழில் சிறக்க வேண்டும் என்றால் முயற்சியை நேர்மையாகச் செய்தல் வேண்டும். மிகமிக அவதானமாக நவராசா தொழிலைச் செய்கிறான். பலர் நேர்மையில்லாமல் செயலாற்றி விட்டுக் காலம் சரியில்லை'' என்கின்றனர்'' என்றது லட்சுமி எலி.

**1025. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு.**

''குற்றங்கள் எதுவும் செய்யாமல் மக்களை அனுசரித்து நீ நடப்பதால் உன்னை மக்கள் நம்புகிறார்கள். நம்பிக்கை என்பது கடவுளின் வரத்தைப் போன்றது. எந்நேரமும் மாறாதிருந்து செல்வத்தை அள்ளித் தரும். இப்போ உன்னை நம்பி ஊரவர்கள் தமது பணத்தைப் பொறுப்பின்றித் தந்துதவுவதாகக் கேள்விப்பட்டேன். பிறரது பணத்தை உன் பணம் என்று எண்ணாது அது கடவுள் தந்த புதையல் என்று எண்ணு. அவர்கள் கேட்கும் போது வட்டியுடன் உடன் கொடுத்து விடு. காலதாமதம் நம்பிக்கையை தளர்த்தும்'' என்று கதிரேசன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''நவராசா புத்திசாலி. சிவபாலனின் திருமண வீட்டிற்கான சகல ஏற்பாடுகளையும் நவராசா தான் செய்றவன். தங்கமான பிள்ளையென்று சிவபாலன் சொல்லித் திரிகிறார்'' என்றது லட்சுமி எலி.

**1026. நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த**
**இல்லாண்மை ஆக்கிக் கொளல்.**

''மகனே, தான் பிறந்த குடும்பத்தை ஆளும் சிறப்பினைத் தான் பெற்றிருப்பதே ஆண்மையாகும். ஆனால் நீ ஊரில் உள்ள பல குடும்பங்களை ஆளும் தன்மையைப் பெற்றிருக்கிறாய். ஊரில் நடைபெறும் நல்ல கெட்ட நிகழ்ச்சிகளை நீயே முன்நின்று நடத்துகிறாய். அதற்கான தொழிலாளர் வசதியும், வாகன வசதியும், ஏனைய வசதிகளும் உன்னிடமுள்ளன. எனது மூத்த மகனின் இளையமகளுக்கு அடுத்த மாதம் திருமணம். மூத்த மகன் வெளிநாட்டிற்குக் கற்கச் சென்றுள்ளான். அதனால் சகல ஏற்பாடுகளையும் நீ செய். நீ ஒரு கல்யாண மண்டபத்தைக் கட்டு. நிதியில்லாவிட்டால் நான் தருகிறேன்'' என்று கதிரேசன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

“தனியத் தொழில் செய்த நவராசா இப்ப நூறு குடும்பத்தை வாழ வைக்கிறான். பணத்தைப் பலர் புதைத்து வைத்துள்ளனர்” என்றது லட்சுமி எலி.

**1027. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்**
**ஆற்றுவார் மேற்றே பொறை.**

“மகனே, போர்க்களத்தில் அஞ்சாமல் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் போர் வீரனைப் போல, தனது குடும்பத்தையும், குடும்பத்திலுள்ள சுற்றத்தவர்களையும் காப்பாற்றும் பொறுப்புனை ஆண்மையுள்ளவனே ஏற்பான். நீ இந்த ஊரில் உள்ளவர்களினதும் பொறுப்பை ஏற்றுள்ளாய். நல்லது. ஒழுக்கத்துடன் முயற்சி செய்தாயேயானால் பெரும் கோடீஸ்வரனாகி விடுவாய்” என்று கதிரேசன் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“எல்லாரும் நவராசா மீது பொறாமைப்படுகிறார்களே தவிர அவனை மாதிரி ஒழுக்கமாக வாழ விரும்புகிறார்கள் இல்லை. ஒரு பொருளில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு மாதம் வாழ நினைக்கின்றனர்” என்றது லட்சுமி எலி.

**1028. குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து**
**மானம் கருதக் கெடும்.**

“ஐயா, நான் எனது குடும்பம் உயர வேண்டும் என்றும், ஊர் செழிக்க வேண்டுமென்றும் நினைத்து காலநேரம் பாராது உழைத்து வருகிறேன். அத்துடன் சோம்பல்படுவதில்லை. நேற்று கந்தவனம் அண்ணை இரவு இரண்டு மணிக்கு வந்து தான் தந்த பணத்தைத் தரும் படி கேட்டார். அப்போ என்னிடம் பணம் இல்லை. வங்கிக்குச் சென்று கிரடிற் காட் மூலம் பணத்தை எடுத்துக் கொடுத்தேன். சோம்பற்பட்டிருந்தால் காலையில் வரச் சொல்லியிருப்பேன். அத்துடன், “மானத்தைப் பெரிதாகக் கருதாவிட்டாலும் குடிப் பெருமை அழிந்து விடும்” என்று நீங்கள் சொல்வீர்கள். நீங்கள் தான் எனது வழிகாட்டி” என்று நவராசா சொன்னவன்” என்றது குமரன் எலி.

“சிலர் காசு கொஞ்சம் சேர்ந்ததும் திமிர் பிடித்து ஆடுவினை. நாள் நட்சத்திரம் பார்ப்பினை. ஆனால் செயற்படமாட்டினை” என்றது லட்சுமி எலி.

**1029. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்**
**குற்றம் மறைப்பான் உடம்பு.**

“நீ சொல்வது சரி நவராசா. தன் குடும்பத்திற்கு இழுக்குவரக் கூடாதென்று எண்ணி உழைப்பவர்கள் உடம்பின் வருத்தத்தைப் பெரிதாக எடார். அத்துடன் அத்தகையவர்களின் உடம்பு துன்பத்திற்கும் இலக்காது. அதனால் சலிக்காது உழைத்து முன்னேறு” என்று கதிரேசன் நவராசாவுக்குச் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“குடும்பத்திற்கு ஏற்படும் குற்றங்களை நீக்காது முயற்சி செய்பவர்களுக்கு முயற்சி பயனளிக்காது. அத்துடன் குற்றங்களும் வந்து சேரும் என்பதைப் பலர் உணர்வதில்லை” என்றது லட்சுமி எலி.

**1030. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்**
**நல்லாள் இலாத குடி**

“ஒரு குடும்பத்திற்குத் துன்பம் வந்தால் அதை நீக்கக் கூடிய ஆள் இல்லாத குடும்பம் கோடரியால் வெட்டப்பட்ட மரம் போல விழுந்து விடும். இன்று துன்பம் வந்து வருத்தும் பல குடும்பங்களைத்

தாங்குகிறாய். போனவாரம் சிவலிங்கம் விபத்தில் அகப்பட்டு உயிருக்குப் போராடிய போது அக்குடும்பத்திற்குப் பல இலட்சம் ரூபா உதவினாய். ஒரு வாரத்தால் வெளிநாட்டில் இருக்கும் சிவலிங்கத்தின் மகன் பணத்தை அனுப்பி விட்டான். ஆனால் அந்த நேரம் பணமில்லாவிட்டால் சிவலிங்கம் இறந்திருப்பான்'' என்று கதிரேசன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''எல்லாரும் வேடிக்கை பார்ப்பினை. அக்கறையுடன் பரிந்து பேசுவினை. ஆனால் உதவி செய்யாயினை'' என்றது லட்சுமி எலி.

## உழவு– 104

**1031. சுழன்றும்ஏர்ப் பின்னத உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை**

''நவராசா திருநாவுக்கரசுவிற்குச் சொன்னான்,''ஐயா, நான் சுமார் இருபது வருடங்களாக விவசாயம் செய்தேன். அது தான் எனக்கு விருப்பமான தொழில். உலகில் வாழும் மக்கள் சுழன்று சுழன்று பல தொழில்களைச் செய்தாலும் கமத்தொழிலை நம்பியே உலகில் உள்ள உயிர்கள் யாவும் வாழ்கின்றன. நான் கமம் செய்யும் போது நெல், பயறு, உழுந்து, எள், காய்கறி வகைகள் நிறைந்து கிடைக்கும். இப்போ எவையும் இல்லை. அவை தான் செல்வம். அதனால் நான் இப்போது நூறு ஏக்கர் விவசாய நிலம் வாங்கியுள்ளேன். முதன் முதலாக நாளைக்கு ஏர்பூட்டவுள்ளேன். தாங்கள் அதற்கு வருதல் வேண்டும். ஊர்ப்பெரியவர்களையெல்லாம் அழைத்துள்ளேன்'' என்றான்'' என்றது குமரன் எலி.

''முன்பு வீடுகளில் எவ்வளவு தானியங்கள் இருக்கும். இப்போ ஒரு மணி கூட இல்லை'' என்றது லட்சுமி எலி.

**1032. உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதுஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து**

''நவராசா, நானும் இவ்வூரில் வாழும் போது விவசாயம் தான் செய்தேன். அப்போது வீடு நிறைய உணவுப் பொருட்கள் இருக்கும். பணம் இருக்காது. இப்போ கைநிறையப் பணம் இருக்கிறது. உணவுப் பொருட்கள் இல்லை. உணவில்லாமல் உலகில் லட்சக்கணக்கான மக்கள் துன்பப்படுகின்றனர். உழவுத் தொழிலைச் செய்யாது வாழும் உயிர்களுக்கெல்லாம் உணவளிப்பவன் விவசாயி. அதனால் தான் உலகம் என்றும் தேருக்கு உழவனே அச்சாணி என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். நீ சென்று உனது வேலைகளைக் கவனி நான் வருகிறேன்'' என்று திருநாவுக்கரசு சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''அரசும் அப்படித் தான் சொல்லும். ஆனால் விவசாயியின் நலனைக் கவனிக்கவே மாட்டுது'' என்றது லட்சுமி எலி.

**1033. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்.**

''அன்று காலை நவராசாவின் வயலில் ஏர் பூட்டு விழா நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட கதிரேசன் சொன்னார்,''கடவுள் உயிர்களுக்குப் படியளப்பதைப் போல விவசாயி உலகிலுள்ள உயிர்களுக்குக்கெல்லாம் உணவளிக்கிறான். உழுது அதன் பயனாகக் கிடைக்கும் உணவுப் பொருட்களை உண்டு வாழ்பவர்களே உரிமையோடு வாழ்கின்றவர்களாவர். ஏனையோர் பிறரைத் தொழுது வணங்கி வாழ்கின்றவராவர். விவசாயிக்கு ஒரு போதும் உணவுப் பஞ்சம் ஏற்படாது'' என்று கூறியவர்'' என்றது குமரன் எலி.

“விவசாயி சிறப்பானவன் தான். ஆனால் பெண்கள் விவசாயிகளைத் திருமணம் செய்யப் பின் நிற்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

**1034. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்**
**அலகுடை நீழ லவர்.**

“முன்பு அரசர்கள் நாட்டையாண்ட காலத்தில் உழவர்கள் தான் குபேரர்களாக வாழ்ந்தார்களாம். வயலை உழுது நெல்லை விதைத்து அதை அறுவடை செய்து விற்பனை செய்யும் உழவர்கள் அயல்நாட்டரசர்களின் நிலங்களையும் வாங்கி அவற்றிலும் பயிரிட்டனர் என்று வரலாறு கூறுகிறது. பொன்னாகக் குவித்து வைத்திருந்தோரும் விவசாயிகளின் துணையுடனே வாழ்ந்து வந்தனர் என்றும், பெரும் விவசாயிகளுக்கு அரசர்கள் நண்பர்களாக இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. இதை இன்றுள்ளவர்கள் உணரவில்லை. நீ உணர்ந்துள்ளாய்” என்று திருநாவுக்கரசு சொன்னவர்” என்றது குமரன் எலி.

“அந்தக் காலத்தில் உழவர்கள் குபேரர்கள். இந்தக் காலத்தில் உழவர்கள் குசேலர்கள்” என்றது லட்சுமி எலி.

**1035. இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது**
**கைசெய்தூண் மாலை யவர்**

“உழவர்கள் யாரிடத்திலும் எதற்கும் கையேந்துவதில்லை. கையேந்துவோர்க்குக் கொடுப்பதே அவர்களது வழக்கம். இப்போது எடுத்துக்கொண்டாலும் கதிரேசன் கேட்பவர்களுக்கெல்லாம் கொடுக்கிறாரே தவிர அவர் யாரிடமும் எதுவும் பெற்றதில்லை. எண்பது வயது கடந்தும் வயலில் வேலை செய்கிறார். உழவுத் தொழில் இளமையையும், உடலுக்கு வலிமையையும் கொடுக்கும்” என்று நவராசாவுக்குத் திருநாவுக்கரசு சொன்னவர்” என்றது குமரன் எலி.

“எல்லாம் சொல்ல நன்றாக இருக்கும். செயலில் தான் கொடுமை தெரியும்” என்றது லட்சுமி எலி.

**1036. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேம்என் பார்க்கு நிலை.**

“உரிய விளைவை உழவன் பெறாவிட்டால் எல்லா பற்றுக்களையும் துறந்து விட்ட துறவிகளும் வாழ முடியாத நிலை ஏற்படும். இருபது வருடங்களுக்கு முன்பு மழை பெய்யாததால் வயல்கள் அழிந்து விட்டன. மடத்தில் உணவு கொடுப்பது படிப்படியாக குறைந்து குறைந்து நிறுத்தப்பட்டது. மக்களே இரந்துண்ணும் நிலை. அப்படியிருக்கத் துறவிகளுக்கு யார் உணவு கொடுப்பார்கள்? இப்படி ஒரு நிலை வரக் கூடாது” என்று சில தினங்களுக்கு முன்பு கதிரேசன் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“அந்த வரிசம் எங்கடை பரம்பரையே அழிந்தது” என்று எனது கொள்ளுத் தாத்தா கூறியதாக அம்மா சொல்வா” என்றது லட்சுமி எலி.

**1037. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும்**

“நவம், விவசாய முறைகளை நன்கு கற்றுக் கொள். கதிரேசன் மூத்த விவசாயி. விவசாயத்திலுள்ள நுணுக்கங்கள் எல்லாம் தெரிந்தவர்” என்று திருநாவுக்கரசு கூறும்போது நவரசா சொன்னான், “நேற்று நாள்முழுவதும் அவரோடு தான் இருந்தேன். அவர் ஒரு விவசாயப் பேராசிரியரை விட அறிவு மிக்கவர்.

ஆற்றல் மிக்கவர். அவர் சொன்னார்,''வயலை நன்றாக உழுதல் வேண்டும். ஒரு பலம்புழுதி கால் பலம் ஆகும்படி நன்கு நிலத்தை உழுது காயவிட்டால் ஒரு பிடி எருவிடாமலே நல்ல விளைச்சலைப் பெறலாம்'' என்று கதிரேசன் சொன்னவர்'' என்று நவராசா சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''பேராசிரியர்மார் புத்தகத்தைத் தானே உழூறவை. கதிரேசன் வயலை உழுபவர்'' என்றது லட்சுமி எலி.

**1038. ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றுஅதன் காப்பு.**

''அதை விட ஏராளமான தகவல்களைச் சொன்னவர். அவர் ஒரு நடமாடும் நூலகம். அவர் சொன்னார், ''மகனே, உழுவதை விட எரு இடுவது முக்கியம். அத்துடன் களை எடுத்த பின் நீர் பாய்ச்சுவதை விடப் பயிர்களைப் பாதுகாப்பது முக்கியம். காட்டு மிருகங்கள், வளர்ப்பு மிருகங்கள் களை எடுத்த வயலில் இறங்கினால் பயிர் நாசமாகி விடும். களையெடுக்கும் போது பயிர் சற்றுக் களைத்திருக்கும். அந்த வேளை மிருகங்கள் புகுந்தால் மிதித்துப் பயிர்களைப் புதைத்து விடும்'' என்றவர். உண்மையில் அவர் மிகுந்த அநுபவம் மிக்க உழவன்'' என்று நவராசா சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''அநுபவம் மிக்கவர் என்பதால் தான் பலர் கைவிட்ட வயல்களை அவர் விலைக்கு வாங்குகிறார்'' என்றது லட்சுமி எலி.

**1039. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலத்து**
**இல்லாளின் ஊடி விடும்**

''உழவன் நெல் விதைத்த நாளிலிருந்து சூடு மிதிக்கும் வரை தினந்தோறும் வயலுக்குச் சென்று வயலைப் பார்வையிட வேண்டும். நோய்த்தாக்கம் ஏற்பட்டிருக்கும். எலிகள் புற்றெடுத்திருக்கும். மிருகங்கள் நுளைந்திருக்கும். இதை உடனுக்குடன் கவனிக்க வேண்டும். ஒரு கணவன் தினம்தோறும் தனது மனைவியின் முகத்தை உற்று நோக்கி அதிலுள்ள எண்ணங்களை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்யாவிட்டால் அவள் எதற்கும் ஒத்துளைக்காது பிணங்குவாள். அது போல வயலும் தினமும் சென்று பார்வையிட்டு உரிய கவனமெடுக்காவிட்டால் பிணங்கி விடும்''என்று கதிரேசன் சொன்னவர்'' என்று நவராசா சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''இப்பவும் மகாலட்சுமியின் மீதுள்ள அன்னியோன்னியமும், வயலின் பெருவிளைச்சலும் அவரின் அனுபவத்தைக் காட்டுகிறது'' என்றது லட்சுமி எலி.

**1040. இலம்என்னு அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம்என்னும் நல்லாள் நகும்.**

''பலர் இன்று வருமானம் இல்லை என்கிறார்கள். தொழில் இல்லை என்கிறார்கள். தொழில் மோகத்தால் கமத்தைச் சரியாகக் கவனிப்பது குறைவு. நாம் தைரியசாலிகளாக இருக்க நல்ல உணவுகளை உண்ணுதல் வேண்டும். அது போல நிலம் நல்ல விளைச்சலைத் தர அதற்கு நல்ல பசளையிட வேண்டும். நீர் பாய்ச்ச வேண்டும், பெருங்கவனம் எடுத்தல் வேண்டும். ஒரு பிள்ளையை வளர்ப்பதைப் போலக் கவனமாகப் பயிரை வளர்த்தால் நாம் எதிர்பார்ப்பதை விட வருமானம் கூடுதலாகக் கிடைக்கும். இதை உணராதவர்கள் தான் தொழில் இல்லையென்று அழுகின்றனர். அரசுத் தொழில் தேவையென்று அலைகின்றனர். இவர்களைப் பார்த்து நிலமங்கை சிரிப்பாள். அதனால் மிகவும் கவனமாக நான் செயற்படுவதால் இயற்கை அனர்த்தங்களால் எனது பயிர்கள் பயன்தராமல் விட்டனவே தவிர மற்றய

வேளைகளில் பெரும் பயன் தந்தன'' என்று கதிரேசன் கூறியதாக நவராசா சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''சரியாகப் படிக்கவும் மாட்டினை. சோதினையிலே நல்ல மதிப்பெண் பெறவும் மாட்டினை. பின் எப்படி வேலை கிடைக்கும். விவசாயிகளைப் பெண்கள் விரும்பினால் அது செழிக்கும்'' என்றது லட்சுமி எலி.

## நல்குரவு– 105

**1041. இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது.**

''நவராசா மடத்திற்கு வந்து யோகநாதனைச் சந்தித்தான். அவர் நவராசாவின் தாய் மாமன்,''ஐயா, உங்களை எனது மனைவி அழைத்து வரச் சொன்னார். நானும் மனைவியும் தான் வீட்டில் தனியே இருக்கிறோம். நான் தொழில் விடயமாகப் பல ஊர்களுக்கும் செல்ல வேண்டியுள்ளது. அவ்வேளைகளில் அவள் தனித்திருக்கப் பயப்படுகிறாள்'' என்று நவராசா சொல்ல யோகநாதன் சொன்னார்,''உனது மனைவி வந்து கேட்டவள். அப்போ அவர்கள் ஏழைகள். எனக்கு எப்போதாவது ஒரு நாள் உணவு தருவார்கள். ஊரில் நான் இரந்துண்டு வந்தேன். வறுமையைப் போலத் துன்பம் தருவது வறுமை தான். பெருந்துன்பப்பட்டேன். கதிரேசன் என்னைச் சென்று உன்னோடு இருக்கச் சொன்னவர்'' என்று யோகநாதன் கூறினார்'' என்றது குமரன் எலி.

''பாவம் யோகநாதன். மனைவி இறந்த பின் பட்ட துயர் ஏராளம். இனியாவது நிம்மதியாக இருக்கட்டும்'' என்றது லட்சுமி எலி.

**1042. இன்மை எனஒரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்.**

''மகனே, எனது மருமகள் மிகவும் நல்லவள். ஆனால் வறுமையானவள். தகப்பன் நல்ல உழைப்பாளி தான். உழைப்பதைக் குடித்து விடுவான். அதனால் நான் அங்கு செல்வதில்லை. எனக்கு ஏதாவது தொழில் தா. அதன் மூலம் வரும் பணத்தைத் தான தர்மம் செய்தல் வேண்டும். வறுமை காரணமாக நான் மகிழ்வுடன் வாழவில்லை. இப்பிறப்பில் தான தர்மம் செய்தால் தான் மறுபிறப்புச் சிறக்கும். அதனால் தான் கேட்டேன்'' என்று யோகநாதன் கூற நவராசா சொன்னான், நீங்கள் துணையாக இருக்காது காவலாக இருங்கள் என்று'' என்றது குமரன் எலி.

''பலருக்கு இறுதிக் காலத்தில் தான் ஞானோதயம் பிறக்கும். சிலருக்கு இறக்கும் வரை ஆணவம் தான் இருக்கும்'' என்றது லட்சுமி எலி.

**1043. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக**
**நல்குரவு என்னும் நசை**

''நவராசா, வறுமை என்ற அழிக்கும் அரக்கன் ஒருவனது குடிப்பிறப்பையும், புகழையும் ஒரு சேரக்கெடுக்கும். எனது தந்தை வசதியானவர். அவர் தேடிய பணத்தை நான் சூதாடியும் குடித்தும் அழித்தேன். உழைக்கும் போது ஒரு சிறுதொகையாவது சேமியுங்கள் என்று எனது மனைவி கூறுவாள். நான் அதைக் கவனத்தில் எடுத்திருந்தால் இந்த நிலை வந்திராது. நானும் ஒரு வர்த்தகன் தான். நீதிக்குப் பிறம்பான வழிகளில் வர்த்தகம் செய்தேன். பெண்களின் தொடர்பும் எனக்கிருந்தது. அதனால் தான் நான் முழுமையாக அழிந்தேன். எனது வாழ்க்கை முறை என்னை வறுமையில் தள்ளியது. அதனால் கேட்கக் கூடாதவர்களிடமெல்லாம் இரந்துண்டேன். பலரிடம் அடிவாங்கினேன். அதனால் தயவு செய்து நீ குடிக்காதே.

சூதாடாதே. பெண்களின் சகவாசத்தை விரும்பாதே. நீ நன்றாக இருந்தால் உன்னை கவரப் பெண்கள் சிலர் முனைவார்கள்'' என்று யோகநாதன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''அனுபவத்தைச் சொல்லியிருக்கிறார். கேட்டால் நல்லது'' என்றது லட்சுமி எலி.

**1044. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த**
**சொற்பிறக்கும் சோர்வு தரும்.**

''நவம், வறுமை நல்ல குடும்பத்தில் பிறந்தவனையும் தீயவழியில் நடக்கச் செய்யும். நான் சில சமயங்களில் சிறு சிறு திருட்டுக்கள் செய்து அகப்பட்டு மதிப்பை இழந்துள்ளேன். ஒருமுறை நான் சிவகுருவின் தோட்டத்துள்ப் புகுந்து வைரவருக்கு நேர்த்தி வைத்த ஆட்டுக்கடாவை அவிழ்த்துக் கொண்டு வந்து அதை அடித்து பங்குகளாக்கி விற்று விட்டேன். என்னோடு சேர்ந்த சிவலிங்கத்தைப் பிடித்துச் சிவகுருவும் பிள்ளைகளும் அடிக்க அவன் எல்லாவற்றையும் சொல்லி விட்டான். சிவகுரு கதிரேசனின் மைத்துனன். அதனால் கதிரேசன் வந்து என்னை ஏசினார். நான் அவரை எதிர்த்துப் பேசிவிட்டேன். அதற்குக் காரணம் வறுமை தான். வறுமை எதையும் ஆராயாமல் செய்ய வைக்கும், சொல்ல வைக்கும். அதை நினைக்க இப்பவும் என் உடல் கூசுகிறது'' என்று யோகநாதன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''வறுமை ஏன் வருகிறது? வாழத் தெரியாமல் வாழ்ந்து விட்டு வறுமையென்றால் எப்படி ஏற்பது'' என்றது லட்சுமி எலி.

**1045. நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்**
**துன்பங்கள் சென்று படும்.**

''மகனே, மிகவும் அவதானமாகச் செயற்படு. அகலக்கால் வைக்காதே. பெரிதாகக் கடன் பட்டுத் தொழிலைச் செய்யாதே. சிறிய எறும்பு ஊரக் கல் குழியும் என்பார்கள். சிறிது சிறிதாகச் சேர்த்தாலும் பரவாயில்லை. கடன்படக் கூடாது. செல்வம் வந்து விட்டதே என்று தலைகால் புரியாது நடக்கக் கூடாது. ஏனென்றால் நான் ஒரு சிறு வியாபாரத்தைத் தொடங்கிப் பெரியவனானவன். தலைகாலை புரியாது நடக்கக் கூடாது. வாழ்ந்ததால் கெட்டழிந்தேன். இப்போ உனக்கு நண்பர்கள் அதிகரித்து விட்டனர். நண்பர்கள் நல்லவர்களானால் முன்னேறலாம். தீயவர்களானால் கெட்டுப்போக வேண்டி வரும். வறுமையில் ஒரு துன்பம் வந்தால் அதனுடன் பத்துத் துன்பம் சேர்ந்து வரும். நண்பர்கள் எதிரிகளாவர். நான் பட்ட அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். குறை நினைக்காதே'' என்று யோகநாதன் கூறியவர்'' என்றது குமரன் எலி.

''யோகநாதனுக்கு காசு வந்து சேர்ந்தவுடன் நண்பாக்ளும் வந்து சேர்ந்தனர். அவர்கள் மதுக்கடைகளுக்கும், சூதாட்ட விடுதிகளுக்கும் அழைத்துச் சென்றனர். பிறகெப்படி முன்னேறுவது'' என்றது லட்சுமி எலி.

**1046. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்**
**சொற்பொருள் சோர்வு படும்.**

''நான் வசதியுள்ளவனாக வாழ்ந்த போது நான் செய்வதைப் பாராட்டவும், நான் சொல்வதைப் புகழவும் ஒரு கூட்டம் இருந்தது. அவர்கள் உண்மையாகச் சொல்கிறார்கள் என்று தான் நான் நினைத்தேன். ஆனால் அவர்கள் என்னை மகிழ்வித்து என்மூலம் பல சலுகைகளைப் பெறவே அப்படி நடந்தனர். நான் ஏழையானதும் என்னை விட்டு விலகி விட்டனர். அத்துடன் பண்டிதர் வீரகத்தி கற்றவர். நல்லவர். ஆனால் வறியவர். அவர் நன்றாகக் கற்பித்தாலும் மாணவர்களும், பெற்றோரும் அவரை மதிப்பதில்லை.

இவற்றையெல்லாம் நீ அறிய வேண்டும் என்பதற்காகவே சொல்கிறேன்'' என்று யோகநாதன் நவராசாவுக்குச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''சனம் தேவைக்கேற்ற மாதிரி வாழக் கற்றுக் கொண்டு விட்டது. அதைக் கண்டு பிடிப்பவன் தான் வாழத் தெரிந்தவன்'' என்றது லட்சுமி எலி.

**1047. அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்**
**பிறன்போல நோக்கப் படும்.**

''நவம், வறுமை மனிதாபிமானத்தைக் கெடுத்து விடும். அதனால் வறுமைப்பட்டவன் எதையும் துணிந்து செய்வான். அறம்சாராத வறுமை தர்மத்தை நினைக்காது அதர்மமான வழியில் நடப்பவனைக் கண்டால் பெற்ற தாய் கூட அவனை அந்நியனாகத் தான் பார்ப்பாள். நாவேந்தனின் சகோதரர்கள் வசதியாக வாழ்கின்றனர். அவனது தாய் மூத்த மகனுடன் மிகவும் நல்ல வசதியாக இருக்கிறாள். ஆனால் நாவேந்தனை அவள் தன்னுடைய பிள்ளை என்று சொல்வதில்லை. அவனோடு கதைப்பதும் இல்லை. வறுமையை ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் தேடிக்கொள்கிறார்களே தவிர வறுமை ஒருவனைத் தானாக வந்து அடைவதில்லை. பெரும் தனவந்தனும் வாழத் தெரியாமல் வாழ்ந்து வறியவனாகிறான்'' என்று யோகநாதன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''நாவேந்தனின் தாய் இப்பவும் பதினாறு வயதுக் குமரி மாதிரித் திரிகிறாள். நாவேந்தன் அறுபது வயதுக்காரன் மாதிரித் திரிகிறான்'' என்றது லட்சுமி எலி.

**1048. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு.**

''வறுமைப்பட்டவன் நேற்றுக் கொலை செய்தது போல வந்து துன்புறுத்திய வறுமை இன்றும் வந்து துன்பத்தைத் தருமோ? என்று நாள்தோறும் கலங்குவான். முதல் நாள் அலைந்து திரிந்து அரைவயிறு உணவைப் பெற்றுண்பேன். இரவு முழுவதும் பசிக்கும். விடிந்ததும் ஏதாவது உணவு கிடைக்கமாட்டாதா என்று ஏங்குவேன். சில சமயம் கிடைக்கும். சில சமயம் ஏச்சுத்தான் கிடைக்கும், ''வசதியாக வாழும் போது சேமிக்காது கண்டபடி வாழ்ந்து விட்டு இப்போ எமக்குக் கரைச்சல் கொடுக்கிறாய்'' என ஏசாது யாரும் தரமாட்டார்கள்'' என்று யோகநாதன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''அவர்கள் சொல்வதிலும் நியாயமிருக்கு. வலது குறைந்தோர் நோயாளிகள் கேட்டால் கொடுப்பது புண்ணியம்'' என்றது லட்சுமி எலி.

**1049. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**
**யாதொன்றும் கண்பாடு அரிது**

''மகனே, பொருள் வந்த போது மிகமிக அவதானமாக வாழவேண்டும். வருமானத்திற்கேற்றவாறு செலவு செய்ய வேண்டும். தானதர்மத்தைக் கூட அளவாகச் செய்தல் வேண்டும். கடன் பட்டால் உரிய வேளையில் கடனைக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வட்டியையாவது கொடுத்தல் வேண்டும். நட்டமேற்படுமென்று கண்டால் அது ஏன் ஏற்பட்டது என்று ஆராய்ந்து உரிய முடிவை எடுத்தல் வேண்டும். இவற்றைச் செய்யாததால் தான் நான் வறுமையடைந்தேன். ஒருவன் நெருப்புக்குள்ளும் தூங்கலாம். ஆனால் வறுமை வந்து விட்டால் ஒரு நிமிடம் கூட நிம்மதியாகத் தூங்க முடியாது'' என்று யோகநாதன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

“உழைக்கச் சோம்பல்படுபவன் ஏழை. உழைத்ததைச் சரியாகச் செலவு செய்யாதவன் ஏழை. குடித்து வெறிப்பவன் ஏழை. இப்படி ஏழைகள் பல ரகம். பின் ஒவ்வொருவரும் காரணம் சொல்வார்கள்” என்றது லட்சுமி எலி.

**1050. துப்புரவு இல்லார் துவரத் துறவாமை**
**உப்பிற்கும் காடிக்கும் கூற்று**

“உண்ண எதுவும் இல்லாத நிலையிலும் என்னைப் போன்றவர்கள் வாழ்வைத் துறந்து சந்நியாசியாகலாம். அப்படிச் செய்ய மனம் விடாது. அதற்குக் காரணம் அடுத்தவர்களது உணவின் சுவை வாழ்வை வாழச் சொல்லும். நான் ஏதோ கனக்கப் படித்தவன் போல உபதேசம் செய்வதாக நினைப்பாய். இது எனது அனுபவம். ஏட்டுப் படிப்பை விட அனுபவம் ஏராளமானவற்றைக் கற்றுத் தரும். எனக்கு நேர்ந்த இந்தத் துயரநிலை உனக்கு ஏற்படக் கூடாது என்பதற்காகச் சொன்னேன்” என்று யோகநாதன் கூறிய பின் நவராசா சொன்னான், “இப்படியெல்லாம் நடக்குமென்று எனக்குத் தெரியாது. ஒரு பெரும் கற்றலைச் சிறிது நேரத்தில் கற்று விட்டேன். உங்களது கதையின் பின் நான் பலவற்றை யோசித்துத் தீர்மானிக்கவுள்ளேன். மிகமிக நன்றி” என்று நவராசா சொன்னான்” என்றது குமரன் எலி.

“நவராசாவோடு திரியுற சிலரைப் பற்றி யோகநாதன் அறிந்ததால் தான் சொல்லியிருக்கிறார்” என்றது லட்சுமி எலி.

## இரவு– 106

**1051. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்**
**அவர்பழி தம்பழி அன்று.**

“செல்வராசா நடக்க மிகவும் சிரமப்பட்டான். அவன் ஒரு போராளி. வலது கால் முழங்காலுக்கு மேல் துண்டிக்கப்பட்டிருந்தது. வலது கையில் பெருங்காயம் பட்டு மாறினாலும் அது இயங்க மறுத்தது. அவன் வீதிக்கு வந்த போது நகுலன் மோட்டார் வண்டியில் வந்தான். செல்வராசாவைக் கண்டதும் வண்டியால் இறங்கி வந்து கேட்டான்,“இப்ப நீ எங்கை போறாய்? நீ எனது இரத்த உறவினன். உயிர் நண்பன். உன்னால் நடக்க முடியாது. அதனால் எங்கு போவதாக இருந்தாலும் எனக்கு அறிவி என்று சொல்லிக் கான்போன் வாங்கித் தந்தனான். தகுதி தராதரம் பார்க்கிறாயா…?” என்று கேட்டான். செல்வராசா எதுவும் பேசாது சில கணங்கள் நின்றான் பின் சொன்னான்,“இன்றைக்கு ஊசி போட வேண்டும் அதற்கு இரண்டாயிரம் ரூபா வேண்டும்” என்று செல்வராசா சொல்லும் போது நகுலன் குறுக்கிட்டுச் சொன்னான்,“நீ மானஸ்தன். உரிமைக்காக உன்னை அர்ப்பணித்துப் போராடியவன். அதை விடு என்னிடம் எதையும் கேட்கலாம் தானே? கேட்கத் தக்கவர்கள் யார் என்று அறிந்த பின்பே வறியவன் பிச்சை கேட்க வேண்டும். செல்வந்தர் வறியவர்களுக்குப் பிச்சை கொடுக்க மறுப்பார்களானால் அது அவர்களுக்குப் பழியேயன்றி கேட்பவர்களுக்கு இல்லை” என்பாய். அதை மறந்து விட்டாயா?” என்று நகுலன் கேட்டவன்” என்றது குமரன் எலி.

“போராட்டம் நடைபெற்ற போது தலையில் தூக்கி வைத்து ஆடினவர்கள். இப்போ தலைகீழாக மாறிவிட்டார்கள். பாவம் போராளிகள். இவையை நம்பி எதுவும் செய்ய முடியாது” என்றது லட்சுமி எலி.

**1052. இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை**
**துன்பம் உறாஅ வரின்**

‘‘நகுலா வறியவன் கேட்டவை துன்பமில்லாது கிடைக்குமானால் பிச்சை எடுப்பது கூட இன்பமானது என்பார்கள். அதற்காக எனது எல்லாத் தேவைகளையும் உன்னிடம் கேட்க ஒரு மாதிரியாக உள்ளது. அதனால் எனது சகோதரனிடம் செல்கிறேன். அவன் மனைவிக்குத் தெரியாமல் தருவான். எப்படி இருந்த நாம் இப்படி மாறி விட்டோம்’’ என்று செல்வராசா அழுதான்’’ என்றது குமரன் எலி.

‘‘இயக்கத்தைக் கண்டால் வரபேற்பென்ன? மரியாதையென்ன? தேவை என்ன என்று கேட்டு செய்தவை. இப்ப கண்டால் ஒளிக்கினை. செல்வராசா இயக்கத்தில் பெரிய பதவியில் இருந்தவன். அதை நினைத்துக் கவலைப்படுகிறான்’’ என்றது லட்சுமி எலி.

**1053. கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்னின்று**
**இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து.**

‘‘மறைக்காமல் கொடுக்கும் உள்ளமும் கடமை உணர்ச்சியும் உள்ளவர்களிடம் இரப்பது மகிழ்வான விடயம் என்று நகுலன் கோபித்த போது செல்வராசா சொன்னான்,‘‘என்னைப் போல ஆயிரக்கணக்கான போராளிகள் உணவுக்குக் கஷ்டப்படுகிறார்கள். அவர்களைக் கவனிக்க யாரும் இல்லை. என்னை நீ கவனிக்கும் போது அந்த எண்ணம் தான் மனதில் எழுகிறது. எம்மை வரவேற்று உபசரித்தவர்கள் இன்று விளக்குமாத்தாலும், செருப்பாலும் அடிக்கிறார்கள்’’ என்று செல்வராசா சொன்னவன்’’ என்றது குமரன் எலி.

‘‘முன்பு தேவைகள் பல இருந்தன. பாஸ் எடுக்கவேணும் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேணும். அதற்காகத் தான் நடித்தவை’’ என்றது லட்சுமி எலி.

**1054. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்**
**கனவிலும் தேற்றாதார் மாட்டு**

‘‘நீ, கதிரேசன், திருநாவுக்கரசு போன்றோர் உள்ளதை மறைத்துக் கூறும் தன்மையைக் கனவிலும் எண்ணாதவர்கள். அவர்களிடம் கேட்பது பிறருக்கு நான் கொடுப்பதைப் போன்ற சிறப்புடையது. கதிரேசனுக்கு இன்றைக்கு ஊசி போட இரண்டாயிரம் ரூபா தேவையென்று தெரியும். அவர் நேற்றே கொண்டு வந்து தந்து விட்டார். என்னுடன் களத்தில் நின்று போராடிய அம்பிகா என்ற போராளி வந்து சாப்பிடக் கூட வழியில்லை என்று அழுதாள். அதனால் அதைக் கொடுத்து விட்டேன்’’ என்று செல்வராசா சொன்னான்’’ என்றது குமரன் எலி.

‘‘பாவம். எத்தனை பேர் மனிதரை நம்பிக் கஷ்டப்படுதுகள். பாம்பின் கால் பாம்பிற்குத் தான் தெரியும்’’ என்றது லட்சுமி எலி.

**1055. கரப்பிலார் வையகத்து உண்மையான் கண்ணின்று**
**இரப்பவர் மேற்கொள் வது.**

‘‘கல் நெஞ்சு படைத்த பலர் இருக்கிறார்கள். நான் வணிகத்துறைக்குப் பொறுப்பாக இருந்த போது என்னை வந்து வணங்காத குறையாக நடந்து கொண்டவர்கள் பலர். எனக்குச் சுவையான உணவுகள் தந்தவர்கள் பலர். உற்சாக மூட்டியவர்கள் பலர். என்னை வந்து சந்திக்காதவர்களும் பலர். அவர்கள் எனது விரோதிகள் என்று நினைத்தேன். இப்போ அவர்கள் தான் உதவி செய்கின்றனர். அப்படியானவர்கள் இருப்பதால் தான் யாசிப்பவர்கள் தொடர்ந்து யாசிக்கிறார்கள். கொடுப்பவன் தான் கொடுப்பான்’’ என்று செல்வராசா சொன்னான்’’ என்றது குமரன் எலி.

“அப்ப இங்கு இராணுவம் இல்லை. நடிப்பவர்கள் சுதந்திரமாக நடித்தனர். அவர்களது நடிப்பை இயக்கம் உண்மை என்று நம்பியதால் தான் இந்த நிலை வந்தது” என்றது லட்சுமி எலி.

**1056. கரப்புஇடும்பை இல்லாரைக் காணின் நிரப்புஇடும்பை**
**எல்லாம் ஒருங்கு கெடும்.**

“நீ, கதிரேசன், திருநாவுக்கரசு போன்றோரைக் கண்டால் எனது துன்பம் நீங்கி விடும். என்ன தேவையென்று வற்புறுத்திக் கேட்டுக் கொடுப்பார்கள். கேட்பதை விட அதிகமாகத் தருவார்கள். நான் நடராசாவின் நடத்தையில் சந்தேகப்பட்டு அவரைக் கடத்திச் சென்று விசாரித்தேன். அவர் அமைதியாகத் தனது நிலையைச் சொன்னார். நான் நம்பவில்லை. அதற்குக் காரணம் உருத்திரகுமாரனும் வேறு சிலரும் அவரைப் பற்றி அளவுக்கதிகமாகப் புகாரிட்டதால் அவரைத் தாக்கியும் விட்டேன். இப்போ எல்லோருடைய சுபாபமும் தெரிகிறது. நடராசா மிகமிக நல்லவர். என்னில் கோபம் கொள்ளாது, “எய்தவன் இருக்க அம்மை நோகக் கூடாது” என்று சொல்லி உதவி செய்து வருகிறார்” என்று செல்வராசா சொன்னவன்” என்றது குமரன் எலி.

“இயக்கத்திற்குப் பின்னால் திரிந்த அத்தனை பேரும் சுயநலத்துடன் தான் திரிந்தனர். ஒரு சிலராவது விசுவாசமாய் இருந்திருந்தால் போராளிகள் இவ்வளவு கஷ்டப்படமாட்டார்கள்” என்றது லட்சுமி எலி.

**1057. இகழ்ந்துஎள்ளாது ஈவாரைக் காணின மகிழந்துள்ளம்**
**உள்ளுள் உவப்பது உடைத்து.**

“ஒரு தேவைக்கு இவ்வளவு பொருள் தேவை என்று கேட்கும் போது அதைக் குறைத்தும், அதை இழிவாகக் கருதாமலும் கொடுப்பவர்களைக் கண்டால் இரப்பவரின் உள்ளம் பெரு மகிழ்ச்சியடையும். எனக்கு நடராசாவை நினைத்தாலே உடல் புல்லரிக்கும். அவர் தனது வீட்டில் நல்ல உணவு தயாரித்தால் அதை எனக்குக் கொண்டு வந்து தராமல் தான் சாப்பிடமாட்டார்” என்று சொல்லும் போது செல்வராசாவின் கண்கள் கலங்கியதை நான் கண்டேன்” என்றது குமரன் எலி.

“இவர்கள் மனிதர்களல்ல தேவர்கள். உதவிகள் பெற்று விட்டு இன்று இழிவாகக் கதைப்பவர்கள் அரக்கர்கள்” என்றது லட்சுமி எலி.

**1058. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண் மாஞாலம்**
**மரப்பாவை சென்றுவந் தற்று.**

“இரப்பவர்கள் இல்லாவிட்டால் எல்லோரும் தனவந்தர்களாக இருப்பார்கள். அப்படியிருந்தால் மக்களின் நடைமுறை மரத்தினால் செய்த பொம்மையைக் கயிற்றினால் இயக்குவது போன்று இருக்கும்” என்று நகுலன் சொல்ல செல்வராசா சொன்னான்,“அப்படி ஒரு நிலை எந்த நாட்டிலும் வராது. அது கற்பனை உலகம்” என்றவன்” என்றது குமரன் எலி.

“உண்மை தான். எமக்கு உணவு கூடக் கிடைத்தால் உண்டு களிக்காது வீசி விளையாடுவோம்” என்றது லட்சுமி எலி.

**1059. ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்**
**மேவார் இலாஅக் கடை.**

“புகழுக்காகவும், மறுஉலக இன்பத்திற்காகவும் தான் பெரும்பாலானவர்கள் கொடுக்கிறார்கள். சிலர் தமது காரியத்தைச் செயலாக்கக் கொடுக்கிறார்கள். புகழ் தர்மம் கருதிக் கொடுப்பவர்களும் சுயநலத்திற்காகத் தான் கொடுக்கின்றனர். தம்மிடமுள்ள பொருளைக் கொடுப்பது வசதியான வாழ்வை மறுமையில் அனுபவிக்க விரும்பியே கொடுக்கின்றனர். அதனால் வறியவர்கள் இல்லாவிட்டால் எவருக்கும் புகழும் கிடையாது. மறுமையில் பேரின்ப வாழ்வும் கிடையாது” என்று நகுலன் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“அது தானே பார்த்தேன். சிலர் விழுந்து விழுந்து கொடுப்பதை. மனிதன் புகழுக்காக எதையும் செய்வான்” என்றது லட்சுமி எலி.

**1060. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை**
**தானேயும் சாலும் கரி.**

“நான் படும் துன்பம் போதும். சில சமயங்களில் இரப்பவர்கள் கொடுப்பவர்கள் கொடுக்கத் தாமதமானால் கோபம் வரும். இப்படி என்னைப் படைத்த கடவுளின் மீது கோபம் வரும். பெற்றோரின் சொல்லைக் கேளாமல் இயக்கத்திற்குச் சென்றது பற்றிக் கோபம் வரும். எம்மை ஆதாரித்த மக்கள் மீது கோபம் வரும். கோபப்பட்டு என்ன பிரயோசனம். பட்டினி தான் இருக்க வேண்டும் என்ற எண்ணமும் வரும்” என்று செல்வராசா சொன்னவன்” என்றது குமரன் எலி.

“பெரிய இடத்தில் இருந்து நாட்டாண்மை செய்தவையைக் கவனிப்பாரில்லை. அதை நினைத்தால் கோபம் வரும் தான்” என்றது லட்சுமி எலி.

## இரவு அச்சம் - 107

**1061. கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்**
**இரவாமை கோடி யுறும்.**

“செல்வராசாவிடம் அம்பிகா வந்து கேட்டாள்,“எப்படி சுகமாக இருக்கிறாயா? சாப்பாட்டிற்கு என்ன செய்கிறாய். சமைத்து உண்கிறாயா? இல்லைத் தண்டி உண்கிறாயா..? நீ இயக்கத்தில் பெரியவனாக இருந்தவன். ரோசம் விடாது. எங்களது நிலைமை இப்படியாகி விட்டது. நீ வந்து என்னுடன் இரு நான் சமைப்பதில் உண்” என்றாள். அதைக் கேட்ட செல்வராசா சொன்னான்,“அதை விட்டு விட்டு நீ வந்த காரணத்தைச் சொல். ஏதாவது காசு தேவையா?” அதற்கு அம்பிகா சொன்னாள், “கேட்பவர்களுக்கு இருப்பதை மறைக்காமல் கொடுக்கும் கண்ணுக்கு ஒப்பானவரிடத்தில் கூட இரக்காமல் இருப்பது கோடி மடங்கு நல்லதாகும். நீயே இரப்பவன். நான் உன்னிடம் இரக்கலாமா?” என்று அம்பிகா கேட்டவள்” என்றது குமரன் எலி.

“அம்பிகாவின் இனத்தவர்கள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் அனுப்புகிறார்களோ தெரியாது. வெளிநாட்டால் வருவோர் அது தாறன் இது தாறன் என்று சொல்வார்களே தவிரக் கொடுக்கமாட்டார்கள்” என்றது லட்சுமி எலி.

**1062. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்.**

“எவ்வளவு கொடுமை. கால், கைகள் உறுதியாக இருந்தால் நாம் ஏன் அடுத்தவரிடம் கையேந்த வேண்டும். எனக்கு வலது கால் இல்லை. கைகள் செயற்படாது. என்னை இப்படியாகப் படைத்தவன் பாவி.

அவனும் படைத்த குற்றத்திற்காக எம்மைப் போல அலைந்து திரிந்து கெட்டுப்போகட்டும்'' என்று விரத்தியுடன் செல்வராசா சொல்ல அம்பிகா சொன்னாள், ''வலது குறைந்தவர்களாக உன்னைப் படைத்திருந்தால் நீ சொல்வது சரி. நல்ல திடகாத்திரமான மனிதனாக உன்னைப் படைத்தவன் படைத்தான். நீ தான் அதீத நம்பிக்கையுடன் மக்கள் எம்மைக் காப்பாற்றுவார்கள் என்று போராடி அவர்களை இழந்து விட்டுப் படைத்தவனைப் பரிகசிக்கிறாய்'' என்று சொன்னவள்'' என்றது லட்சுமி எலி.

''தங்கடை இயலாமையைப் பிறர் மீதும், கடவுள் மீதும் மக்கள் சுமத்திப் பழகி விட்டார்கள்'' என்றது லட்சுமி எலி.

**1063. இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்**
**வன்மையின் வன்பாட்டது இல்.**

''செல்வராசா, வறுமையைப் போக்கப் பிச்சை எடுப்பது தான் ஒரே வழியென்று உடலில் உரமில்லாதவர்கள் சொல்லலாம். அதில் ஓரளவு நியாயம் இருக்கிறது. ஆனால் மனவலிமை உள்ளவர்கள் உழைப்பை மதிக்காமல் இருப்பதைப் போன்ற கொடுமை வேறு எதுவும் இல்லை. நான் ஒரு தையல் இயந்திரத்தை வாங்கித் தைக்கின்றேன். புனர் வாழ்வின் போது பெற்ற பயிற்சி ஓரளவு கை கொடுக்கிறது. எனக்கு வரும் உடைகளை என்னால் தனித்துத் தைக்க முடியவில்லை. இன்னொருவரைத் தேடி வேண்டியுள்ளது. நீ வந்தாயானால் உதவியாக இருக்கும். கைகளுக்குப் பயிற்சி கொடுத்தால் அவை மெல்ல மெல்ல இயங்கும்'' என்று அம்பிகா சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''அரசாங்கத்தை எதிர்த்துப் போராடினவை இப்ப உதவி கேட்கினை. வெளிநாட்டில் உள்ளவர்களும், பொறுப்பானவர்களும் அரசை உதவி செய்யச் சொல்வீனையே தவிரத் தாம் உதவுவதில்லை'' என்றது லட்சுமி எலி.

**1064. இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்**
**காலும் இரவெல்லாச் சால்பு.**

''வாழ வழியில்லாத போதும் கூடப்பிச்சை எடுக்க விரும்பாத தன்மை, இந்த உலகத்திலுள்ள இடம் முழுவதும் சேர்ந்தாலும் கொள்ளாத பெருமை உடையது என்று பெரியவர்கள் சொல்வார்கள். நான் யாரிடமாவது இரக்கப்போனால் என்னை உற்றுப் பார்க்கின்றனர். அவர்களது பார்வை மாறுபாடு அடைகிறது. கதை பலஅ ர்த்தங்களைக் கொண்டதாக உள்ளது. அதனால் தான் நான் ஒரு தையல் இயந்திரம் வாங்கித் தொழில் செய்கிறேன். இப்போ பிரச்சினைகள் எதுவும் இல்லை. மூன்று நேரமும் வயிறாறச் சாப்பிட முடிகிறது'' என்று அம்பிகா கூறினவள்'' என்றது குமரன் எலி.

''முந்திப் புனிதமானவர்களாக நினைத்தவை இப்ப போகப் பொருளாக நினைக்கினை'' என்றது லட்சுமி எலி.

**1065. தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது**
**உண்ணலின் ஊங்கினியது இல்.**

''யாரிடமும் எதையும் கேட்க முடியாது. அவர்கள் எம்மை ஒரு தூசாகக் கூட இப்போ மதிப்பதில்லை. செல்வாக்குள்ளவர்களுக்குச் சார்பாகக் கோசமிடுவதும், தன்நலத்தைப் பேணுவதும் தான் எல்லோரினதும் நிலை. தமது காரியங்களைப் பார்க்க வேண்டுமானால் இயக்கத்தைக் கையிலெடுப்பினை. அதன் மூலம் எவ்வளவு சம்பாதிக்கலாமென்று நினைப்பினையே தவிர உதவிகள் செய்யார்கள். தனது சொந்த உழைப்பால்

கிடைத்த தெளிந்த நீா் போன்ற கூழே ஆயினும் அதை உண்பது மிகமிக இன்பமானது. நிம்மதியானது'' என்று அம்பிகா கூறினாள்'' என்றது குமரன் எலி.

''உயிரைக் கொடுப்பவன் என்றவை இப்ப உயிரை எடுக்கினை. தன்னையும், தன்ரை குடும்பத்தையும் கவனிக்கினையே தவிர நாட்டைப் பற்றி நினைப்பவர் யார்?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**1066. ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு**
**இரவின் இளிவந்தது இல்.**

''எமக்கு எதைச் சொல்லித் தந்தார்கள் என்று எண்ணிப்பார் செல்வராசா. யாருக்கும் கடமைப்படக் கூடாது, யாரையும் நம்பக் கூடாது, யாரிடமும் உதவி கோரக் கூடாது. இயலாமை என்று ஒன்று வந்தால் உயிர் துறக்க வேண்டுமே தவிர யாருக்கும் கடமைப்படக் கூடாது. இதைத் தானே பழம் தமிழ் நூல்கள் கூறுகின்றன. ஒரு பசு மிகுந்த தாகத்தால் கதறி அழுதாலும் அதற்கு நீரைக் கூடப் பிச்சை எடுத்து வைக்கக் கூடாது. அது நாவிற்கு இழுக்கு என்று கூறுகிறது. அப்படியிருக்க நாம் எத்தனை காலத்திற்கு இரப்பது. பேசாமல் என்னுடன் வா. சேர்ந்து தொழில் செய்வோம்'' என்று அம்பிகா கூறியவள்'' என்றது குமரன் எலி.

''உண்மை தான். தாயும், பிள்ளையுமென்றாலும் வாயும் வயிறும் வேறு என்று மனிதர்கள் கூறுவார்கள்'' என்றது லட்சுமி எலி.

**1067. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்**
**கரப்பார் இரவன்மின் என்று.**

''இருப்பதை மறைத்து வைத்துக் கொண்டு இல்லை என்று தான் அனேகமானவர்கள் கூறுகிறார்கள். அப்படியானவர்களிடம் எத்தனை நாட்களுக்குக் கையேந்துவது. பலர் தருவதாகச் சொல்வார்கள் ஆனால் தரமாட்டார்கள். சிலர் ஏமாற்றுவார்கள். சிலர் அலைக்கழிப்பார்கள். சிலரைப் பத்து முறை கேட்டால் தான் கிடைக்கும். அதனால் அவர்களைக் கேட்பதை விடுத்துத் தொழில் செய்யப் பார்'' என்று அம்பிகா சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''தொழில் செய்தால் மதிப்பு மரியாதை கூடும். பணம் சேர்த்து விட்டால் எல்லாம் மறைந்து விடும். இது மனித இயல்பு'' என்றது லட்சுமி எலி.

**1068. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்**
**பார்தாக்கப் பக்கு விடும்.**

''இரத்தல் என்ற பாதுகாப்பு இல்லாத மாக்கலம் வைத்து கொண்டு இல்லையென்று இரக்கமின்றின் கூறுவதாகிய பாறை தாக்கினால் உடைந்து விடும். வெளிநாட்டில் இருந்து வந்த எனது உறவினா் ஒருவா் எனக்கு ஐந்து இலட்ச ரூபா அனுப்புவதாகவும், அதை வங்கியில் நிரந்தர வைப்பில் இட்டு விட்டு மாதா மாதம் அதன் வட்டிப் பணத்தை எடுக்குமாறு கூறிச் சென்றாா். ஒரு வருடம் கழித்துப் பணம் அனுப்பவில்லை. அவா் அனுப்புவாா் என்று நான் கட்டிய மனக்கோட்டை உடைந்து சிதறி விட்டது. அதை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அதனால் பிறரை நம்புவதை விட நம்மை நாமே நம்பினால் ஏமாற்றமிராது. கவலையும் இராது'' என்று அம்பிகா கூறினாள்'' என்றது குமரன் எலி.

''இந்தப் பாடசாலை அதிபரும் வெளிநாட்டால் வந்த பழைய மாணவனை விளையாட்டு மைதான விடயத்தில் நம்பி மோசம் போனவர்'' என்றது லட்சுமி எலி.

**1069. இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள**
**உள்ளதூஉம் இன்றிக் கெடும்.**

“செல்வா, யாசிக்கும் கொடுமையை எண்ணிப் பார்த்தால் மனம் கலங்கித் தவிக்கும். அது போல வைத்திருப்பவர்கள் தரமறுக்கும் கொடுமையை நினைத்தால் அது கலங்குவதை நிறுத்தி விடும். பலர் தம்மிடமுள்ளவற்றைத் தருவோம் என்கிறார்கள். ஆனால் தரார். சிலர் எமக்காகப் பணம் சேர்ப்பார்கள். அதைத் தமது வங்கிக் கணக்கில் இருப்பில் வைப்பர். இவற்றையெல்லாம் எண்ணுவதை விட்டு விட்டு எமது உழைப்பை நம்பி வாழ்வோம்” என்று அம்பிகா கூறினாள்” என்றது குமரன் எலி.

“மனிதர்கள் வாக்குறுதி கொடுப்பதிலும் ஏமாற்றுவதிலும் பின் நிற்பதில்லை. அகப்பட்டால் வெக்கம் ரோசமும் இல்லை” என்றது லட்சுமி எலி.

**1070. கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்**
**சொல்லாடப் போஒம் உயிர்.**

“ஒருவனிடம் இரவலாகக் கூட ஒருபொருளைக் கேட்பது வெட்கம். அப்படி இருக்க இரப்பது எப்படி? அவர்கள் எம்மைக் காணும் போதே முகத்தில் சில மாற்றங்கள் உண்டாவது போலத் தெரிகிறது. அப்படியாக நிலையில் கேட்டாலும் தராதவர்களைக் கேட்க எப்படி மனம் வரும். கேட்கும் போது எனது உயிர் போய்விடும். வைத்துக் கொண்டு இல்லையென்று சொல்பவனின் உயிர் எங்கே போய் ஒளித்துக் கொள்கிறதோ. இதை விடக் கண்டதும் முகம் மலர்ந்து பெருந்தொகை தருகிறேன் என்று கூறிவிட்டு மறைந்து செல்பவனின் மனம் எப்படி மகிழ்கிறது” என்று அம்பிகா கேட்டவள்” என்றது குமரன் எலி.

“உதெல்லாம் ஏமாற்றுபவர்களுக்குப் பழக்கம். கேட்பவர்களுக்கும் பழக்கம். இயக்கத்தில் இருந்தவை நம்பியதாலை தான் கஷ்டம்” என்றது லட்சுமி எலி.

## கயமை– 108

**1071. மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பார் யாம்கண்டது இல்.**

“நீ சொல்வதெல்லாம் சரி தான். என்னால் முடியவில்லை. முயன்று பார்க்கிறேன்” என்று செல்வராசா கூறிய போது அம்பிகா குறுக்கிட்டுச் சொன்னாள்,“உன்னைப் போலத் தான் நானும் நினைத்தேன். தோற்றத்தில் பார்ப்பதற்கு நல்லவர்களும், கயவர்களும் ஒரே மாதிரியாகத் தான் இருப்பார்கள். அவர்களைப் போல ஒத்திருப்பவை வேறு எதுவும் இல்லை. அதிகமானோர் கயவர்கள் தான். அதை நாம் உணரவில்லை. உதவி செய்வோம், உயிரைக் கொடுப்போம் என்றவர்கள் பண ஆசை கொண்டும், பதவி ஆசை கொண்டும் எம்மைத் துக்பப்படுத்துகின்றனர். அதனால் எமது வாழ்வை நாமே பார்த்துக் கொள்வோம்” என்று அம்பிகா சொன்னவள்” என்றது குமரன் எலி.

“அது தான் நல்லது. தங்கடை தேவைக்காக இப்பவும் இயக்கத்தைப் பயன்படுத்துவோர் தான் அதிகம். அவர்களால் இயக்கத்தைச் சொல்லாவிட்டால் வாழ முடியாது” என்றது லட்சுமி எலி.

**1072. நன்றறி வாரின் கயவர் திருவுடையர்**
**நெஞ்சத்து அவலம் இலர்.**

“நன்மை தீமைகளை அறிந்த கற்றவர்களை விட, அவற்றைப் பற்றிக் கவலை கொள்ளாத கயவர்கள் ஒரு வகையில் நல்வர்கள் என்பார்கள். அது உண்மை. கற்றவர்கள் தமது குள்ள அறிவைப் பயன்படுத்திச்

சந்தர்ப்பத்திற்கேற்ற மாதிரி தமது வாழ்வை மாற்றி என்றும் சுயநலத்துடன் மகிழ்வாக வாழ்கிறார்கள். கற்ற, கற்காத கயவர்கள் தாம் தம்பாட்டில் செயற்பட்டாலும் அவர்களால் பெரும் பாதிப்புகள் ஏற்படுவதில்லை. கயவர்களை நம்பி நாம் எமது எதிர்காலத்தைத் தொலைத்து விட்டோம். அதை இனியும் அனுமதிக்கக் கூடாது'' என்று அம்பிகா சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''உது உப்பவே நடக்குது. சங்க காலப் பாடல்களைப் படித்தால் எல்லாம் விளங்கும்'' என்றது லட்சுமி எலி.

**1073. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்**
**மேவன செய்தொழுக லான்.**

''வள்ளுவன் கயவரைப் பற்றி அருமையாகச் சொல்லியுள்ளார். கயவர்களும் தேவர்களைப் போலத் தாம் விரும்புகின்றவற்றையெல்லாம் மனமகிழ்வுடன் செய்து, அதற்கான விளைவுகளை எண்ணாது எல்லோருடனும் கூடி வாழ்வதாக நடித்துத் தமது கருமங்களை நல்ல படி முடிப்பர் என்று சொல்லியிருக்கிறார். அப்படியானவர்களைத் தான் நாம் முன்பும் சந்தித்தோம். விபரமறியாததால் அவர்களை நம்பி ஏமாந்தோம். இப்போ அப்படியல்ல ஒவ்வொருவரைப் பற்றியும் முழுமையாக அறிந்துள்ளோம். அறிந்த பின் அவர்களின் உதவிகளை நாடுவது மடைத்தனமானது'' என்று அம்பிகா சொன்னாள்'' என்றது குமரன் எலி.

''எல்லாம் அனுபவம் தான். இனிக் கவலைப்பட்டு என்ன பயன். கஷ்டப்பட்டு வாழவேண்டியது தான்'' என்றது லட்சுமி எலி.

**1074. அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்**
**மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்**

''இழிந்த மனம் கொண்ட தீயவர்கள், தங்களை விட இழிவாக வாழ்பவரைக் கண்டால் தாம் அவர்களை விட உயர்ந்தவர்கள் என்று எண்ணிப் பெருமைப்படுவார்கள்'' என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். எம்மைச் சந்தித்தவர்கள் எல்லாம் இழிந்த மனமுடையவர்கள் தான். மற்றவர்களைக் காட்டிக் கொடுத்து தமது நலத்தைப் பாதுகாத்தவர்கள். அவர்கள் எப்படி எமது நிலையை உணரமுடியும்?'' என்று அம்பிகா கேட்டவள்'' என்றது குமரன் எலி.

''அப்போ எல்லோரும் உயிரைக் கொடுத்து உதவி செய்வது போல நடித்தார்கள். இப்போ உதவி செய்வதாக நடிக்கிறார்கள். உணர வேண்டியோர் சுடலை ஞானம் வந்த பின்பு தான் உணர்கிறார்கள். பாவம்'' என்றது லட்சுமி எலி.

**1075. அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்**
**அவாவுண்டேல் உண்டாம் சிறிது.**

''கீழ் மக்கள் ஒழுங்காக வாழ்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் பயமே ஆகும். அவர்கள் உண்மையாக ஒழுக்கமாக இருக்கிறார்களே யானால் அவர்கள் விரும்பும் பொருட்கள் கிடைப்பதே காரணமாகும்'' என்று ஒரு பெரியார் சொல்லியுள்ளார். இது மறுக்க முடியாத உண்மை. ஏனென்றால் எமது காலத்தில் பயம் காரணமாகவே எல்லோரும் ஒழுங்கானவர்கள் போல நடித்தார்கள். இப்போ அவர்களுக்கு வேண்டியவையெல்லாம் யாரோ ஒருவரால் கொடுக்கப்படுவதாலும், தமது தேவைக்காக மாறிப் பெறப்படுவதாலும் ஒழுக்கமாக இருக்கிறார்களே தவிர உண்மையான சுயரூபம் அதுவல்ல'' என்று அம்பிகா சொன்னாள்'' என்றது குமரன் எலி.

“அது சரி தான். பயம் காரணமாத் தான் சேர்ந்தவை. இப்ப பயமில்லை தாம் நினைத்தவாறு நடக்கினை’’ என்றது லட்சுமி எலி.

**1076. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட**
**மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.**

“கயவர்கள் தாம் கேட்ட இரகசியங்களை வலியச் சென்று பிறக்குச் சொல்லி வெளிப்படுத்துகின்ற காரணத்தினால் அவர்கள் அடிக்க ஒலி எழுப்பும் பறையைப் போன்றவர்களாவர். இவர்கள் தமது சுயநலத்திற்காகத் தாம் கேள்விப்பட்டவற்றிற்குக் கை கால் வைத்து மக்களுக்குப் பரப்புவார்கள். அதில் பல நன்மைகள் இருக்கும். தாம் செய்து விட்டு மற்றவர்களைச் சாட்டுவார்கள். தாம் செய்வது சரியென்பார்கள். தமக்கென ஒரு மக்கள் கூட்டத்தைச் சேர்த்து வைத்திருப்பார்கள். இவர்களை நம்பினால் நாம் படுகுழியில் தான் விழ வேண்டும். அதனால் என்னுடன் வந்து தொழிலைச் செய்’’ என்று அம்பிகா சொன்னவள்’’ என்றது குமரன் எலி.

“சரியான பயிற்சி பெற்றிருக்கிறாள். வாழத் தெரிந்தவள்’’ என்றது லட்சுமி எலி.

**1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்**
**கூன்கையர் அல்லாத வர்க்கு.**

“கயவர்கள் தமது கன்னத்தைக் குத்தி உடைக்கின்ற முரடர்களுக்கு உதவுவார்களே தவிர அன்போடு பேசுபவர்களுக்கு உதவமாட்டார்கள். அரசு தான் உவர்களுக்கு உதவ வேண்டும் என்பார்கள். மற்றப்படி எச்சில் கையால் கூட உதவ மாட்டார்கள். எவ்வளவு பேர் உதவி செய்வதாக அறிவித்தவர்கள். இவர்களெல்லாம் அந்த அறிவுப்புகள் மூலம் பெரும் அரசியல் ரீதியான அனுகூலங்களைப் பெற்றார்கள். பலராலும் பாராட்டுக்களை பெற்றார்கள். உண்டு விட்டு வந்து உண்ணா விரதம் இருப்பவர்களைப் போன்றவர்கள் இவர்கள். இவர்களை நம்பாது எம்மை நாமே நம்ப வேண்டும்’’ என்று அம்பிகா சொன்னவள்’’ என்றது குமரன் எலி.

“பட்டறிவு அவளை அப்படிப் பேசவைக்குது. உதை யார் கேட்கப் போகிறார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்.**

“நீ எதற்கெடுத்தாலும் குறை கூறிக் கொண்டிருக்கிறாய். நல்லவர்கள் பலர் வாழ்கிறார்கள். அவர்களில் சிலர் உதவி செய்வது தாம் என்று வெளியே சொல்லக் கூட விரும்புவதில்லை. கீழ் மக்கள் ஒருபோதும் உதவி செய்யமாட்டார்கள். கரும்பிலிருந்து சாற்றைப் பிழிவது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் அவர்களிடமிருந்து பயனைப் பெறுவது. முன்பும் இந்த நிலை தான். இப்போதும் இந்த நிலை தான்’’ என்று செல்வராசா சொன்னவன்’’ என்றது குமரன் எலி.

“இந்த நிலை மாறாது தான். அதற்காக ஒருவன் எத்தனை நாட்களுக்குத் தான் கொடுக்க முடியும். தொழிலைத் தேடுவது தான் சிறந்தது’’ என்றது லட்சுமி எலி.

**1079. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண வற்றாகுங் கீழ்.**

‘‘நீ எப்போதும் கீழ் மக்களைப் பற்றியே பேசுகிறாய். அவர்களுக்குப் பிறர் நல்ல உடைகளை அணிவதும் பிடிக்காது, நல்ல உணவு வகைகளை உண்பதும் பிடிக்காது. அவற்றைக் கண்டால் பொறாமைப்பட்டுப் பல்வேறு விதமான குற்றங்களைச் சுமத்துவார்கள். மேன் மக்களை நம்பியும் நாம் இருக்கக் கூடாது தான். சில சமயம் கால வேறுபாட்டால் அவர்கள் ஏழ்மைப்பட்டால் அவர்களது உதவியை எதிர்பார்க்க முடியாது. அதனால் நான் உன்னுடன் வருகிறேன்’’ என்று செல்வராசா சொன்னவன்’’ என்றது குமரன் எலி.

‘‘உலகில் வலது குறைந்த பலர் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர். இவையும் கஷ்டப்பட்டு முன்னேறி விட்டால் நல்லது’’ என்றது லட்சுமி எலி.

**1080. எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்**
**விற்றற்கு உரியர் விரைந்து.**

‘‘எனக்குத் தெரியும். கீழ் மக்கள் தமக்குத் துன்பம் நேர்கின்ற பொழுது தம்மை பிறருக்கு விற்று விடும் தன்மையுடையவர்கள். இருந்தும் உனக்கு உறைக்க வேண்டும் என்பதற்காகச் சொன்னேன். முன்பு உனக்கும் வேலை செய்ய விரும்பவில்லை. இயலாது என்று சொன்னாய். நான் இவ்வாறு சொன்ன பின்பு தானே ஒத்துக் கொண்டாய்’’ என்று அம்பிகா சொன்னவள்’’ என்றது குமரன் எலி.

‘‘ஆடுறமாட்டை ஆடிக்கறக்கனும், பாடுற மாட்டை பாடிக்கறக்கனும் என்று பெரியவர்கள் தெரியாமலா சொன்னார்கள்’’ என்றது லட்சுமி எலி.